## 5. பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

### பொது நோக்கு

உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கும், அபிவிருத்தியடைந்த உட்கட்டமைப்புப் பணிகள் முற் தேவையாக விளங்குகின்றன. இலங்கை உற்பத்திப் பொருட்களின் வெளிநாட்டுடனான போட்டித் தன்மையைப் பாதித்த காரணிகளில் ஒன்றாக உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமை நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கையின் விரைவான பொருளாதார விரிவாக்கத்துக்குத் தடையாகவும் காணப்பட்டது. அரசாங்கத்தினால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் தனியார்ததுறைப் பங்கேற்பு மற்றும் அரச தொழில் முயற்சிகளின் சீராக்கத்தை விரைவுபடுத்தல் என்பனவற்றின் மூலமாக உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தொலைத்தொடர்பு வலையமைப்பின் அபிவிருத்தி, வலு உருவாக்கம், துறைமுக அபிவிருத்தி, வான்வழிப் பணிகள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. எனினும் 1983இல் ஏற்பட்ட இன முரண்பாடும் இதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் அதிகரித்த இராணுவ மோதல் காரணமாக ஏற்பட்ட மூலவளக் கட்டுப்பாடும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அரசின் நேரடியான ஈடுபாட்டினை, 1997வரை பெருமளவிற்குக் கட்டுப்படுத்தியுள்ளது. மொ.உ.உ.இன் சதவீதமாக அரச முதலீடு 1985இன் 13 சதவீதத்திலிருந்து 1997இல் 5 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 5 சதவீதத்திற்குக் கூடிய வளர்ச்சி வீதத்தை அடைவதற்கு பொது முதலீட்டு விகிதம் போதியளவில் வளர்ச்சியடையாததால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைக்கும் நோக்கில் அரச முதலீட்டுச் செலவில் மேலும் ஓர் வீழ்ச்சி விவேகமானதன்று. இப்போக்கு 1998 இல் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், வருமானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அதிகரித்த பாதுகாப்புச் செலவுகளுக்கு மத்தியிலும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட மூலதனச் செலவுகளைப் பேணுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் அரச முதலீடு 1998இல் மொ.உ.உ.இன் 5.9 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன், 1997உடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பொன்றையும் எடுத்துக்காட்டியது. 1999இல் அரச மூலதனச் செலவில் மொ.உ.உ.இன் 7.5 சதவீதமளவிலான மேலும் ஓர் அதிகரிப்புக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இருந்தபோதும், உருக்குலைந்து போயுள்ள தற்போதைய உட்கட்டமைப்புக்களையும் எதிர்கால பொருளாதாரத் தேவைகளையும் கருத்திற்கொள்கையில் முதலீட்டின் தற்போதைய மட்டம் தேவைப்படும் மட்டத்தினைவிட இன்னமும் கீழேயே உள்ளன. இந்நிலையில் நன்கு வடிவக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பொறிமுறையொன்றுடன் தெளிவான நடுத்தரகால கொள்கை தனியார் துறையின் பங்கேற்பு மேலும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

1998இல் அரசும் தனியார்துறையும் முக்கிய உட்கட்டமைப்புத் துறைகளில் வரவேற்கத்தக்க முதலீடுகளை மேற்கொண்டன. உலகளாவிய பொருளாதார சூழலில் பாதகமான நிகழ்வுகள் காணப்பட்டபோதும் வலு, தொலைத் தொடர்பு, துறைமுகங்கள் போன்றவற்றில் தனியார்துறையினரின் ஈடுபாடு 1998இல் வெப்ப வலு உருவாக்க இயலளவு வரையறுக்கப்பட்ட ஏசியா பவர் நிறுவனத்தினால் ஐ.அ.டொலர் 62 மில்லியன் செலவில் 51 மெவா வலுப் பொறி செயற்படத் தொடங்கியதுடன் அதிகரிக்கப்பட்டது. இத்துடன் இவ்வாண்டில் 165 மெவா கொண்ட இணைந்த சுழற்சி வலுப் பொறி, 60 மெவா கொண்ட கப்பலிலே இணைக்கப்பட்ட மின் பொறி என்பன தொடர்பாக கட்டி, தொழிற்படுத்தி, மாற்றல் செய்தல் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெற்றுள்ளன. மேலும், வரையறுக்கப்பட்ட கூல் எயர் வென்சேர்ஸ் (தனியார்) நிறுவனம், யாழ் குடாநாட்டில் மின் வழங்கலை மீளப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கட்டி, தொழிற்படுத்தி, மாற்றல் செய்யும் அடிப்படையில் 10 மெவா கொண்ட டீசல் வலுப்பொறியை காங்கேசன்துறையில் நிறுவியது. இதற்கு மேலதிகமாக இலங்கை மின்சபை தனியார் துறையால் மேற்கொள்ளப்படும் சிறிய நீர் வலுச் செயற்றிட்டங்கள் பலவற்றின் நிருமாணத்துக்கான முன்மொழிவுளை மதிப்பிட்டு வருகின்றது. அதன் 40 சதவீதப் பங்குகளையும் முகாமைத்துவத்தையும் இவ்வாண்டில் எமிறேற்ஸ் எயர் லைன் நிறுவனத்துக்கு வழங்கியதன் மூலம் பெருமளவில் முன்னேற்றம் கண்டது. இலங்கை அரசுக்கும், வரையறுக்கப்பட்ட சௌத் ஏசியா கேற்வே

**அட்டவணை 5.1**
உட்கட்டமைப்பில் அரச முதலீடு

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமூகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | மொ.உ.உ. இன் % | ரூ. மில்லியன் | மொ.உ.உ. இன் % | ரூ. மில்லியன் | மொ.உ.உ. இன் % |
| 1985 | 18,950 | 11.7 | 1,826 | 1.1 | 20,776 | 12.8 |
| 1990 | 18,798 | 5.8 | 3,019 | 0.9 | 21,817 | 6.7 |
| 1991 | 26,022 | 7.0 | 2,964 | 0.8 | 28,986 | 7.8 |
| 1992 | 20,444 | 4.8 | 6,137 | 1.4 | 26,581 | 6.2 |
| 1993 | 29,600 | 5.9 | 6,075 | 1.2 | 35,675 | 7.1 |
| 1994 | 29,304 | 5.1 | 7,677 | 1.3 | 36,981 | 6.4 |
| 1995 | 36,106 | 5.4 | 9,854 | 1.5 | 45,960 | 6.9 |
| 1996 | 31,409 | 4.1 | 10,322 | 1.3 | 41,731 | 5.4 |
| 1997 | 32,481 | 4.3 | 11,552 | 1.3 | 44,033 | 4.9 |
| 1998 | 44,677 | 4.4 | 15,528 | 1.5 | 60,205 | 5.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ரேமினலுக்கும் இடையே ஐ.அ.டொலர் 240 மில்லியன் செலவில் கட்டி, தொழிற்படுத்தி, மாற்றல் செய்யும் அடிப்படையில் குயின் எலிசபெத் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதிகரித்த தனியார் துறை பங்கேற்பு மற்றும் யப்பானிய என்ரீரி நிறுவனத்தினால் ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் முகாமைத்துவம் மீளமைப்பு செய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக செயற்றிறனில் காணப்பட்ட மேம்பாடு என்பனவற்றுடன் தொலைத் தொடர்புத்துறை மேலும் முன்னேற்றம் கண்டது.

வலு, தொலைத் தொடர்பு, வீதிகள், துறைமுகங்கள் போன்ற முக்கிய துறைகளிலான அரச முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1998இல் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. வலு உருவாக்கம் கடத்தல் மற்றும் வழங்கலிலான முதலீடு 58 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்தது. புதிய வெப்ப பொறிகள் செயற்படத் தொடங்கியதுடன் வெப்பப் பொறிகளின் வலு உருவாக்க இயலளவு 4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன், 1998இல் தெரிவிக்கப்பட்ட கொள்கைக் கூற்றுக்களுடன் இசைந்து செல்லும் வகையில் நீர் வலுவில் தங்கியிருத்தல் 69 சதவீத மட்டத்திற்குக் குறைக்கப்பட்டது. கேள்வியின் வளர்ச்சியைத் தாண்டிச் செல்லக்கூடிய வகையில் தொலைத் தொடர்பூட்டல் துறை விரைவாக வளர்ச்சியடைந்ததுடன், தொலைபேசிகளுக்குக் காத்திருப்போரின் பட்டியல் 2002 அளவில் இல்லாதொழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் மற்றும் அரச துறையினரால் தொலைத் தொடர்பூட்டல் துறையிலான மொத்த முதலீடு ரூ. 16,162 மில்லியனாக விளங்கியது. இதன் விளைவால், செலூலர் மற்றும் இணைப்பற்ற தொலைபேசிகள் உட்பட தொலைபேசியொன்றுக்கான ஆட்களின் எண்ணிக்கை 1997இன் 41இலிருந்து 1998இல் 27இற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டைவிட 3 சதவீத அதிகரிப்புடனான ரூ.5,783 மில்லியன் கொண்ட முதலீட்டினால் 1998இல் தேசிய பாதை வலையமைப்பை பேணுவதற்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்களவில் வலுப்படுத்தப்பட்டன. மாத்தறை - கொழும்பு அதிவேகப்பாதை, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப் பாதை போன்ற பாரிய வீதி, உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் மீதான ஆரம்ப வேலையும் கொழும்பில் முக்கிய அதிவேகப் பாதைகளை இணைக்கும் வெளிச் சுற்றுவட்டப் பாதையும் 1998இல் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், மாகாண மற்றும் உள்ளூராட்சி வீதி வலையமைப்பைப் பேணுவதற்கான முயற்சிகள் இன்னமும் குறைந்த மட்டத்திலேயே உள்ளன. பயணிகள் போக்குவரத்துத் துறையின் தொழிற்பாடுகளின் அளவை முன்னேற்றுவதற்கு கவனம் செலுத்தப்படாமையால் அண்மைய எதிர்காலத்தில் போக்குவரத்துத் துறையின் மீளமைக்கும் செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை இவை இல்லாமல் செய்துவிடலாம். இப்பிராந்தியத்தில் புதிய துறைமுகங்கள் உருவாகி வருவதால் கொழும்புத் துறைமுகம் தெற்காசியாவின் முக்கிய மையமாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. கொழும்புத் துறைமுகம் அதன் தொழிற்பாட்டுச் செயல் திறனை மேம்படுத்தும் வேளையில் அதன் இயலளவை விரிவாக்குவதற்கான அவசரத் தேவையை இது உறுதியாக வலியுறுத்துகின்றது. வாணிப மற்றும் வர்த்தகத் துறையின் விரிவடைந்துவரும் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு அஞ்சல் பணிகளின் விரைந்த அபிவிருத்திக்கான தேவை தெளிவாக இனங்காணப் பட்டதுடன், அஞ்சல் திணைக்களத்தை மீளமைப்பதற்கான சட்டத்தின் வரைவு 1998இல் தயாரிக்கப்பட்டது.

சமூகத் துறை பெறுபேறுகளின் உறுதிப்பாட்டைப் பேணும் பொருட்டு, ஆய்விற்குரிய ஆண்டில் நலத்துறை மற்றும் கல்வித்துறையில் ஆர்வத்துடனான சீர்திருத்த செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கல்வியின் தரத்தை முன்னேற்றுவதற்கான தேவை நன்கு இனங்காணப்பட்டுள்ளதுடன், கல்விச் சீர்திருத்தங்கள் 1998இல் ஆரம்பமாகின. நலத்துறைச் சீர்திருத்தங்களின் கீழ், சமூகத்தில் புதிதாகத் தோற்றம்பெறும் நலத்துறை தேவைகளைக் கவனத்திற்கொண்டு பொருத்தமான நலக்கவனிப்பு மற்றும் வழங்கல் உபாயத்துடன் நலத்துறையின் முன்னுரிமைகள் மீள் வழிப்படுத்தப் பட்டுள்ளன. நலச் சீர்திருத்தங்கள் மீதான ஆரம்ப வேலைகள் 1998இல் ஆரம்பிக்கப்பட்டன. இச் சீர்திருத்தங்களின் வெற்றிக்கு போதிய மூலவளங்களின் ஒதுக்கும், நேரத்துக்கு அமுலாக்கலும் மிகத் தீர்க்கமானவை என்பதை இனங்காணல் முக்கியமான தாகும். இத்துடன் இத்துறைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் அதேபோன்று அரசிறைச் சுமையை குறைக்கும்பொருட்டு இவ்விரு துறைகளிலும் தனியார் துறையின் நேரடிப் பங்கேற்பை பயன்தரும் வகையில் ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதேவேளையில், வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கான சனாதிபதி செயலணிக்குழு நிதி மற்றும் காணி என்பனவற்றின் போதுமான கிடைப்பனவை உறுதிப்படுத்தக்கூடிய பொருத்தமான உபாயமொன்றுடன் வீடமைப்பு வசதிகளை வழங்குவதில் தனியார் துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான தேவையை வலியுறுத்தி விதந்துரைத்தது. முன்னைய ஆண்டுகளில் வலியுறுத்தப்பட்டதைப் போன்று தகுதியுடையோருக்கு மட்டும் அரசின் நலன்புரிச் செயற்றிட்டங்களின் நன்மைகளை சென்றடைவதனை மட்டுப்படுத்துவதற்கான அதிமுக்கிய தேவையொன்றும் உள்ளது.

## 5.2. நலத்துறை

கடந்த சில தசாப்தங்களாக சிறப்பாக நலத் துறையிலும், பொதுவாக ஏனைய நலன்புரி நடவடிக்கை களிலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய முதலீடுகளின் முக்கிய காரணத்தினால் இலங்கையின் நலத்துறை குறிகாட்டிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் குறிகாட்டிகளுடன் சாதகமான முறையில் ஒப்பிடத்தக்கதாகவுள்ளன. சுதந்திரம் பெற்றதிலிருந்து தொடர்ந்துவந்த அரசுகள் நலத்துறையின் மீதான செலவை உயர் மட்டமொன்றில் மொ.உ.உ.இன் 1-2 சதவீதமளவில் பேணிவந்தன. கிராமியப் பகுதிகளில்கூட நலத்துறை வசதிகளின் பெற்றுக்கொள்ளலை இது மேம்படுத்தியுள்ளது. வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஈடுபாடும் சனத்தொகையின் நல நிலைமைகளின் மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. எனினும், நலத்துறையிலான இப்பெறுபேறுகளின் உறுதிப்பாடு, மாறிவரும் வாழ்க்கை முறைகள், குடித்தொகைப் பரம்பலின் மாற்றங்கள், மோசமான சுற்றாடல் நிலைமைகள், தற்போதுள்ள நலக் கவனிப்பு வழங்கல் முறையில் உள்ள குறைபாடுகள் என்பனவற்றிலிருந்து தோற்றம்பெறும் சுகாதாரத் தீங்குகளால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகிறது. தற்போதைய ஆயுதப் போராட்டத்தினால் விபத்துக்குள்ளாவோரின் அதிகரித்த எண்ணிக்கையின் காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. மனநலக் குறைபாடுகள், உணர்வு அதிர்ச்சித் தாக்கங்கள், நஞ்சு உட்கொள்ளல், தற்கொலைகள் என்பவற்றிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்படுகின்றது. இதேவேளை, சனத்தொகையில் முதுமையடைவோர் சம்பந்தப்பட்ட நலத்துறைப் பிரச்சினைகள் அடுத்த இரண்டு தசாப்தங்களில் மிகவும் மோசமானதாக இருக்கும். பலதரப்பட்ட குடித்தொகை மதிப்பீடுகளின் படி, இலங்கையில் குடித்தொகையில் முதுமையடைவோர் (60 வயதும் அதற்கு மேற்பட்டதும்) 1995இன் 9.1 சதவீதத்திலிருந்து 2030இல் 21.5 சதவீதத்திற்கு படிப்படியாக அதிகரிக்கும். குடித்தொகையில் முதுமை யடைவோரின் அதிகரிப்பானது இருதய நோய்கள், நரம்பு சார்ந்த நோய்கள், புற்றுநோய், வாத நோய்கள், முதுமையடைந்தோரின் ஏனைய பொதுவான உடல்நல மற்றும் மனநல பிரச்சினைகள் என்பவற்றுக்கான நல கவனிப்புப் பணிகளின் அதிகரித்த கேள்விக்கு இட்டுச் செல்லும். நலக்கவனிப்பின் வழங்கலை விரிவாக்குவதற்கான பொருத்தமான உத்தியொன்றுடன் நலத்துறையில் முன்னுரிமையை மீள் வழிப்படுத்துவதற்கான ஓர் அவசரத் தேவை காணப்படுகின்றது. இத்தேவை தெளிவாக இனங்காணப்பட்டதுடன், 1997இல் நியமிக்கப்பட்ட நலத்துறை மீதான சனாதிபதி செயலணிக் குழு இவ்விடயங்களைக் கருத்திற்கொள்ள குறித்துரைக்கப்பட்ட விதந்துரைப்புக்களை வழங்கியது.

சனாதிபதி செயலணிக் குழுவினால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காகவும் வசதி செய்து கொடுப்பதற்காகவும் 1998 சனவரியில் நலத்துறை சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தற் பிரிவொன்று நிறுவப்பட்டது. இலங்கையின் நலத்துறைக் கொள்கையின் பரந்த நோக்கினுள், அதாவது வாழ்வுக் காலத்தை அதிகரித்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் என்பன தொடர்பாக நலப் பணிகளின் வழங்கலில் காணப்படும் சமமின்மை, முதுமையடைந்தோர் மற்றும் ஊனமுற்றோரின் பிரச்சினைகள், தொற்றாத நோய்களின் அதிகரிப்பு, விவாகரத்துக்கள், தற்கொலைகள், கருமூல துஸ்பிரயோகம் போன்ற நலத்துறைப் பிரச்சினைகளை உடனடியாகக் கவனத்திற் கொள்ளல் வேண்டும். இவ்விடயங்களை கருத்திற்கொள்ளும் பொருட்டு சனாதிபதி செயலணிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான விதந்துரைப்புக்களிலிருந்து ஐந்து உந்து விடயங்கள் உடனடியான நடைமுறைப்படுத்தலுக்காக இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன, ஒவ்வோர் மாவட்டத்திலும் வைத்தியசாலையொன்றினை மேம்படுத்தல், விசேட தேவைகளை (முதியோர், ஊனமுற்றோர், போரால் பாதிப்புற்றோர், மனநலம், பெருந்தோட்ட நலம் போன்றவை) உள்ளடக்கும் விதத்தில் நலப்பணிகளை விரிவாக்கல், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புத்துயிர் அளிப்பதற்கான வலியுறுத்தலுடன் விசேட நல ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் அபிவிருத்தி, நலத்துறை மற்றும் மூலவளங்களைத் திரட்டல் என்பனவற்றின் ஒழுங்கு முறை அமைப்பின் சீராக்கம், மாற்று நிதியிடல் பொறிமுறைகள், தனியார் மற்றும் அரசதுறைகளுக் கிடையே மூலவளங்களைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் மனிதவள அபிவிருத்தியை ஒழுங்குமுறைப்படுத்தலை உள்ளடக்கிய முகாமைத்துவம் என்பனவாகும்.

சிறுவர் நலன் கவனிப்பு நிலையங்களை நிறுவுதல், ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட வயது முதிர்ந்தோருக்கும் ஊனமுற்றோருக்குமான செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல், மனநல வைத்தியசாலையை போதனா வைத்தியசாலைத் தொகுதியாக அபிவிருத்தி செய்தல் மற்றும் மனநல கவனிப்பைப் பன்முகப்படுத்துதல் என்பனவற்றின் மூலம் சமூக நலத் தேவைகளை நிறைவு செய்வதற்கு நலத்துறை சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தற் பிரிவு 1998இல் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் நவீன உபகரணங்களைக் கொண்ட குறைந்தபட்சம் ஒரு வைத்தியசாலையையாவது நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொலநறுவை வைத்தியசாலையின் அபிவிருத்தி வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பற்சிகிச்சைப் பணிகளை வலுப்படுத்தும் நோக்கில், பல பிரதேசங்களில்

**அட்டவணை 5.2**
**அரச நலத்துறைப் பணிகள்**

| விடயம் | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|
| மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருத்துவத்தைக் கையாள்பவை எண்ணிக்கை) | 540 | 547 | 550 |
| படுக்கைகள் எண்ணிக்கை | 52,613 | 52,635 | 53,737 |
| மத்திய மருந்தகங்கள் எண்ணிக்கை | 377 | 371 | 389 |
| மருத்துவர்களின் எண்ணிக்கை | 4,391 | 4,956 | 5,611 |
| துணை மருத்துவர்களின் எண்ணிக்கை | 1,464 | 1,380 | 1,370 |
| ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை | 14,808 | 15,078 | 15,359 |
| தாதிமார் எண்ணிக்கை | 13,846 | 14,399 | 14,463 |
| உடன் கவனிப்பாளர் எண்ணிக்கை | 5,758 | 6,650 | 6,717 |
| உள் நோயாளர் எண்ணிக்கை ('000) | 3,339 | 3,453 | வி.கி. |
| வெளி நோயாளர் எண்ணிக்கை ('000) | 35,348 | 39,503 | வி.கி. |
| மொத்த நலத்துறைச் செலவு (ரூ.மில்.) | 11,913 | 12,135 | 14,419 |
| நடைமுறைச் செலவு (ரூ.மில்.) | 9,260 | 9,581 | 10,089 |
| மூலதனச் செலவு (ரூ.மில்.) | 2,653 | 2,554 | 4,330 |

மூலங்கள்: நலத்துறை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு. இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

40 புதிய பற்சிகிச்சை நிலையங்கள் திறக்கப்பட்டன. சனாதிபதி செயலணிக் குழுவின் விதந்துரைப்புக் களுக்கமைய அரசாங்கத்தினால் பொறுப்பேற்பதற்காக 50 பெருந்தோட்ட வைத்தியசாலைகள் இனங்காணப் பட்டுள்ளதுடன், இவற்றில் இரண்டு ஏற்கெனவே பொறுப்பேற்கப்பட்டுள்ளது. சனசமூக நலக் கவனிப்பை மேம்படுத்தும் நோக்கில் 15,000 தொண்டர்களை பயிற்சியிலீடுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் கவனத்திற் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் நீண்டகாலத் தீர்வுகளைத் தேவைப்படுத்தும் பிரச்சினைகளிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கை க்கும் நிதியிடும் மூலவளங்கள் மற்றும் செலவு மதிப்பீடு கள் என்பவற்றை இனங்காணலும் பயனுடையதாகும்.

1998இல் மேற்கத்தைய மருந்தை வாங்கும் அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை பேராதனையில் பற்சிகிச்சை போதனா வைத்தியசாலை திறக்கப்பட்டது டனும், இரண்டு பெருந்தோட்ட வைத்தியசாலைகள் பொறுப்பேற்கப்பட்டதுடனும் 550இற்கு அதிகரித்தது. 1998இல் 1,000 ஆட்களுக்கான படுக்கைகளின் சராசரி எண்ணிக்கை 1997இன் 2.8இலிருந்து 2.9 இற்கு மேம்பட்டது. இத்துடன், 1998இறுதியில் 389 மத்திய மருந்தகங்கள் காணப்பட்டன. நலத்துறை ஆளணியின் எண்ணிக்கை, 1998இல் புதிதாகச் சேர்க்கப்பட்ட 5,104 ஆட்களையும் உள்ளடக்கி 69,369ஆக விளங்கியது. உதவி வைத்திய அலுவலர்கள் மற்றும் உள்ளகப் பயிற்சி பெறுவோர் உட்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை 6,981ஆக விளங்கி, 1997இன் 10,000 குடித்தொகைக்கு 3.4இலிருந்து 1998இல் 3.7இற்கு அதிகரித்தது. முழுமையான நியதிகளில் தாதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும், 10,000 குடித்தொகைக்கான தாதிகளின் எண்ணிக்கை 1997இன் 7.8இலிருந்து 1998இல் 7.7இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. தாதிமார்களின் பற்றாக் குறையானது பல வருடங்களாக பல வைத்தியசாலைகளில் உள்ளக நோயாளர் பணிகளைப் பாதித்துள்ளது. தனியார்துறை நலக்கவனிப்புப் பணியும் தகைமைபெற்ற தாதிகளின் பற்றாக்குறையும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகிறது. இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தாதிகளைப் பயிற்றுவிப்பதற்காக 1998இல் அரசாங்கம், 1,553 ஆட்களை தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தது. அதேவேளையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் புதிய தாதிகள் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிருமாணிப்பதற்கான வேலைகளும் 1997இல் ஆரம்பமாகின. அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் தகைமைபெற்ற துணை மருத்துவ அலுவலர்களின் பற்றாக்குறையானது நோயாளிகளுக்கான பயன்தரு சிகிச்சையினைப் பாதிக்கின்றது. 1998இல் அரசாங்க வைத்தியசாலை களுக்கு 42 துணை மருத்துவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனினும், இவ்வாண்டில் பயிற்சிக்காக ஆகக்கூடிய எண்ணிக்கையான 1,100 ஆட்கள் சேர்க்கப்பட்டனர். முக்கியமாக தாதிகள், துணை மருத்துவர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளருக்கான கேள்வி விரைந்து வீழ்ச்சிபெற்று வருவதனால் நலத்துறை ஆளணியினை பயிற்றுவிப்பதற்கான நீண்ட காலத் திட்டமொன்றைப் பின்பற்றுதல் அத்தியாவசியமாகின்றது.

முக்கியமாக பின்தங்கிய பிரதேசங்களில் ஆரம்ப நலக் கவனிப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஆய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்தன. நாட்டின் குறைவான வசதிகளைக் கொண்டுள்ள பகுதிகளில் சிறப்புப்பணிகளின் மூலம் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் நலப் பணிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட "சுவ உதான" நலப்பணி நிகழ்ச்சித் திட்டம் 1998இல் பத்து பிரதேசங்களில் நடாத்தப்பட்டது. இளம்பிள்ளை வாதத்திற்கெதிரான தேசிய நோய்த்தடுப்பு நாள் தொடர்ச்சியாக நாலாவது ஆண்டிலும் நடாத்தப்பட்டது. தடுப்பூசிமூலம் தடுக்கப்படக்கூடிய ஆறு நோய்க்கெதிராக குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் பரந்தளவிலான இலக்கினை (90 சதவீதம்) நாடு ஏற்கெனவே எய்தியுள்ளது. இதேவேளையில் தென்மேற்கு பருவ மழை காரணமாக டெங்கு இரத்தப்பெருக்கு காய்ச்சல் அதிகரிப்பொன்றைக் காட்டியது. 1998 யூன் 22இலிருந்து 29வரை டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட வாரம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1998இல் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1997இன் 193 உடன் ஒப்பிடுகையில் 1998இல் 227 என அறிவிக்கப்பட்டுள்ளது. 1997இல் திடீரென ஆரம்பித்த வாந்திபேதி நோய் 1998இலும்

தொடர்ந்தது. புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பித்த வாந்திபேதி நோய் 1998இல் புத்தளம், குருநாகல், மொணராகலை, பொலநறுவை மாவட்டங்களில் பரவியதோடு இம் மாவட்டங்களிலே நோய்வாய்ப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது. பாதுகாப்பான குடிநீர் ஆரோக்கிய வசதிகள் என்பனவற்றின் போதாமையும் தனிப்பட்டோரின் மோசமான உடல்நலப் பேணலும் வாந்திபேதி நோய் பரவுவதற்கான முக்கிய காரணியாகும். 1998இல் ஜப்பானிய மூளைக்காய்ச்சலின் தாக்கத்தில் எதுவித முக்கிய மாற்றமும் காணப்படவில்லை. எனினும், இந்நோய்க்கெதிராக 1-10 வயதுகளுக்கிடையிலுள்ள குழந்தைகளின் நோய்த்தடுப்புத் திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் மலேரியா தொடர்ந்து அதிகரித்தது. எனினும் பாதிப்புற்றோரின் எண்ணிக்கை 1998இல் 211,691 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1998இல் நலத்துறையில், அரசாங்கத்தின் மொத்த செலவு ரூ. 14,379 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 18 சதவீத அதிகரிப்பைக் குறித்துக் காட்டியது. மொ.உ.உ. சார்பில், முதலீடு 1997இன் 1.3 சதவீதத்திலிருந்து 1998இல் 1.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. நலத்துறை மீதான அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் ரூ.4,330 மில்லியனாக விளங்கி 70 சதவீத அதிகரிப்பொன்றைப் பிரதிபலித்தது. ரூ.723 மில்லியன் செலவில் ஸ்ரீ ஜயவர்த்தன புரவிலுள்ள தேசிய தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் நிருமாண வேலைகள் 1998இல் நடைபெற்றுக்கொண்டிருந்தன. 1999 நடுப்பகுதியில் நிருமாண வேலைகள் பூர்த்தியாக்கப்படத்தக்கதாக அட்டவணையிடப்பட்டுள்ளதுடன் 100 தாதி மாணவர்களைக் கொண்ட முதற் தொகுதி அவ்வாண்டிலேயே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது. லேடி றிட்ஸ்வே வைத்தியசாலைக்கான 390 படுக்கைகளைக் கொண்ட பத்துமாடிக் கட்டடத் தொகுதியொன்று சீனாவின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.320 மில்லியனாக விளங்குவதுடன், நிருமாண வேலைகள் 1999 ஒகத்து இறுதியில் பூர்த்தியாக்கப்பட விருக்கின்றன. 1998இல் கொரிய நிதி உதவியுடன் ரூ.225 மில்லியன் செலவில் கம்பகா மற்றும் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலைகளின் நோயாளர் கவனிப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கும் ரூ.300 மில்லியன் செலவில் அதன் சுற்றுப்புற வைத்தியசாலைகளுக்கு அடிப்படை மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கண்டி போதனா வைத்தியசாலையில் இருதய மற்றும் மார்புக்கூட்டுப் பிரிவை மேம்படுத்துவதற்காக ரூ.170 மில்லியன் கொண்ட இலகு கடன் ஒன்றினை பிரான்சிய அரசு வழங்கியது. 1997இல் ஆரம்பிக்கப்பட்டதும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு/உலக வங்கியினால் நிதியிடப்பட்டதுமான நலத்துறை பணிகள் செயற்றிட்டம் 1998இலும் தொடர்ந்தது. இச் செயற்றிட்டத்தின்கீழ் மலேரியா ஒழிப்பு (ரூ.252 மில்லியன்), எஸ்.ரி.டி./எயிட்ஸ் (ரூ.603 மில்லியன்), ஊட்டச்சத்து (ரூ.200 மில்லியன்), தொற்றாத நோய்கள் (ரூ.31 மில்லியன்), நலத்துறைக் கல்விப் பணிகள் (ரூ.174 மில்லியன்) என்பவற்றுக்கு பெருமளவு நிதியங்கள் ஒதுக்கப்பட்டன. இச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ.1,490 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. வட மத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் நலக் கவனிப்பு மற்றும் வழங்கல் முறையை மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நலத்துறை மற்றும் குடித்தொகை செயற்றிட்டம் 1998இல் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளது. வெளிநாட்டு நிதியங்களால் நிதியிடப்பட்ட பெரும்பாலான நடவடிக்கைகள் நலத்துறை சீர்திருத்தங்களின்கீழ் இனங்காணப்பட்ட நடவடிக்கைகளாகும். எனவே, நலத்துறைச் சீர்திருத்தங்கள் ஆக்கபூர்வமாக அமைவதற்கு குறித்துரைக்கப்பட்ட காலவரையறையொன்றுக்குள் நேரம் பிந்தாமலும், செயற்றிறன் மிக்க வகையிலும் வெளிநாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துவது அத்தியாவசியமாகும்.

### தனியார்துறை நலக் கவனிப்பு

தனியார் நலப்பணிகள் துறையானது, தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள் மற்றும் தனியார் பொது மருத்துவர் ஆகியவற்றைக் கொண்ட வலையமைப்பையுடையதாகக் காணப்படுகின்றது. நலப் பணிகளுக்கான, வளர்ச்சியடைந்து செல்லும் கேள்வியை ஈடுசெய்யவும், தரமான நலக் கவனிப்பை இலகுவில் பெற்றுக்கொள்வதை உத்தரவாதப் படுத்தவுமென அரசானது தனது இலவச நலப் பணிகளுக்கு இணையாக தனியார்துறை நலப் பணிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளது. இதன்படி, அரசு நலத்துறையில் இருவகை தனியார்துறை வைத்தியசாலைகளுக்கான முதலீட்டை ஊக்குவிப்பதற்காக வைத்தியக் கருவிகளின் இறக்குமதிக்கான தீர்வை விலக்கல்களையும், முதலீட்டு வருமானம் மீதான வரிச் சலுகைகளையும், நிலங்கள் வழங்குதல் போன்றவற்றின் வடிவில் பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வழங்கியது. அதேநேரத்தில், முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்து வைத்தியசாலைச் செயற்றிட்டங்களும் முதலீட்டுச் சபைச் சலுகைகளைப் பெற உரித்துடையனவாகக் காணப்பட்டன. மேலும், நலப் பணிகளின் வழங்கலில் பொருத்தமான அரச-தனியார் கலப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டியமை நலத்துறைச் சீராக்கங்களில் வலியுறுத்தப்பட்டது.

"அப்பலோ கொஸ்பிற்றல் குறூப் ஒவ் இந்தியா"வின் உடைமையாளர் களான "இந்தியன் கொஸ்பிற்றல் கோப்பரேசன்" இலங்கையில் ரூ.2,000 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் வைத்தியசாலையொன்றை நிறுவுவதென மேற்கொண்ட தீர்மானமானது 1998இல் இத்துறையில் காணப்பட்ட முக்கியமானதொரு முன்னேற்றமாகும்.

நல அமைச்சு மூலங்களின்படி, ஏறக்குறைய 2,500 கட்டில்கள் இயலளவுடன் ஏறக்குறைய 120 தனியார் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. பணி வழங்குநர்கள் பற்றிய தகவல்கள் குறைவாயுள்ளமை தனியார்துறை நலப் பணிகளின் உள்ளடக்கம் மற்றும் செயலாற்றம் ஆகியவற்றை மதிப்பிடுதலில் ஏற்பட்ட முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. தனியார் வைத்தியசாலைகள் மீதான தரவுகளைச் சேகரிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட 70 வைத்தியசாலைகளுக்கிடையில் அஞ்சல் அளவீடு ஒன்றை மத்திய வங்கி நடத்தியது. கொழும்பிலுள்ள அனைத்து முக்கிய தனியார் வைத்தியசாலைகள் உட்பட 36 தனியார் வைத்திய சாலைகள் கேள்விக்கொத்துக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. இவ் வைத்தியசாலைகளின் மொத்த படுக்கை இயலளவானது 1998இல் சிறிதளவால் அதிகரித்து 1,600ஆக விளங்கியது. உள்நோயாளர் களினதும், வெளி நோயாளர்களினதும் எண்ணிக்கை யானது ஆய்வின் கீழான ஆண்டில் முறையே 4 சதவீதத்தாலும் 20 சதவீதத்தாலும் அதிகரித்து முறையே 72,616ஆகவும், 1,202,922ஆகவும் விளங்கின. 1998இன் இறுதியில் இவ்வைத்தியசாலைகளில் 136 நிரந்தர வைத்தியர்களும், 1,057 சென்று பார்வையிடும் வைத்தியர்களும், 185 பகுதிநேர வைத்தியர்களும் இருந்தனர். இவ் வைத்தியசாலைகளில் தாதி அலுவலர்கள் தொகை இவ்வாண்டில் 4 சதவீதத்தால் அதிகரித்து 970ஆக விளங்குகையில், உதவி மருத்துவ அலுவலர்களின் தொகை 5 சதவீதத்தினால் அதிகரித்து 345ஆக விளங்கியது. பெரும்பாலும் அனைத்து வைத்திசாலைகளும் மருத்துவ நிபுணர் ஆலோசனைப் பணிகளை வழங்கின.

அளவீடு மேற்கொள்ளப்பட்ட பல தனியார் வைத்தியசாலைகளும், தமது பணிகளை விரிவாக்குவதற்குப் பொருத்தமான காணி போதியளவில் கிடைக்காமையே தமது பணிகளை மேலும் விரிவாக்குவதனைப் பெருமளவில் கட்டுப்படுத்திய காரணியாகுமெனத் தெரிவித்துள்ளன. பெரிய வைத்தியசாலைகள், தமது முதலீடுகள் தொடர்பில் முதலீட்டுச் சபைச் சலுகைகளை அனுபவிக்கின்றமையால் சிறிய தனியார் வைத்திய சாலைகள் இவற்றுடன் போட்டிபோட முடியாதுள்ளன. அதேநேரத்தில், நோயாளிகள் குறிப்பாக, தமது தொழில் கொள்வோரினால் மருத்துவச் செலவுகள் செலுத்தப் பெறும் நோயாளிகள், வேறு இடங்களில் அமைந்துள்ள சிறு வைத்தியசாலைகளுக்குச் செல்வதைவிட கொழும்பிலுள்ள, நவீன வசதிகளுடைய பெரிய வைத்தியசாலைகளுக்குச் செல்வதையே விரும்புகின்றனர். பெரும்பாலும் அனைத்து தனியார் வைத்தியசாலை களிலும் பயிற்றப்பட்ட தாதிமார்களினதும், தொழில்நுட்ப அலுவலர்களினதும் பற்றாக்குறை நிலவுகின்றது. தனியார் துறைக்கான பயிற்றப்பட்ட மருத்துவ ஆளணியின் தேவை அரசினால் உணரப்பட்ட போதிலும், இவ் விடயத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பொருத்தமான திட்டம் எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

நல அமைச்சோ அல்லது எந்தவொரு நிறுவனமோ, தனியார்துறை நலநிறுவனங்களையும், அவற்றின் நடவடிக்கைகளையும் ஒழுங்கமைப்பதற்கு அவசியமான மேலாண்மையுடனான உரிமையைக் கொண்டிருப்பன வாகக் காணப்படவில்லை. நல மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது தனியார்துறை நலப்பணிகள் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அமைச்சுக்குள்ளேயே தனியான பிரிவொன்றை அண்மையில் உருவாக்கியது. எனினும், அவசியமான சட்ட மேலாண்மையானது இன்னும் நிறுவப்படாததன் காரணமாக இப்பிரிவின் தொழிற் பாடுகள் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தனியார் நல நிறுவனங்களைக் கண்காணித்தல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றுக்கான உத்தேச சட்டமானது இன்னும் தயாரிப்பிலேயே உள்ளது. நலப்பணிகள் வழங்குவதில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துச்செல்லும் நிலையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுமக்களுக்கு அவர்களுக்கு இயலுமான விலையில் தரமான நலப்பணி வசதிகள் கிடைப்பதை உத்தரவாதப் படுத்துவதற்காக தனியார் நலத்துறைக்கான ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு மேலாண்மைச் சபையொன்றை நிறுவுதல் கட்டாய தேவையாக அமைகின்றது.

வரைபடம் 5.1
நலன்புரி, கல்வி மீதான செலவு



## 5.3. கல்வி

விரைந்து நகரும் போட்டித்தன்மை கொண்ட உலகளாவிய பொருளாதாரச் சூழலின் சவால்களை எதிர்கொள்வதற்கு கல்வித் தரத்தில் தொடர்ச்சியான மேம்பாடொன்று முற்தேவையாகக் கருதப்படுகின்றது. தற்போதைய கல்விச் சீர்திருத்தங்கள் இந்த அறைகூவலை கருத்திற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கையொன்றாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக இவை கல்விப் பெறுபேறுகளுக்கும் தொழில் சந்தையில் கிடைக்கத்தக்க வாய்ப்புக்களுக்கிடையேயுள்ள பொருத்தமின்மையைக் குறைப்பதை நோக்காகக் கொண்டுள்ளன. இந்நிலைமையை கருத்திற்கொள்வதற்கு காலத்திற்குக்காலம் பலதரப்பட்ட சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும் இம்முயற்சிகள் முழுமையானதாகக் காணப்படாமையினால் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடையமுடியவில்லை. கல்வித்துறையின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டமொன்று அவசர தேவையெனத் தோற்றம் பெற்றுள்ளது. இதனால், இந்த அறைகூவலை எதிர்கொள்ளுமுகமாக பொதுக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழில்சார்ந்த பயிற்சி ஆகிய துறைகளில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### பொதுக் கல்வி

1998இல் 15 புதிய பாடசாலைகள் நிறுவப் பட்டதுடன், அரசாங்கப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 10,373ஐ அடைந்ததுடன், மாணவர்களின் எண்ணிக்கை 4,143,442ஆகவும் காணப்பட்டது. சராசரி யாக, 6.3 சதுர கிலோமீற்றருக்கு ஒரு பாடசாலையும், பாடசாலை ஒன்றிற்கு 399 மாணவர்களும் இருந்தனர். ஆசிரியர்களின் எண்ணிக்கை 188,200ஆகும். மாணவர்-ஆசிரியர் விகிதம் 22ஆகக் காணப்பட்டது. ஆசிரியர்களில் கிட்டத்தட்ட 26 சதவீதமானவர்கள் பட்டதாரிகளாகக் காணப்பட்ட வேளையில் ஏனையோர் பெரும்பாலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும், அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆசிரியர்களாகவும் க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) தராதரங்களையுடைய அத்தாட்சிப்படுத்தப்படாத ஆசிரியர்களாகவும் விளங்கினர். சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பையும் உள்ளடக்கி 1998இல் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 26,666 மில்லியனாக விளங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீத அதிகரிப்பாகும். மொ.உ.உ. சார்பில், கல்வித் துறைக்கான மொத்தச் செலவு 2.5 சதவீதத்திலிருந்து 1998 இல் 2.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. செயல்முறைக் கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர் வலையமைப்பு மற்றும் நூலக வசதிகள் போன்றவற்றுக்கு உத்தேச சீர்திருத்தங்கள் தேவைப்படுவதால் கல்வித் துறைக்கான மூலவளத் தேவை எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும்.

வெளிநாடுகளில் நிதியிடப்பட்ட பல செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் கல்வித்துறையில் தொழிற்பாட்டிலிருந்தன.

(அ) ஐ.அ.டொலர் 83.4 மில்லியன் செலவில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பால் நிதியிடப்பட்ட பொதுக் கல்வி செயற்றிட்டம் II.

(ஆ) புதிய வகுப்பறைகள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் என்பவற்றின் நிருமாணம், பாடசாலைகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிலப்பகுதியை விரிவாக்கல், கணனி நிலையங்களை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்கிய ஐ.அ.டொலர் 40.7 மில்லியன் செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட இரண்டாம் நிலை கல்வி அபிவிருத்தி செயற்றிட்டம்.

(இ) கிராமப் பகுதிகளில் ஆரம்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், ஆரம்பக் கல்விக்கான புதிய ஆட்சேர்ப்பை அதிகரித்தல் மற்றும் பாடசாலையை விட்டு விலகிச் செல்லலைக் குறைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்ட ரூ. 404 மில்லியன் செலவிலான சுவீடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவரால் (சுபஅமு) நிதியிடப்பட்ட தொடக்கப் பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(ஈ) பெருந்தோட்டத் துறையிலுள்ள மொத்தம் 833 பாடசாலைகளில் 484 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு, இப் பாடசாலைகளின் கல்வியின் தர மேம்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கும் சு.ப.அ.மு.ஆல் நிதியிடப்பட்ட பெருந்தோட்ட பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டம்.

(உ) ஐ.அ.டொலர் 79 மில்லியன் செலவில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பால் நிதியிடப்பட்ட ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் விரிவமர்த்தும் செயற்றிட்டம்.

(ஊ) ஐக்கிய இராச்சியத்தின் பன்னாட்டு அபிவிருத்திக்கான திணைக்களத்திலிருந்தான பகுதியளவு உதவியுடனான ஆரம்ப செயற்றிட்டம் மற்றும் ஆரம்பக் கல்விக்கான திட்டமிடல் செயற்றிட்டம் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன.

பிரதேச செயலக மட்டத்திலான பாடசாலைகளின் அபிவிருத்திக்கான செயற்றிட்டம் 1998இலும் தொடர்ந்தது. பிரபலமான பாடசாலைகளுக்கான அதிகரித்துவரும் கேள்வியை எதிர்கொள்ளுவதற்காக பிரதேச செயலக மட்டத்தில் ஆகக்குறைந்தது இரு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், தொழில்நுட்பப் பிரிவுகள், நூலகங்கள், சுத்தமான நீர், மின்சாரம் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படும். இச் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ.2,100 மில்லியன் ஆகும். இச் செயற்றிட்டத்தின் முதற் கட்டத்தின்கீழ் 317 பாடசாலைகளின் அபிவிருத்தி தொடக்கி வைக்கப்பட்டது. 1998 இறுதியில் அனைத்து மாகாணங்களிலும் தொழிற்பாட்டிலிருந்த தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 1997இன் இறுதியின் 249 பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் 270ஆக விளங்கியது. 2000ஆம் ஆண்டளவில் 150 கணனி நிலையங்களில் ஆண்டொன்றுக்கு 150,000 மாணவர்களுக்கு கணனிப் பயிற்சியை வழங்குவதற்கான திட்டமொன்று வரையப்பட்டுள்ளது. நிலையமொன்றினை அமைப்பதற்கான செலவு ரூ.3 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, ஆண்டொன்றுக்கு 60,000 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் இயலளவுடன் 1998இல் ஏற்கெனவே 72 பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேம்படுத்துவதற்கு 1998இல் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, ஆசிரியர் கல்வியை விரைவுபடுத்துவதற்காக 1977இன் தேசிய ஆசிரியர் கல்விச் சட்டம் எண் 32இன் கீழ் ஆசிரியர் பயிற்சிக்கான தேசிய அதிகாரசபை 1998இல் உருவாக்கப்பட்டது. கல்விக் கல்லூரிகளின்

**அட்டவணை 5.3**
**பொது மற்றும் பல்கலைக் கழகக் கல்வி**

| வியடம் | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|
| **பொதுக் கல்வி** | | | |
| 1. மொத்தப் பள்ளிக்கூடங்கள் (எண்ணிக்கை) | 10,936 | 10,983 | 11,007 |
| 1.1அரச பள்ளிக்கூடங்கள் | 10,312 | 10,358 | 10,373 |
| தேசிய பள்ளிக்கூடங்கள் | 238 | 249 | 270 |
| 1.2ஏனைய பள்ளிக்கூடங்கள் | 624 | 625 | 634 |
| தனியார் | 79 | 75 | 79 |
| பிரிவேனா | 545 | 550 | 555 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) | 4,265,076 | 4,260,989 | வி.கி. |
| 2.1அரச பள்ளிக்கூடங்கள் | 4,132,749 | 4,124,125 | 4,286,894 |
| 2.2ஏனைய பள்ளிக்கூடங்கள் | 132,327 | 136,881 | 143,452 |
| தனியார் | 86,707 | 85,890 | 91,536 |
| பிரிவேனா | 45,620 | 50,991 | 51,916 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | 322,686 | 353,639(அ) | 353,047 |
| 4. ஆசிரியர்கள் எண்ணிக்கை | 193,720 | 187,539 | |
| 4.1அரச ஆசிரியர்கள் | 185,842 | 179,589 | 196,476 |
| 4.2ஏனையவர்கள் | 7,878 | 7,950 | 8,276 |
| 5. மாணவர்கள்/ஆசிரியர்கள் விகிதம் (அரச பாடசாலைகள்) | 22 | 23 | 22 |
| 6. கல்விக்கான மொத்தச் செலவினம் (ரூபா மில்லியன்) (ஆ) | 20,402 | 22,349 | 26,694 |
| 6.1நடைமுறை | 16,018 | 17,757 | 20,582 |
| 6.2மூலதன | 4,384 | 4,592 | 6,112 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| 1. பல்கலைக் கழகங்கள் (எண்ணிக்கை) | 12 | 12 | 12 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) (இ) | 32,800 | 34,139 | 38,192 |
| 3. விரிவுரையாளர்கள் (எண்ணிக்கை) (ஈ) | 2,808 | 2,927 | 3,050 |
| 4. பட்டதாரிகள் (எண்ணிக்கை) | 5,216 | 6,738 | வி.கி. |
| 4.1 கலைகளும் கீழைத்தேச கற்கைகளும் | 1,999 | 2,513 | வி.கி. |
| 4.2 வர்த்தக, முகாமைத்துவக் கற்கைகள் | 999 | 1,219 | வி.கி. |
| 4.3 சட்டம் | 160 | 182 | வி.கி. |
| 4.4 விஞ்ஞானம் | 844 | 882 | வி.கி. |
| 4.5 பொறியியல் | 403 | 496 | வி.கி. |
| 4.6 மருத்துவம் | 505 | 1,022 | வி.கி. |
| 4.7 பற் சிகிச்சை | 58 | 56 | வி.கி. |
| 4.8 விவசாயம் | 165 | 201 | வி.கி. |
| 4.9 மிருக வைத்தியம் | 27 | 36 | வி.கி. |
| 4.10 கட்டடக் கலை | 23 | 58 | வி.கி. |
| 4.11 கணிய அளவீடு | 33 | 72 | வி.கி. |
| 5. அடிப்படைப் பட்டப் படிப்புகளுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) | 8,663 | 9,787 | 10,450 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) உயர் கல்விக்கான அரச செலவினத்தையும் உள்ளடக்கும்.
(இ) இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த.
(ஈ) பொது உயர் கல்வி மீதான அரச செலவினம்.
(உ) ஆண்டின் தொடக்கத்தில்.

மூலங்கள்: கல்வி. உயர் கல்வி அமைச்சு.
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு.
இலங்கை மத்திய வங்கி.

எண்ணிக்கை தற்போதைய 11இலிருந்து எதிர்காலத்தில் 14இற்கு அதிகரிக்கப்படவுள்ளது. இம்முயற்சியின் முக்கிய குறிக்கோள்களுக்கிடையே புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல், மாணவ ஆசிரியர்களின் சேர்ப்பினை அதிகரித்தல் என்பன விளங்கின. எனினும், தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் தொலைக்கல்வி முறையிலான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விருப்புரிமை காணப்படுகின்றமையினால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளால் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கான ஆட்சேர்ப்பு வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியது. ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கல்வி புகட்டுவோர், கல்வி நிருவாகிகள், தேசிய கல்வி நிறுவனத்திலுள்ள அலுவலர்கள் ஆகியோருக்கு கல்வியின் பலதரப்பட்ட முக்கிய துறைகளில் வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

இலவச பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்கும், பாடசாலைப் புத்தகங்களை வழங்குவதற்கும் மற்றும் பருவகாலச் சீட்டுக்களுக்குமாக 1998இல் அரசாங்கம் ரூ.1,989 மில்லியனைச் செலவிட்டது. பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் நூலக வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பிரிவின்கீழ் புதிய பாடசாலை நூலக பணிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

மூலவளங்களின் கட்டுப்பாடானது கல்வித் துறையின் அபிவிருத்திக்கான முக்கிய தடையாக கருதப்பட்டபோதும், சில சந்தர்ப்பங்களில் கிடைக்கத் தக்கதாக இருந்த மூலவளங்கள் திட்டமிடப்பட்ட பயன்படுத்தப்படாதமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கீழ் தற்போது செயற்பட்டுவரும் பொதுக் கல்வி செயற்றிட்டம் II, ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் விரிவமர்வு செயற்றிட்டம் ஆகியவற்றில் நிதியங்களின் பயன்பாட்டு வீதங்கள் திருப்திகரமாக இருக்கவில்லை. ஏற்கெனவே உள்ள செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் இச் செயற்றிட்டங்களின் கீழ் கிடைக்கத்தக்கதாக உள்ள மூலவளங்களை திறன்மிக்க முறையில் பயன்படுத்துவதற்குமான முயற்சிகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

இலங்கையில் உத்தியோகபூர்வ ஒப்புதல்பெற்ற/அத்தாட்சிபெற்ற தனியார் பாடசாலைகள், சருவதேச பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் பாலர் பாடசாலைகள் போன்ற பல பாடசாலைகள் அரசாங்க சார்பற்ற கல்வி நிறுவனங்களாகத் தொழிற்படுகின்றன. 1998இல், ஒப்புதல்பெற்ற மற்றும் அத்தாட்சி பெற்ற தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை 1997இன் 75 இலிருந்து 79இற்கு அதிகரித்தது. இப்பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 85,890ஆக இருந்தது. இத் தனியார் பாடசாலைகள் பொதுவாக அரசாங்க பாடசாலைகளின் அதே பாட விதானத்தையே பின்பற்றுவதுடன் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு மாணவர்களையும் தயார்படுத்துகின்றன. சருவதேச பாடசாலைகள் அவற்றின் மாணவர்களை முக்கியமாக பலவகையான வெளிநாட்டு பரீட்சைகளுக்குத் தயார்படுத்துகின்றன. 1998 இறுதியில் கம்பனிகளின் பதிவாளருடன் பதிவு செய்யப்பட்ட சருவதேச பாடசாலைகளின் எண்ணிக்கை 34 ஆக விளங்கியது. தேசிய கல்வி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் கல்வி அமைச்சு சருவதேச பாடசாலைகள் அவற்றின் நியமங்களையும் தரத்தையும் பாடசாலைகளின் ஒழுங்கமைப்புக்கான சட்ட விதிகளை உள்ளடக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய கல்விச் சட்டமொன்றினைத் தயாரிக்கின்றது. கடந்த ஆண்டுகளில் பாலர் பாடசாலைக் கல்வியும் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சி பெற்றிருப்பதால் பாலர் பாடசாலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒழுங்கு முறையிலான அமைப்பு ஒன்று தேவைப்படுவதாகத் தெரிகிறது. இது, பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தேவையான தராதரங்களின் விளக்கம் என்பவற்றை உள்ளடக்க வேண்டும். இவ் வசதிகள் நகரப் பிரதேசங்களைப்போல் கிராமப் புறங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

## உயர் கல்வி

1998இல் 12 தேசிய பல்கலைக்கழகங்கள், 6 பட்டப் பின்படிப்பு நிறுவனங்கள் மற்றும் அழகியற்கல்வி, கணனித் தொழில்நுட்பம், சுதேச வைத்தியம், கம்பகா விக்கிரமாறாச்சி ஆயுர்வேதம், தொழிலாளர் கல்வி ஆகிய ஏனைய ஐந்து நிறுவனங்களும் உயர் கல்வி நிறுவனங்களாக தொழிற்பாட்டிலிருந்தன. 1998இல் 38,192 பல்கலைக்கழக மாணவர்கள் இருந்தனர். பல்கலைக் கழகங்களுக்கான புதிய அனுமதிகள் 14 சதவீதத்தால் 10,450இற்கு அதிகரித்தன. இது, பல்கலைக் கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்தி செய்த 70,379 மாணவர்களுள் 15 சதவீதமாகவும், க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 5 சதவீதமாகவும் மட்டுமே காணப்பட்டது. பட்டப் பின்படிப்பு கற்கை நெறிகளுக்கான முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களின் எண்ணிக்கை 6,500ஆக விளங்கியது. இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தொலைக் கல்வி முறையினூடாக அதன் கற்கை நெறிகளைப் பயில்வதற்காக 19,500 மாணவர்களைக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட 91,000 மாணவர்கள் களனி, பேராதனை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, றுகுணு மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகங்களில் வெளிவாரிப்

பட்டங்களுக்காக பதிவுசெய்யப்பட்டனர். 1998இல் பல்கலைக்கழகங்கள் பல தமது நிகழ்ச்சித் திட்டங்களில் புதிய கற்கை நெறிகளைச் சேர்த்துக்கொண்டன. இலங்கை திறந்த பல்கலைக் கழகம் ஆரம்பக் கல்வி சம்பந்தான பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. களனிப் பல்கலைக் கழகம் கணிதத்தில் பட்டப் பின்படிப்பு கற்கை நெறியொன்றினை அறிமுகப்படுத்தியது. கொழும்புப் பல்கலைக் கழகம் மருத்துவப் பொருளியல் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்காக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான குழுவொன்றை நியமித்துள்ளது.

1998இன் இலக்கம் 20 கொண்ட கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய முறைகளிலான வன்முறைகள் தடைச் சட்டம் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1987-89 காலப்பகுதியில் அரசியல் குழப்பங்கள் காரணமாக பல்கலைக் கழகங்கள் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்தமையால் முடிவுறாதிருந்த விடயங்கள் 1998இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதுடன், பல்கலைக் கழகங்கள் அவற்றின் வழமையான நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடரவும் இயலச் செய்தது. தற்காலிக அடிப்படையில் விரிவுரையாளர்களைப் பெறுவதற்கும், ஏனைய வசதிகளைப் பெறுவதற்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் மேலதிக மூலவளங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டமையால் இது சாத்தியமாயிற்று. புதிய பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டமையும் இந் நிலைமையைத் தணிக்க உதவியது.

உயர்கல்வி சார்ந்த உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விடுதி வசதிகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியையும், பல்கலைக் கழக இடப்பரப்பின் விரிவாக்கத்தையும் இவை உள்ளடக்கியுள்ளன. 2000 ஆண்டளவில் மாணவர் தொகையின் 75 சதவீதத்திற்கு விடுதி வசதியினை வழங்கல் இலக்காக உள்ளது. 1998இல் மகாபொல புலமைப்பரிசில் மற்றும் அரச உதவுதொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1997இன் 19,900 இலிருந்து 23,500 இற்கு அதிகரித்தது. இதற்கும் மேலாக, அரசின் மாணவர் உதவிக் கொடுப்பனவுகளும் பொருத்தமான மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட உதவியின் அளவு ரூ. 1,150 இலிருந்து ரூ. 1,300 இற்கு வேறுபட்டுக் காணப்பட்டதுடன், இது ஆண்டொன்றிற்கு 10 மாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டது.

பல்கலைக் கழகக் கல்வியில் மாற்றத்துக்கான தேவையும் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 1997 மாச்சில் நியமிக்கப்பட்ட சனாதிபதி செயலணிக்குழு, பல்கலைக் கழகக் கல்வியில் காணப்படும் குறைபாட்டை கருத்திற் கொள்வதற்கான விதந்துரைப்புக்களை வழங்கியது. பல்கலைக் கழக கல்வியின் விரிவாக்கம், பாடவிதான சீர்திருத்தம், தர உத்தரவாதம், அலுவலர் அபிவிருத்தி, தொழில் ரீதியான வழிநடத்தல், ஆலோசனை மற்றும் நிதி போன்ற முக்கிய பிரிவுகளை இம் முன்மொழிவுகள் உள்ளடக்குகின்றன. இம் முன்மொழிவுகளின் அமுலாக்கம் 1988இல் ஆரம்பமானது.

இச் சீர்திருத்தங்களின் கீழ், பல்கலைக் கழகங்களின் பிராந்தியப் பரம்பலை மேம்படுத்துவதற்காக வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் இரு புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதன் மூலம் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 14இற்கு அதிகரிக்கப்படும். வயம்ப பல்கலைக் கழகத்தினை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது. இதனைத் தொடர்ந்து, பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2000/2001 கல்வியாண்டளவில் படிப்படியாக 15,000இற்கு அதிகரிக்கப்படும். கற்கை நெறிகளை அலகு முறைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. இதன்படி ஆண்டிறுதியில் நடைபெறும் எழுத்து மூலமான பரீட்சைகளுக்கு மேலதிகமாக சாட்டல்கள், செய்முறை வேலை, செயற்றிட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் போன்றவையும் உள்ளன. மேலும், புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விரிவுரையாளர்கள் அலுவலர் பயிற்சிப் பிரிவுகளில் கற்பிக்கும் நுட்பங்களிலான நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கும் உட்படுத்தப்படுவர். அவ்வாறான மூன்று பிரிவுகள் கொழும்பு, பேராதனை மற்றும் களனி பல்கலைக் கழகங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய பல்கலைக் கழகங்களும் அலுவலர் பயிற்சி அலகுகளை நிறுவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துடன், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கொழும்பு, களனி, யாழ்ப்பாணம், பேராதனை ஆகிய 5 பல்கலைக் கழகங்களிலும் தொழில் வழிகாட்டல் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழில் வழிகாட்டல் அலகுகளின் முக்கிய நோக்கங்களாவன பட்டதாரிகளுக்கு தொழில் விருத்தியில் உதவி வழங்குவதும், வேலைவாய்ப்பைத் தேடுவதற்கு அவர்களுக்கு உதவி செய்வதும் ஆகும்.

## தொழில் நுட்பக் கல்வியும் தொழிற் பயிற்சியும்

தொழிற் சந்தையில் காணப்படும் அண்மைய நிகழ்வுகளின் காரணமாக தொழில் நுட்பக் கல்வியும் தொழிற் பயிற்சியும் மிக முக்கிய துறையொன்றாக மாறியுள்ளது. எனவே, புதிதாக உருவாகும் கேள்வியுடன் இசைந்து செல்லும் வகையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சி வழங்கும் பாரம்பரிய வழிமுறைகளை மீளமைப்பதற்கும் விரிவாக்குவதற்குமான முக்கிய தேவையொன்று காணப்படுகின்றது. பல்கலைக்கழக

கல்வி வாய்ப்பு வசதிகள் வரையறுக்கப்பட்டதாகவும் கூடிய போட்டித் தன்மையுடையதாகவும் காணப் படுவதனால் இத்துறையானது பாடசாலையைவிட்டுச் செல்வோருக்கு மட்டுமன்றி இரண்டாம் நிலைக் கல்வியின் வழமையான காலப்பகுதியை பூர்த்தி செய்தோரினதும் அபிவிருத்திக்கான மாற்று வழியொன்றாகும். தேர்ச்சி குறைந்த வேலைகளில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளோருக்கான தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் வேலைகளை மேம்படுத்திக் கொள்ளுவதற்கும் சுய வேலை வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்கும் இது உதவக்கூடும். தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சியின் முக்கியத்துவம் தேசிய கல்வி ஆணைக்குழுவால் இனங்காணப்பட்டுள்ளதுடன், இத் துறையின் மேம்பாட்டுக்காக சனாதிபதி செயலணிக் குழுவால் முன்மொழிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறையில் பயிற்சியை வழங்கும் முதன்மையாளராக விளங்கும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் 623 கல்வி சார்ந்த அலுவலர்களையும் (விரிவுரையாளர்கள்/ செய்முறையாளர்கள்), 939 நிருவாக அலுவலர்களையும் உள்ளடக்கிய 1,562 அலுவலர்களைக்கொண்ட 36 தொழில்நுட்ப நிறுவனங்களின் ஊடாக அதனது பணிகளை வழங்கியது. 1998 இறுதியில் இத் திணைக்களத்தில் பலதரப்பட்ட கற்கை நெறிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 14,981ஆக விளங்கியது. வர்த்தகக் கல்வி மற்றும் தொழில்நுட்ப தராதரப் பத்திர கற்கை நெறிகள் பாரிய எண்ணிக்கையிலான (71 சதவீதம்) மாணவர்களைக் கவர்ந்தன. வர்த்தக கற்கை நெறிகள் ஏனைய டிப்ளோமா கற்கை நெறிகள் மற்றும் குறுகிய கால கற்கை நெறிகளையும் மாணவர்கள் பயின்றனர். இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் பொறியியல்துறை, கணக்கியல், வர்த்தகம் மற்றும் வேளாண்மைத்துறையில் கற்கை நெறிகளை நடாத்தியது. இந் நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1998இல் 2,206ஆக விளங்கியது. இவ்வாண்டில் தொழிற்பயிற்சி அதிகார சபையும் 180 கற்கைநெறிகளுக்கு 22,626 மாணவர்களைச் சேர்த்துக்கொண்டது. இத்துடன், தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் 92 கற்கை நெறிகளுக்கு மொத்தமாக 18,316 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இத் துறையிலான தற்போதைய மாற்றங்களுக்குப் பொருத்தமான முறையில் நிகழ்ச்சித் திட்டங்களின் மீள் ஆற்றுப்படுத்தலின் மூலமாக பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கான தேவையொன்று காணப் படுகின்றது. இதன் நோக்கில், கற்கை நெறிகளைப் பின்பற்றும் மாணவர்களைப் பெரும் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்வதற்காக ஏற்கெனவே உள்ள வசதிகள் புதிய வசதிகளுடன் விரிவாக்கப்படுதல் வேண்டும். சுற்றுலாவும், விடுதியும் சுற்றுலாவும், புடவையும், ஆடைகளும், கட்டட நிருமாணம், இரத்தினக்கல்லும் ஆபரணமும், தகவல் தொழில் நுட்பம், கணனிப் பயிற்சி மற்றும் அச்சிடல் போன்ற துறைகளில் புதிய கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். உள்நாட்டில் போன்றே வெளிநாடுகளிலும் இத்துறைகளில் தராதரம் பெற்ற ஆட்களுக்கு பெரும் கேள்வி இருப்பதே இதற்கான காரணமாகும். கிராமியப் பகுதிகளில் தொழில்நுட்பக் கல்வியையும் தொழிற் பயிற்சியையும் விரிவாக்குவதற்கும், அப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் இப்பயிற்சியினால் நன்மை பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள் ஆர்வம் மிக்கவையாக விளங்குகின்றன. கல்வித்துறைக் கொள்கைகளில் காணப்படும் தொடர்ந்துவரும் குறைபாடொன்று யாதெனில், இத்துறையில் அரசதுறையின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கு எதுவித முயற்சியும் மேற்கொள்ளப்படாமையாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கல்விப் பணிகளை வழங்குவதில் அரசதுறை ஈடுபட்ட போதிலும், தனியார் துறையும் முக்கிய பங்கொன்றினை வகிக்கின்றது. பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப கல்வியின் அபிவிருத்திக்காக தனியார்துறை மூலவளங்களைத் திரட்டுவது போன்றே இப் பணிகளை வழங்குவதில் தனியார்துறையின் நேரடியான பங்கேற்பும் பயன்தரு வகையில் ஊக்குவிக்கப்பட வேண்டும். புகழ்பெற்ற வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்கள்/ தொழில் நுட்பக் கல்வி நிலையங்களினூடான முறைசார்ந்த இணைப்புக்களும் ஆசிரியர், மாணவர் மாற்று நிகழ்ச்சித் திட்டங்களும் கல்விச் சீர்திருத்தங்களைப் பலப்படுத்தக்கூடும். தொழில் வழிகாட்டல் அலகுகள் வரவேற்கத்தக்க அபிவிருத்தியொன்றாகும். தனியார் துறையினர் மற்றும் பல்கலைக்கழக/ தொழில்நுட்பக் கல்வி முகாமைத்துவ மற்றும் கல்விசார் அலுவலர்களுக்கிடையில் கிரமமான கலந்துரையாடல்களின் ஊடாக இந்த திட்டம் மேம்படுத்தப்பட வேண்டியதோடு இது தொழிற் சந்தைத் தேவைப்பாடுகளை இனங்காணுவதற்கும் இந்த தேவைப் பாடுகளை எதிர்கொள்ளுவதற்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்கும் உதவக்கூடியதாக இருக்கும்.

எதிர்காலத்தில் தொழில் படையில் புதிதாக நுழைபவர்களில் பெரும்பாலானோருக்கு எதிர்காலத்தில் அரசதுறையினால் தொழில் வாய்ப்புக்களை வழங்க இயலாதிருக்கும் என்பதை பெற்றோர்களும் மாணவர் களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக அரசதுறையில் மூலவளங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள தோடு தனியார் துறையின் பெருமளவிலான பங்கேற்பின்

ஊடாக பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தி உபாயத்தில் அரசதுறையின் பங்கு சார்புரீதியில் குறைவடையும். அரசாங்கம் பள்ளிக்கூட ஆசிரியர்கள், முகாமையாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் தனியார் துறையினர் போன்ற சம்பந்தப் பட்ட தரப்பினர்களின் கருத்தொருமித்த கூட்டு முயற்சி யொன்றின் ஊடாக மட்டுமே எதிர்கால அறைகூவல்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் கல்வி முறையினைச் சீரமைக்க முடியும்.

## 5.4. தொடர்பூட்டல் பணிகள்

### அஞ்சல் பணி

அஞ்சல் திணைக்களத்துக்கான அனைத்தையும் உள்ளடக்கிய மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்கும் பணி உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தினதும் உலக வங்கியினதும் உதவியுடன் 1998இல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இந் நோக்கத்துக்கான சட்ட வரைவு ஏற்கெனவே தயாரிக்கப் பட்டுள்ளது. இம்மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அஞ்சல் திணைக்களமானது இலங்கை அஞ்சல் கூட்டுத்தாபனம் என்ற பெயருடன் அஞ்சல் கூட்டுத் தாபனமொன்றாக மாற்றப்படுமென எதிர்பார்க்கப் படுவதுடன் வர்த்தக அமைப்பொன்றாகத் தொழிற்படுவதுடன் வர்த்தக அமைப்பொன்றாகத் தொழிற்படுவதற்கான தன்னாட்சி உரிமையைப் பெருமளவில் கொண்டதாகவும் காணப்படும். புதிய அஞ்சல் கூட்டுத்தாபனமானது வழமையான அஞ்சல் பணிகளையும், பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் துணைப் பணிகளையும் திறமையான முறையில் மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தகம் மற்றும்

**அட்டவணை 5.4**
அஞ்சல் தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி

| விடயம் | 1996 | 1997 | 1998(அ) | சதவீத மாற்றம் 1997 | சதவீத மாற்றம் 1998(அ) |
|---|---|---|---|---|---|
| 1. அஞ்சல் பணிகள் | | | | | |
| அஞ்சல் வழங்கும் பரப்புக்கள் (எண்ணிக்கை) | 6,729 | 6,729 | 6,729 | 0.0 | -100.0 |
| அஞ்சல் நிலையங்கள் (எண்ணிக்கை) | 4,252 | 4,313 | 4,362 | 1.4 | 1.1 |
| அரசு | 4,032 | 4,034 | 4,036 | 0.0 | 0.0 |
| தனியார் | 203 | 216 | 250 | 6.4 | 15.7 |
| கிராமிய முகவர் தபால் அலுவலகங்கள் | 17 | 63 | 76 | 270.6 | 20.6 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட பரப்பு (சதுர கி.மீற்றர்) | 15.5 | 15.3 | 15.0 | -1.3 | -2.0 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | 4,339 | 4,326 | 4,304 | -0.3 | -0.5 |
| குடியிருப்பாளர் ஒருவருக்குக் கிடைக்கும் கடிதங்கள் | 27 | 24 | 23 | -11.1 | -4.2 |
| 2. தொலைத் தொடர்பூட்டல் பணிகள் | | | | | |
| 2.1வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் | | | | | |
| தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 254,500 | 315,241 | 455,598 | 23.9 | 44.5 |
| வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 50,170 | 72,457 | 143,075 | 44.4 | 97.5 |
| இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் (எண்ணிக்கை) | 270,800 | 284,876 | 324,411 | 5.2 | 21.2 |
| தொலைபேசிக்கான விரைவுக் கேள்வி (எண்ணிக்கை) | 525,300 | 600,117 | 680,009 | 14.2 | 13.3 |
| தொலைபேசிக்கான பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | 1.39 | 1.69 | 2.43 | 21.6 | 43.8 |
| 2.2ஏனைய தனியார் துறை | | | | | |
| செலுலர் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 4 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 71,028 | 114,888 | 174,202 | 61.8 | 51.6 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ.மில்.) | 5,307 | 6,870 | 8,842 | 29.5 | 28.7 |
| பொதுப் பே போன் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 5 | 0.0 | 25.0 |
| தொலைபேசிக் கூண்டுகள் (எண்ணிக்கை) | 2,152 | 2,571 | 4,610 | 19.5 | 79.3 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ.மில்.) | 610 | 718 | 1,090 | 17.7 | 51.8 |
| வானொலி பேஜிங் பணிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 5 | 5 | 5 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 10,721 | 10,829 | 10,511 | 1.0 | -2.9 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ.மில்.) | 221 | 222 | 222 | 0.5 | 0.0 |
| தரவு தொடர்பூட்டல் பணிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 7 | 8 | 8 | 14.3 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 355 | 11,745 | 19,019 | 3,208.5 | 61.9 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ.மில்.) | 574 | 665 | 768 | 15.9 | 15.5 |
| கம்பி இல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 2 | 2 | 2 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 527 | 26,381 | 67,931 | 4,905.9 | 157.5 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ.மில்.) | 1,743 | 6,796 | 9,291 | 289.9 | 36.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்.
வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம்.
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வணிகம் ஆகியவற்றினது விரைந்த அபிவிருத்திக்கு நம்பத்தகுந்ததும் செயற்றிறன் வாய்ந்ததுமான அஞ்சல் பணியொன்று மிகவும் அவசியமானதாகும்.

1998இல் அஞ்சல் அலுவலக வலையமைப்பு 4,313இலிருந்து 4,362இற்கு அதிகரித்தமை முக்கியமாக தனியார் அஞ்சல் அலுவலகங்களிலும், கிராமிய முகவர் அஞ்சல் நிலையங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பினாலேயே ஏற்பட்டதாகும். கிராமிய முகவர் அஞ்சல் நிலையங்கள் அஞ்சல் பணிகளை கிராமப் பகுதிகளுக்கு மேலும் விரிவாக்குவதற்காக கூட்டுறவுக் கொடுகடன் மற்றும் சிக்கனச் சங்கங்களின் உதவியுடன் 1996இல் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதிலிருந்து கிராமிய முகவர் அஞ்சல் நிலைய வலையமைப்பானது, தூர இடங்களை இணைக்கும் வகையில் 76 புதிய அஞ்சல் அலுவலகங்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் விரிவடைந்தது. இதன் விளைவாக, அஞ்சல் வலுவலகமொன்றின் பணி கிடைக்கும் பிரதேசத்தின் பரப்பளவு 15 சதுர கிலோ மீற்றர்களாக வீழ்ச்சியடைந்தது. அஞ்சல் அலுவலகமொன்றினால் பணி வழங்கப்படும் மக்கள் தொகையும் 1998இன் இறுதியில் 4,304இற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அஞ்சல் பணிகள் மீட்சியடைந்தமையின் காரணமாக உள்நாட்டு அஞ்சல் பணிகளும் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தன. 1998இன் இறுதியல் 30 பிரதான அஞ்சல் அலுவலகங்களும் 131 துணை அஞ்சல் அலுவலகங்களும் யாழ்ப்பாணத்தில் இயங்கின. அதேவேளையில், வெளிநாட்டுப் பொதிகள் அலுவலகம் பன்முகப்படுத்தப ்பட்டு கண்டியிலும், காலியிலும் இரு வெளிநாட்டுப் பொதிகள் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. அதேபோல மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம் பொரளை, கொட்டாஞ்சேனை, கொம்பனித்தெரு மற்றும் வெள்ளவத்தை ஆகிய அஞ்சல் அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்டது.

அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட அஞ்சல் விடயங்களின் மொத்த எண்ணிக்கை 1998இல் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு மாச்சுக்கும் மேயிற்குமிடைப்பட்ட ஏறக்குறைய இரு மாத காலப்பகுதியில் நிலவிய தொழிலாளர் பிணக்குகளே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ஆளொருவருக்கான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை 1997இன் 24இலிருந்து 1998இல் 23இற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுக்கடிதங்கள் மற்றும் பொதிகளின் கையாளலும் இதே காரணத்தினால் 1998இல் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 65 மில்லியன் விடயங்களாக விளங்கியது. இலத்திரனியல் அஞ்சல், இணையம், தொலை நகல் மற்றும் பன்னாட்டு நேரடி இணைப்பு வசதிகள் போன்ற நவீன தொடர்பூட்டல் வசதிகளின் விரிவாக்கத்தினால் குறிப்பாக பன்னாட்டு தொடர்பூட்டலைப் பொறுத்தவரையில் மரபு ரீதியான கடித அஞ்சல் முறையின் பயன்பாடு கவர்ச்சி குறைந்ததாகக் காணப்படுகின்றது. தனியார்துறை விரைவு கூரியர் பணிகளும் சிறப்பாக நிதியியல் மற்றும் வர்த்தக ரீதியான அமைப்புக்களுக்கிடையில் பிரபல்யம் பெற்று வருகின்றது.

அஞ்சல் திணைக்களமானது 1998இல் தொடர்ந்தும் தனது பெறுமதி கூட்டப்பட்ட பணிகளை விரிவுபடுத்தியும், மேம்படுத்தியும் வந்தது. அஞ்சல், தொலை நகல் பணிகள், 1998இன் இறுதியளவில் 177 அஞ்சல் அலுவலகங்களை உள்ளடக்கும்வகையில் விரிவாக்கப்பட்டது. இவ்வசதியானது அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகக் காணப்பட்டது. தொகுதி அஞ்சல் வசதியும் 1998இன் இறுதியளவில் கொழும்பிலுள்ள 60 வாணிப அமைப்புக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. தொலை நகல் காசுக் கட்டளைப் பணி, 98 அஞ்சல் அலுவலகங்களில் கிடைக்கக்கூடியதாயிருந்தது. விரைவுபடுத்தப்பட்ட சருவதேச அஞ்சல் பணியானது 77,575 அஞ்சல் விடயங்களைக் கையாண்டு இவ்வாண்டில் 27 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தது. எனினும், விரைவு அஞ்சல் பணி 1998இல் எதுவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை. அஞ்சல் குறியீட்டு எண்ணிடும் முறையானது அனைத்து அஞ்சல் அலுவலகங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. அஞ்சல் குறியீட்டு முறையைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறையிலுள்ளது. இலத்திரனியல் அஞ்சல் மற்றும் இணைய வசதிகளை அஞ்சல் அலுவலகங்களினூடாக வழங்குவதற்கான வழிமுறைகளை அஞ்சல் திணைக்களம் மேற்கொள்ளு கின்றது. ஆரம்பத்தில், முக்கிய நகரங்களிலுள்ள பிரதான அஞ்சல் அலுவலகங்கள் இலத்திரனியல் மற்றும் இணையம் ஆகியவற்றினால் இணைக்கப்படும். அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப் பட்ட இலவச அஞ்சல் வசதிகளை ஒழுங்கமைத்தமையின் விளைவாக இலவச அஞ்சலின் அளவு கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் இலவச அஞ்சல் பயன்பாட்டிற்கான வகைகூறல் அதிகரித்தது. தெரிந்தெடுக்கப்பட்ட 54 பிரதான அஞ்சல் அலுவலகங் களின் கருமபீடப் பணிகளை விரைவில் தன்னியக்க முடையனவாக்குவதற்கான எடுத்துரைப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. அஞ்சல் திணைக்களம், பெருந்தோட்டத் துறையில் குறிப்பிட்ட சில பகுதிகளில் கிராமிய முகவர் அஞ்சல் நிலையங்களைத் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இந் நோக்கத்துக்காக ஏற்கெனவே 62 பெருந்தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அஞ்சல் திணைக்களத்தின் மொத்த வருவாய் 1998இல் 15 சதவீதத்தால் ரூ.1,617 மில்லியனுக்கு

அதிகரித்தமையானது தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கிட்டத்தட்ட 2 மாதங்களுக்கு அஞ்சல் பணி வீழ்ச்சியடைந்தமையின் விளைவேயாகும். எனினும், வழமையாக அலுவல்கள் நடைபெறும் ஆண்டொன்றிலும் கூட மொத்த அஞ்சல் வருவாயானது திணைக்களத்தின் தொழிற்பாட்டுச் செலவை ஈடுசெய்யப் போதுமானதாக இல்லை. அஞ்சல் திணைக்களத்தினது, முக்கியமாக சம்பளங்களையும் கூலிகளையும் உள்ளடக்கிய தொழிற்பாட்டுச் செலவு 1998இல் 12 சதவீதத்தால் விரிவடைந்தது. அஞ்சல் திணைக்களம் 23,458 ஊழியர்களைக் கொண்ட மேலதிக தொழிற்படையொன்றைப் பேணிவருகின்றது. 1999 வரவு செலவுத் திட்டத்தில், தொழிற்பாட்டு இழப்புக்களின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்வதற்காக அஞ்சல் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி, சாதாரண அஞ்சல் கட்டணம் ரூ.1ஆல் ரூ.3.50இற்கு அதிகரிக்கப்பட்டது. இத் திணைக்களத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவு 12 சதவீதத்தால் அதிகரித்து 1998இல் ரூ.2,125 மில்லியனாக விளங்கி திணைக்களத்துக்கு ரூ.558 மில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பொன்றையும் ஏற்படுத்தியது. 1998இல் இத் திணைக்களத்தின் மூலதனச் செலவும் ரூ.228 மில்லியனாக விளங்கியது.

## தொலைத் தொடப்பூட்டல்

தொலைத் தொடர்பூட்டலானது பொருளாதாரத்தில் மிக விரைந்து வளர்ச்சியடையும் துறைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. 1991இல் தொலைத் தொடர்பூட்டல் கைத்தொழிலானது தாராளமயமாக்கப்பட்டமையும் இதன் விளைவாக வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் ஒரு பகுதி 1997இல் ஜப்பானின் என்.ரி.ரி. நிறுவனத்துக்கு உரிமை மாற்றஞ் செய்யப்பட்டமையும் தொலைத் தொடர்பூட்டல் துறையின் வளர்ச்சியில் முக்கியமான தாக்கமொன்றை ஏற்படுத்தியது. பொருத்தப்பட்ட தொலைபேசிகள், தந்திகள், வெளிநாட்டுத் தந்திகள் ஆகியன போன்ற மரபு வழி அமைப்பிலான தொலைத் தொடர்பூட்டலானது அண்மைக் காலங்களில் கூடுதலாக நுணுக்கமான தொலைத் தொடர்பூட்டல் கருவிகளிலும் இலத்திரனியல் அஞ்சல் (ஈ மெயில்), இணையம், வீடியோவினூடான மாநாடு, கம்பியில்லாத் தொழில் நுட்பம் போன்ற தகவல் பரிமாற்றத்துக்கான கணனி அடிப்படையிலான முறைகளினாலும் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில், புதிய தொடர்பூட்டல் வசதிகள் நகரல்லாத பிரதேசங்களுக்கும் விரிவாக்கப்பட்டுவருகின்றது. எனினும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் ஏறக்குறைய 53 சதவீதமான வாடிக்கையாளர்கள் இன்னமும் கொழும்பு மாநகரப் பகுதியிலேயே உள்ளனர்.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் முகாமைத்துவம் மீளமைக்கப்பட்டதைத் தொடர்ந்து

வரைபடம் 5.2
தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளின் தொலைபேசி அடர்த்தி 1998




அதனது பொதுவான செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்று காணப்பட்டது. நடைமுறையிலுள்ள நேரடிப் பரிவர்த்தனைத் தொடர்புகளின் எண்ணிக்கை 1998இல் 45 சதவீதத்தால் அதிகரித்து (143,075 புதிய தொலைபேசித் தொடர்புகள்) 455,598ஆக விளங்கியது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் வலையமைப்புச் செயற்றிறனும் 1998இல் கணிசமானளவில் அதிகரித்தது. பித்தளைக் கம்பி வழியின் இணைப்பு இயலளவானது 25 சதவீதத்தால் 543,897இற்கு அதிகரித்த வேளையில் முதன்மைக் கம்பிச் சோடிகளின் எண்ணிக்கை 23 சதவீதத்தால் அதிகரித்து 623,036ஆக விளங்கியது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் 1998இல் கூடுதலான தொலைபேசி வசதிகளை பிராந்தியங்களுக்கு வழங்கக் கூடியதாயிருந்தது. புதிய தொலைபேசி வழிகளின் மொத்த எண்ணிக்கையில் 62 சதவீதமானவை அல்லது 86,964 தொலைபேசிகள் பிராந்தியங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நேரடித் தொலைபேசி வழியொன்றுக்கான ஆட்களின் எண்ணிக்கை 1997இன் 59இலிருந்து 1998இல் 41இற்கு வீழ்ச்சியடைந்தது. இத்தகைய முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், புதிய தொலைபேசிகளுக்காகக் காத்திருப்போரின் பட்டியலிலுள்ளோரின் எண்ணிக்கை 224,411 இல் தொடர்ந்து உயர்ந்து விளங்கி, வளர்ச்சியடைந்து செல்லும் கேள்வியைப் பிரதிபலித்தது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புக்களுக்காகக் காத்திருக்கும் நேரம் 1990இன் முற்பகுதிகளினது கிட்டத்தட்ட 10 ஆண்டுகளிலிருந்து 1998 இறுதியளவில் 3 மாதத்திலிருந்து 12 மாதம் வரையான காலப்பகுதியாக கணிசமானளவில் குறைக்கப்பட்டதுடன், இது பரிவர்த்தனைப் பிரதேசம் மற்றும் கம்பி இணைப்புக்களின் கிடைப்பனவு ஆகியவற்றில் தங்கியிருந்தது. தனியார் கம்பியில்லாத் தொலைபேசித் தொழிற்பாட்டாளர்கள் ஒருசில வாரங்களுக்குள் தமது பணியை வழங்குவதில் காத்திருப்போர் பட்டியல் அங்கு காணப்படவில்லை. பன்னாட்டு சுற்றுக்களின் மொத்த எண்ணிக்கையும் 26 சதவீதத்தால் அதிகரித்து 2,158ஆக

விளங்கியது. பன்னாட்டு தொலைத் தொடர்பூட்டல் வசதிகளை அதிகளவில் பெறக்கூடியதாயிருந்தமையால் பன்னாட்டு நேரடித் தொலைபேசி வசதிகள் மீதான கட்டுப்பாடுகளும் 1998இல் கணிசமான அளவில் தளர்த்தப்பட்டன.

தொலைத் தொடர்பூட்டல் துறையில் ஸ்ரீ லங்கா ரெலிகொம்மின் மொத்த முதலீடானது 1998இல் ரூ. 11,177 மில்லியனாக விளங்கியது. இரண்டாவது தொலைத் தொடர்பூட்டல் செயற்றிட்டம் ஏறக்குறைய ஐ.அ.டொலர் 200 மில்லியன் செலவில் 1998 இறுதியளவில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. செயற்றிட்டத்தின் வெளிநாட்டுச் செலவான ஏறக்குறைய ஐ.அ.டொலர் 120 மில்லியன் கொண்ட தொகை முக்கியமாக பன்னாட்டு அபிவிருத்திச் சபையினால் நிதியிடப்பட்ட வேளையில் இதன் இணை நிதி வழங்குனர்களாக, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பானின் கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம், ஏரீஅன்ட்ரீ மற்றும் யூஎன்டிபி/ அய்ரியு ஆகியன விளங்கின. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம், தொலைத் தொடர்பூட்டல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1996 - 2000இன் கீழ் கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் பிரெஞ்சு வெளிநாட்டு ஒழுங்கு மரபுப் பிரிவு, சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் நிலையம், கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் போன்ற கொடை முகவர் நிலையங்களின் உதவியுடன் ரூ.11 பில்லியன் செலவில் தொலைத் தொடர்பு செயற்றிட்டங்கள் பலவற்றினை மேற்கொள்ளுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்ட முக்கிய நடவடிக்கைகள், கண்டி, மாத்தளை, அட்டன் மற்றும் களுத்துறைப் பகுதிகளில் வெளிப்பொறி இயலளவினை 61,000 முதன்மைக் கம்பிச் சோடிகளினால் விரிவாக்குவதனையும், கம்பகாவில் 28,500 முதன்மைக் கம்பிச் சோடிகளினால் விரிவாக்குவதனையும், கொழும்பு மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் 30,000 வாடிக்கையாளர் இணைப்புக்களையும், நகரங்களுக்கிடையிலான 12,000 தொலைபேசி இணைப்புக்களையும் வழங்குவதனையும், கொழும்பு நகரப் பகுதியில் கம்பி இணைப்பு இயலளவினை 36,000 மேலதிக இணைப்புக்கள் மூலம் விரிவாக்குவதனையும் உள்ளடக்கியுள்ளன. அத்துடன், கம்பி இணைப்பு இயலளவை இரு கட்டங்களில் 144,000 இணைப்புக்களினால் விரிவாக்கவும் இழைய ஒளி கடத்தல் முறையை நிறுவுவதற்குமான கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் கொழும்பு நகரப் பகுதிகளில் உள்ளூர் வலையமைப்பு விரிவாக்கச் செயற்றிட்டமொன்றை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் நடைமுறைப்படுத்துகின்றது. மேலும், அதிகரித்துச் செல்லும் கேள்வியை ஈடு செய்வதற்காக, தற்போதுள்ள பரிவர்த்தனைகளை 100,000 இணைப்புக்களால் அதிகரிப்பதற்கென ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்துகின்றது.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் துணை நிறுவனமொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை தொலைத் தொடர்பூட்டல் பணிகளானது, நகரங்களையும் கிராமப் பகுதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் ஏறக்குறைய 200,00 பரிவர்த்தனை இணைப்புக்களையும், 250,000 முதன்மைக் கம்பி சோடிகளையும் நிறுவும் நோக்கில் 150 கே இணைப்பு தொலைத் தொடர்பூட்டல் அபிவிருத்தி செயற்றிட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. 1996இல் இச் செயற்றிட்டம் தொடங்கியதுடன், 1998இன் இறுதியில் ஏறக்குறைய 149,200 பரிவர்த்தனை இணைப்புக்களும், 193,000 முதன்மைக் கம்பிச் சோடிகளும் வலையமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1998இல் 68,096 இணைப்புக்களின் இயலளவைக் கொண்ட 40 தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. பரிவர்த்தனை இயலளவுகள் மற்றும் ரெலிகொம் வலையமைப்பினது முதன்மைக் கம்பிச் சோடிகள் ஆகியவற்றுடன் வலையமைப்பினது கொண்டு செல்லும் செயற்றிறனும் அதிகரிக்கப்பட்டது. 150 கே செயற்றிட்டத்தின் கீழ் 15 மாவட்டங்களில் 58 இலக்க வான் அலை முறைகளும், 50 இழைய ஒளி முறைகளும் நிறுவப்பட்டன.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் 1998இல் பல புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியது. சிப்ப இணைப்பு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் இயக்க நெடுந்தொலை மின்வழி அஞ்சல் வசதியானது கணனி வலையமைப்புக்களுக்கிடையில் பெருமளவிலான தரவுகளை அதிவேகத்தில் மாற்றல் செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. தனியான 2 கம்பித் தொலைபேசி இணைப்பினூடாக இதேபோன்ற ஒலிக் கடத்தலுக்காகவும் ஒலி/தொலைநகல்/தரவு மற்றும் படிவம் ஆகியவற்றைப் பெறுவதற்காகவும் அய்எஸ்டீஎன் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இது அதிவேக படிவ மற்றும் தரவு மாற்றல், தொலைபேசியூடான மாநாட்டு நிகழ்வுகள் மற்றும் அழைப்புக்களை அடையாளம் காணல் போன்றவற்றை உள்ளடக்கிய பணிகளை வழங்கியது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் தொடர்ந்தும் பொது பே போன்களை நிறுவுவதிலும், இணைய மற்றும் இலத்திரனியல் அஞ்சல் (ஈ மெயில்) பணிகளையும் சிப்ப இணைப்பு வசதிகளையும் வழங்குவதில் ஈடுபட்டிருந்தது. 1998இன் இறுதியில் 1,587 பொது பே போன்களை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் நிறுவியிருந்தது. இணையத்துக்கும், இலத்திரனியல் அஞ்சல் வசதிகளுக்குமாக 8,560 வாடிக்கையாளர்களும், சிப்ப இணைப்புக்கு பன்னிரண்டு வாடிக்கையாளர்களும் காணப்பட்டனர். 1998இன் இறுதியில் வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுக்

சிறப்புக்குறிப்பு 5

## 2000 ஆம் ஆண்டு (வை 2 கே) அறைகூவல்

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட மேம்பாடானது இந்த நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க பெறுபேறு ஒன்றாகும். கணனித் தொழில் நுட்பத்திலும் தொடர்பூட்டலிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தூரம் மற்றும் காலம் என்பன தொடர்பான உயர்வுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த நுற்றாண்டுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டில் மேலும் அபிவிருத்திகளை எதிர்பார்க்கலாம்.

எனவே, அதே தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வை2கே பிரச்சனையை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்தமை வஞ்சகச் செயலாகத் தோன்றுகின்றது. ஆயிரம் ஆண்டுகளின் மாற்றத்தினைக் கருத்திற் கொள்ளாது இரண்டை எண் ஆண்டுக் குறியீட்டைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள பல பொறிகளிலும் கருவிகளிலும் பயன்படுத்தப்படும் கணனி வன்கலங்களிலும் மென் கலங்களிலும் நுண்பாகங் களிலும் இப்பிரச்சனை எழுகின்றது. இப்பிரச்சினையானது கணனிகளைக் குழப்பவோ செயலறச் செய்யவோ அல்லது முற்றாக முடிவிடவோ முடியும்.

இப்பிரச்சனையானது தனியான தகவல் தொழில் நுட்பப் பிரச்சனை ஒன்று மட்டுமல்ல. இது ஒரு வாணிப பிரச்சனையாக விளக்கம் காணப்பட்டுள்ளது. இது ஒரு நாட்டுக்கோ அல்லது சமூகத்தின் ஏதேனும் துறைகளுக்கு மட்டுப்படுத்தப பட்டதல்ல. ஆனால் முழு உலகையும் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் பாதிக்கின்றது. எனவே இதனை நிவர்த்தி செய்வது ஒவ்வொரு அமைப்பினதும் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

இதற்கான தீர்வு தொழில்நுட்ப விடயமொன் றாகும். ஏற்கனவே உள்ள முறையில் கணனியின் குறியீட்டு வரிகளைக் கண்டுபிடித்து மீள எழுதுவது கடினமானதும் நேரம் செல்லக்கூடியதுமாகும். இசைவுக் கான இறுதி நாள் (31.12.1999) நிர்ணயிக்கப்பட்டு ள்ளதோடு காலத்தை மேலும் நீடிப்பது சாத்தியமான தல்ல. நிவாரண வழிமுறைகள் சாத்தியப்படாதவிடத்து கணனி முறைகள் புதிய முறைகளினால் மாற்றீடு செய்யப் படல் வேண்டும். துணை ஆதார திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும். எனவே தீர்வு காண்பதானது சலிப்பூட்டக் கூடியதோடு பெருமளவிலான நிதியியல் மற்றும் மனித மூலவளங்களையும் தேவைப்படுத்துகின்றது.

1998 யூலை 14ஆம் நாளன்று வை2கே விடயம் சம்பந்தமாக வாசிங்டன் நகரில் உள்ள தேசிய விஞ்ஞானக் கலைக் கழகத்தில் சனாதிபதி கிளிங்டன் உரையாற்றியபோது இப் பிரச்சனையின் சிக்கலான தன்மை விவரிக்கப்பட்டது. ஒன்றில் ஒன்று தங்கியுள்ள நிறுவனங்களுக்காக பில்லியன் கணக்கிலான வரிகளை மீள எழுதுவதற்கு மில்லியன் கணக்கிலான மணித்தியாலங்கள் தேவையாக உள்ளது எனவும் இது தெளிவாகவே வரலாற்றிலேயே மிகச் சிக்கலான முகாமைத்துவ அறை கூவலாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். முக்கிய வங்கிகளில் ஒன்றான சாஸ் மன்கட்டன் வங்கியினைக் கவனிப்போம் 200 மில்லியன் குறியீட்டு வரிகளினூடாக அது செல்ல வேண்டியுள்ள தோடு மேசைக்குள் மேல் உள்ள 70,000 கணனிகளையும் 600 வேறுபட்ட மென்கல விற்பனையாளர்களின் 1000 மென்கலத் தொகுதிகளையும் அது பரீட்சிக்க வேண்டும்.

இலங்கையில் இப்பிரச்சனைஅவ்வளவு தீவிரமானதாக இருக்காது. எனினும் அரசாங்க நிறுவனங்கள் வங்கிகளும், நிதியியல் துறையும், விமான நிலையங்களும், துறைமுகங்களும், தொலைத் தொடர்பு, வலுவும் சக்தியும் போன்ற பல முக்கிய விடயங்களில் அதனது தாக்கம் மிகக் கடுமையாகக் காணப்படுவதோடு பொருளாதாரத்திலும் மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் தடங்கல்களை ஏற்படுத்தக் கூடும்.

வை2கே பிரச்சனையினைக் கையாளுவது தொடர்பாக அரசாங்க நிறுவனங்களைக் கண்காணித்து வழிகாட்டல்களை வழங்குவதற்காக அமைச்சரவையின் பணிப்புரையொன்றின் பேரில் 1998 மேயில் தகவல் தொழில்நுட்பக் கழகத்தின் கீழ் தேசிய பணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. வை2கே நிவாரண நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப் பதற்காகவும் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் துறைக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காகவும் மத்திய வங்கியிலும் பணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிதியியல் துறையினையும் உள்ளடக்கி அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வை2கே தயார் நிலையை அறிவிக்கும் அறிக்கையொன்றினை 1998 திசெம்பர் 16ஆம் நாளன்று தேசிய பணிக்குழு சனாதிபதியிடம் ஒப்படைத்தது.

மேற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களுக்கான இறுதி நாளை நிர்ணயித்து வங்கிகள் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களை 1998 மேயில் மத்திய வங்கி வழங்கியது. வங்கிகளில் வை2கே செயற்றிட்டங்களை மீளாய்வு செய்து அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்தின் நிதியியல் பணிகள் மேலாண்மையிலிருந்து ஆலோசகர்

ஒருவரும் நியமிக்கப்பட்டார். வங்கிகளினதும் நிதியியல் நிறுவனங்களினதும் பணிப்பாளர் சபையினையும் உள்ளடக்கி உயர் முகாமையாளர்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான கருத்தரங்கு ஒன்று 1998 ஒகத்தில் நடாத்தப்பட்டது. பொது மக்களிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்காக தினசரிப் பத்திரிகைகளில் பத்திரிகை விளம்பரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

1999 யூனினை இலக்காகக் கொண்டு அந்த நாளில் நாட்டின் அனைத்து வங்கிகளும் 2000ஆம் ஆண்டு மாற்றத்துக்காக தமது முறைகளை முழுமையாகப் பரிசோதித்து வைத்திருக்க வேண்டுமென்பதற்காக மத்திய வங்கி செயற்பட்டு வருகின்றது. மத்திய வங்கி தனது சொந்த முறைகளின் நிவாரண வேலைகளை 1996இல் தொடங்கியதோடு 2000 ஆம் ஆண்டு இசைவினை உறுதி செய்து கொள்வதற்காக தீவிரமான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் அலுவல்களுடன் இணைந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்கள் வர்த்தக வங்கிகளினதும் சிறப்பியல்பு வங்கிகளினதும் வை2கே நிவாரண செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

2000ஆம் ஆண்டுத் தயார் நிலைக்கு நிவாரணம் தேவைப்படும் ஒவ்வொரு செயல் முறையினையும் தயார் படுத்துவது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இயலும் என்பது பெரும்பாலும் சாத்தியமாகாத விடயமாயினும் தாம் மேற்கொள்ளும் பணிக்கு தீர்க்கமாகப் பிரயோகிக்கப்படும் அதாவது தமது நடவடிக்கைகளை தொழிற்பாட்டில் வைத்திருப்பதற்கும் தேவைப்படும் விடயங்களை பரீட்சித்து சரிபார்த்து வைத்திருப்பது அத்தியாவசியமாகும்.

பொதுவான குறிக்கோள் ஒன்றுக்காக போட்டித் தன்மை கொண்ட அனைத்து நிறவனங்களினதும் அவற்றின் நன்மை கருதி ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய நிலைகளில் இதுவும் ஒன்றாகும். ஒருவர் இன்னொருவரை எதிராகப் பாதிக்கக்கூடிய பிரச்சனையொன்றாக இது காணப்படுகின்றது. எனவே 2000ஆம் ஆண்டு இசைவினை எய்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தகவல்களையும் மூலவளங்களையும் பகிர்ந்து கொள்ளுவதன் மூலமான கூட்டு முயற்சிகள் அத்தியாவசியமாகின்றன. அனைத்து வங்கிகளும் தமது அனைத்து கணனி முறைகளையும் திருத்திக் கொண்டிருந்தாலும் கூட வலு அல்லது தொலைத் தொடர்பு முறைகள் செயற்படாவிட்டால் வங்கிகளினால் சுலபமாகச் செயற்படமுடியாது. நாடுகளுக்கிடையேயான நிதியியல் முறைகளில் ஒன்றுக்கொன்று தங்கியிருக்கும் நிலை அதிகளவில் காணப்படுகின்றமையினால் ஒரு நாட்டில் ஏற்படும் தடங்கலானது ஏனைய நாடுகளையும் மோசமாகப் பாதிக்கக்கூடும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உதவி வழங்குவதில் பல பன்னாட்டு அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கி தகவல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கும் நுண்பொறி நிலை இடங்களைக் கொண்டுள்ளதோடு பலதரப்பட்ட முக்கிய நிறுவனங்களின் வை2கே செயற்றிட்டங்களின் தகுநிலை தொடர்பான நடவடிக்கைகளின் சரிபார்ப்புப் பட்டியல்களையும் தகவல்களையும் வழங்குகின்றன.

உலக வங்கி அதனது "இன்போடெவ்" நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அத்தகைய உதவிகள் தேவைப்படும் அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஐ.அ.டொலர் 100,000 கொண்ட திட்டமிடல் கொடை மற்றும் ஐ.அ.டொலர் 500,000 கொண்ட நடைமுறைப்படுத்தல் கொடை ஆகிய இரு கொடைகளை வழங்கியது. பொருளாதாரத்தில் அதனது வை2கே நிவாரணத் திட்டத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் ஐ.அ.டொலர் 100,000 கொண்ட திட்டமிடல் கொடையை இலங்கை ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளது. சின்டெக் இன் ஊடாக இது கிடைக்கச் செய்யப்படும். நடைமுறைப் படுத்தும் கொடைக்கான முன்மொழிவுகளையும் சின்டெக் தயாரித்து வருகின்றது. இதற்கு மேலதிகமாக இந்தப் பிரச்சனைகளைக் கையாளுவதற்காக நிதியியல் துறைக்கும் அதி முக்கியத்துவம் வாய்ந்த அரசதுறை நிறுவனங்கள் சிலவற்றுக்கும் உதவி வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கி உலக வங்கியிடமிருந்து கடன் ஒன்றைக் கோரியுள்ளது. உலக வங்கி அதனது பொதுவான நடவடிக்கை முறைகளின் பலவற்றை இலகுபடுத்தி கோரிக்கை விடுக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் இந்தக் கடனைத் தயார்படுத்தியது. ஐ.அ.டொலர் 29 மில்லியனைக் கொண்ட இந்த இலகுக் கடன் இலங்கைக்கு மிகவும் சாதகமான நியதிகளினதும் நிபந்தனைகளினதும் கீழ் வழங்கப்பட்டது. வங்கிகளுக்கும் சில முக்கிய அரச நிறுவனங்களுக்கும் நிதியங்கள் கிடைக்கத்தக்கதாக இருக்கும். மத்திய வங்கியின் அலுவலர்களை உள்ளடக்கிய வங்கித் தொழில் துறைக்கானதும் நிதியமைச்சின் அலுவலர்களை உள்ளடக்கிய ஏனைய அரசதுறை நிறுவனங்களுக்கானதுமான இரு செயற்றிட்ட ஒருங்கிணைப்பு அலகுகள் தற்போது தொழிற்படுவதுடன் கடனின் பகிர்ந்தளிப்பையும் மேற்பார்வை செய்து வருகின்றன.

உறுதியான முயற்சியுடன் உலகம் எதிர்கொள்ள வேண்டியுள்ள மிகப் பெரிய முகாமைத்துவ அறைகூவலாக இது காணப்படுகின்றது என்பதில் சந்தேகமேயில்லை. இந்தப் பிரச்சனையை வெற்றிகரமாக எதிர் கொள்ளுவதற்காக அனைவரும் அவர்களினது பங்கினை வழங்க வேண்டும். இணைந்து செயற்படுவதன் மூலம் உடனடியாகச் செயற்படுவதன் மூலமும் இது வெற்றிகரமாக எதிர் கொள்ளப்பட்ட அறைகூவல் ஒன்றாக மாறலாம்.

கிணங்க ஒப்பந்த அடிப்படையிலான 247 உள்நாட்டு இயக்க நெறிகளையும் வெளிநாட்டு இயக்க நெறிகளையும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் வழங்கியது. 2002ஆம் ஆண்டின் இறுதியளவில் காத்திருப்போர் பட்டியலை இல்லாமற் செய்யும் நோக்குடன் நடுத்தர கால கேள்வியின் முன்மதிப்பீட்டின் அடிப்படையில் 1999-2003 காலப்பகுதியை உள்ளடக்கி 5 ஆண்டு நடுத்தர கால விரிவாக்கத் திட்டமொன்றை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் வரைந்தது. இத் திட்டத்தின்கீழ் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் ஏறக்குறைய ரூ.20 பில்லியனை முதலீடு செய்யுமென எதிர்பார்க்கப் படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அனுமதி பெறுவதிலேற்பட்ட தாமதம், அரச ஒப்புதல்கள், வங்கி உத்தரவாதங்களைப் பெறுவதிலேற் பட்ட தாமதம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுடன் சம்பந்தப்பட்ட தாமதம் ஆகியனவே தொலைத் தொடர்பூட்டல் செயற்றிட்டங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றத் தடையாயிருந்த காரணங்களாகும்.

1998இல் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மொத்த வருவாய் 19 சதவீதத்தால் அதிகரித்து ரூ.16,388 மில்லியனாக விளங்கியது. வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1999இன் 30 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வருவாயின் ஏறக்குறைய 33 சதவீதத்துக்கு வகைகூறின. வருவாயிலேற்பட்ட இவ்வதிகரிப்புக்கு, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அழைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வைகளைச் சமப்படுத்தும் நோக்குடன் 1998 ஏப்பிரலிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட தீர்வைத் திருத்தமே ஓரளவுக்குக் காரணமாகும். மாதாந்த வாடகைப் பணம் ரூ.80 இலிருந்து ரூ.180இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில், உள்நாட்டு அழைப்புக் கட்டணங்கள் மாதாந்தம் 200 அலகுகளுக்கு மேல் தொலைபேசி பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு ரூ.1.10இலிருந்து ரூ.1.65இற்கு உயர்த்தப்பட்டது. எனினும், ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறவனத்தின் தொழிற்பாட்டுச் செலவுகளும் ஏறக்குறைய 25 சதவீதத்தால் அதிகரித்தமையால் வரிக்குப் பிந்திய வருவாய்கள் ஏறக்குறைய 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ.1,825 மில்லியனாக விளங்கின. 1998 காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் தொழில் வாய்ப்புக்கள் 4 சதவீதத்தால் அதிகரித்து 8,648ஆக விளங்கின. 1998இல் புதிதாக வழங்கப்படும் தொலைபேசிகள் விரைவாக அதிகரித்தமையால் ஊழியரொருவருக்கான தொலைபேசிகளின் எண்ணிக்கை 37.8இலிருந்து 1998இல் 52.7இற்கு அதிகரித்தது.

தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் தனியார் துறைத் தொழிற்பாட்டாளர்களினது செயலாற்றம் 1998 காலப்பகுதியில் மேலும் முன்னேற்றமடைந்தது. ரேடியோ பேஜிங் பணிகள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பணிகளினதும் வாடிக்கையாளர் வலையமைப்பு 1998இல் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. நான்கு செலூலர் தொலைபேசித் தொழிற்பாட்டாளர்களினதும் வாடிக்கையாளர் வலையமைப்பானது 52 சதவீதத்தால் அதிகரித்து 1998இன் இறுதியில் 174,202ஆக விளங்கியது. செலூலர் பணிகளிலான திரண்ட மொத்த முதலீடும் 29 சதவீதத்தால் அதிகரித்து ரூ.8,842 மில்லியனாக விளங்கியது. 1998இன் இறுதியில் நிறுவப்பட்ட பே போன்களின் மொத்த எண்ணிக்கை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தையும் உள்ளடக்கி 79 சதவீதத்தால் அதிகரித்து 4,610ஆக விளங்கியது. புதிய கம்பனியொன்றும் இப்பணியில் சேர்ந்து கொண்டமையால் இவ்வாண்டில் திரண்ட முதலீடு 52 சதவீதத்தால் அதிகரித்து ரூ.1,090 மில்லியனாக விளங்கியது. ரேடியோ பேஜிங் பணிகளினது வாடிக்கையாளர் வலையமைப்பானது ஏறக்குறைய 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு, ஏனைய கம்பியில்லா வசதிகளின் பயன்பாடு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளையில் தரவுத் தொடர்பூட்டல் பணிகளுக்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 62 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்து 19,019ஆக விளங்கியது. 1998இல் இரண்டு கம்பியில்லா உள்ளூர் இணைப்புத் தொலைத் தொலைபேசித் தொழிற்பாட்டாளர்கள் 41,550 புதிய இணைப்புக்களை வழங்கினர். இதன் விளைவாக கம்பியில்லா உள்ளூர் இணைப்புக்களின் வாடிக்கையாளர் வலையமைப்பானது 1998இன் இறுதியில் 158 சதவீதத்தால் அதிகரித்து 67,931ஆக விளங்கிய வேளையில், இத்துறையிலான முதலீடு 37 சதவீதத்தால் அதிகரித்து ரூ.9,291 மில்லியனாக விளங்கியது. ஸ்ரீ லங்கா ரெலிகொம் தொலைபேசியையும் கம்பியில்லா உள்ளூர் இணைப்புத் தொலைபேசிகளையும் ஒன்றாகப் பார்க்கையில் தொலைபேசிச் செறிவானது தொலைபேசியொன்றுக்கு 30 ஆட்கள் என்ற வகையில் மேம்பட்டிருந்தது. 1998 இறுதியில் தனியார் தொடர்பூட்டல் துறையிலுள்ள மொத்த தொழில்நிலை 8,599ஆக விளங்கியது.

## 5.5. வலு

வலுத்துறையானது பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் விலைகளின் வீழ்ச்சி மற்றும் நீரேந்து பகுதிகளில் காணப்பட்ட திருப்திகரமான மழைவீழ்ச்சி என்பனவற்றினால் பயனடைந்தது. 1998இல் இலங்கை மின்சபை நீர் மின்வலுவின் உள்ளார்ந்த வளத்தில் கிட்டத்தட்ட 98 சதவீதத்தினை பயன்படுத்தக்கூடியதாக இருந்ததுடன் 3,908 கிகாவாட் மணித்தியால மின் வலுவையும் உருவாக்கியது. கட்டி, தொழிற்படுத்தி, மாற்றல்செய் என்ற அடிப்படையில் 51 மெகாவாட் புதிய தனியார்துறை வலுப் பொறியொன்று தொழிற்படத் தொடங்கியதையடுத்து வெப்பமின்வலு

உருவாக்கத்தால் இயலளவு 1998இல் 497 மெகாவாட்டிற்கு அதிகரித்துள்ளது. இதன்விளைவாக மொத்த வலு உருவாக்க இயலளவு கிட்டத்தட்ட 4 சதவீதத்தால் 1,636 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. இந்நிகழ்வுகள் செலவுமிக்க வாடகைக்கமர்த்தப்பட்ட வலுப் பொறிகளை 1998 மேயில் முழுமையாக தொழிற்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு இலங்கை மின்சார சபைக்கு இயலச்செய்தன. மின்வலு சுய உருவாக்கமும் இவ்வாண்டில் கணிசமாக குறைவடையச் செய்யப்பட்டது. வலுவிற்கான கேள்வி 1998இல் 12 சதவீதத்தினால் 4,509 கிகாவா இற்கு உயர்வடைந்தது.

நீர் மின்வலுவில் அதிகமாக தங்கியிருத்தலை குறைக்கும்பொருட்டு தனியார் துறை அரசதுறை ஆகியவிரண்டினாலும் வெப்ப மின்வலு இயலளவை விரிவாக்குதில் அண்மைக் காலத்தில் சிறப்பான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய வலுக் கொள்கையானது வழங்கல் நம்பகத் தன்மையை அதிகரித்து நுகர்வோருக்கான விலையை குறைப்பதற்காக தனியார் துறை முதலீட்டினை ஈர்த்துக் கொள்வதன் மூலம் இத்துறையில் போதுமான முதலீட்டு மட்டமொன்றினை எவ்வேளையிலும் பேணுவதனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தனியார் துறையானது குறிப்பாக வெப்ப மின்வலு மற்றும் சிறியளவிலான நீர் மின்வலு என்பனவற்றின் உருவாக்கத்தில் முக்கியமான தொரு பங்கினை ஆற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## மின்வலு

1998இல் நாட்டின் வலு உருவாக்க நிறுவப்பட்ட இயலளவு 4 சதவீதத்தினால் 1,636 மெகாவாட்டுக்களுக்கு அதிகரித்தது. இயலளவின் முழு அதிகரிப்பும் சுயாதீனமான வலு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்பட்டதாகும். இதன்விளைவாக நிறுவப்பட்ட இயலளவின் நீர்மின்வலுவில் தங்கியிருத்தல் முன்னைய ஆண்டு இறுதியின் 72 சதவீதத்திலிருந்து 69 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. வரையறுக்கப் பட்ட ஆசியா பவர் (பிறைவற்) நிறுவனம் ஐ.அ.டொலர் 62 மில்லியன் செலவில் நிருமாணிக்கப்பட்ட அதன் 51 மொகாவாட்டு டீசல் வலுப் பொறியினை 1998 மேயில் இயக்கத் தொடங்கியது. மாலபே என்ற இடத்தில் 8.2 மெகாவாட்டு டீசல் வலுப் பொறியினை உடைமையாக கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட கூல் எயார் வெஞ்சர் (பிறைவற்) நிறுவனம் 1998 நவெம்பரில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் செலவில் மற்றுமொரு 10 மெகாவாட்டு டீசல் வலுப் பொறியினை காங்கேசன்துறையில் நிறுவியது. எனினும் மின் கடத்தி மற்றும் விநியோக இணைப்புக்கள் என்பன இன்னும் முழுமையாக மீளவமைக்கப்படாமையினால் இப்பொறியானது அதன் உச்ச இயலளவு மட்டத்தில் தொழிற்படவில்லை. இதேவேளை ரிட்டிகஹா ஓயா (0.112 மெகாவாட்) மற்றும் இறக்குவான கங்கை (0.76 மெகாவாட்) ஆகியவிரு சிறு வலுச் செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் செயற்படத் தொடங்கியதையடுத்து தனியார் நீர் மின்வலு உருவாக்கல் இயலளவும் 2.2 மெகாவாட்டிற்கு அதிகரித்தது.

இலங்கை மின்சபையுடன் பதிவு செய்து கொண்டுள்ள சுய மின் உருவாக்கம் உள்ளிட்ட மொத்த வலு உருவாக்கம் 1997இல் பதிவுசெய்யப்பட்ட 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1998இல் 10 சதவீதத்தினால் 5,673 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தது. மொத்த வலு உருவாக்கத்தில் 69 சதவீதத்திற்கு வகைகூறும் நீர் மின்வலு முன்னைய ஆண்டின் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது 1993இற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட அதிகூடிய வளர்ச்சியாகும். அதிகரிக்கும் கேள்வியினை ஈடுசெய்வதற்காக வெப்ப மின்வலு உருவாக்கம் மேலும் 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இலங்கை மின்சபை மூலங்களிலிருந்தான மின்சக்தி உருவாக்கம் 1998இல் 15 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை 1997இறுதியில் செயற்படத் தொடங்கிய லக்டனாவி வலுப்பொறி (22.5 மெகாவாட்) 1998 முழுவதும் தொழிற்பட்டமையினாலும் ஆசிய வலுப்பொறி (51 மெகாவாட்) 1998 மேயில் செயற்படத் தொடங்கிய திலிருந்து தொழிற்பாட்டில் இருந்தமையினாலும் சுயாதீனவலு உற்பத்தியாளர்களின் வலு உருவாக்கம் 1997இன் 17 கிகாவாட் மணித்தியாலங்களிலிருந்து 393 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு கணிசமாக வளர்ச்சியடைந்தது. லக்டனாவி வலுப்பொறி ஆண்டொன்றுக்கு 168 கிகாவாட் மணித்தியாலங்களை உருவாக்கக்கூடிய இயலளவைக் கொண்டுள்ள வேளையில் ஆசியா வலுப் பொறி ஆண்டொன்றிற்கு 330 கிகாவாட் மணித்தியாலங்களை உருவாக்கக்கூடிய இயலளவைக் கொண்டுள்ளது. அதேவேளை, இலங்கை மின்சார சபை பட்டியலிடப்பட்டவாறே மாச்சு – யூனிலும் மீண்டும் திசெம்பரிலும் மின்வலு சுய உருவாக்கத்தினை அனுமதித்தது. பதிவுசெய்யப்பட்ட சுய மின்சக்தி உருவாக்கம் 1998இல் 108 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி 1997உடன் ஒப்பிடுகையில் 54 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இலங்கை மின்சார சபையினால் வாடகைக்கமர்த்தப்பட்ட வலுப் பொறிகளினால் உருவாக்கப்பட்ட வெப்ப மின்வலுவிற்கான செலவு 49 சதவீதத்தினால் ரூ.2,751 மில்லியனிற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு குறிப்பாக 1997 யூலையிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தீர்வை விலக்களிக்கப்பட்ட விலைகளில் எரிபொருள் வழங்கியமை காரணமாக அமைந்தது. இதேவேளை சுயாதீன வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வலுவிற்கான செலவு ரூ.1,776 மில்லியனை

அட்டவணை 5.5
## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள்

| விடயம் | அலகு | 1996 | 1997 | 1998(அ) | சதவீத மாற்றம் 1997 | சதவீத மாற்றம் 1998 |
|---|---|---|---|---|---|---|
| **1. மின்வலு** | | | | | | |
| கிடைக்கத்தக்க இயலளவு | மெ.வா. | 1,453 | 1,595 | 1,636 | 10 | 3 |
| நிறுவப்பட்ட இயலளவு | " | 1,409 | 1,575 | 1,636 | 12 | 4 |
| இ. மி. சபை – நீர் மின் | " | 1,137 | 1,137 | 1,137 | 0 | 0 |
| வெப்ப மின் | " | 272 | 405 | 405 | 49 | 0 |
| தனியார் – நீர் மின் | " | - | 1.5 | 2.2 | - | 47 |
| வெப்ப மின் | " | - | 30.7 | 91.7 | - | 199 |
| வாடகைக்குப் பெறப்பட்ட தனியார் வலு | " | 44 | 20 | - | -55 | |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | கி.வா.ம. | 4,530 | 5,145 | 5,673 | 14 | 10 |
| இ.மி. சபை – நீர் மின் | " | 3,249 | 3,443 | 3,908 | 6 | 14 |
| வெப்ப மின் | " | 974 | 1052 | 1246 | 8 | 18 |
| தனியார் வலு – நீர் மின் | " | 3 | 4 | 5 | 33 | 25 |
| வெப்ப மின் | " | - | 13 | 388 | - | 2,885 |
| வாடகைக்குப் பெறப்பட்ட தனியார் வலு | " | 152 | 398 | 18 | 162 | -95 |
| சுய உற்பத்தி | " | 152 | 235 | 108 | 55 | -54 |
| மொத்த விற்பனைகள் | " | 3,740 | 4039 | 4509 | 8 | 12 |
| உள்நாட்டு | " | 1,046 | 1213 | 1368 | 16 | 13 |
| கைத்தொழில் (ஆ) | " | 1,513 | 1430 | 1612 | -5 | 13 |
| வர்த்தகம் | " | 592 | 689 | 757 | 16 | 10 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | " | 542 | 657 | 722 | 21 | 10 |
| தெரு விளக்குகள் | " | 47 | 50 | 50 | 6 | 0 |
| 2. பெற்றோலிய உற்பத்திகள் | | | | | | |
| இறக்குமதிகளின் அளவு | | | | | | |
| மசகெண்ணெய் | '000 மெ.தொன்கள் | 2,033 | 1,814 | 2,034 | -11 | 12 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | " | 729 | 1,084 | 692 | 49 | -36 |
| திரவப் பெற்றோலிய வாயு | " | 71 | 87 | 98 | 23 | 13 |
| இறக்குமதிகளின் பெறுமதி (கொ.க.) | | | | | | |
| மசகெண்ணெய் | ரூ.மில். | 16,809 | 15,584 | 13,240 | -7 | -15 |
| | ஐ.அ.டொ.மில். | 304 | 263 | 205 | -13 | -22 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ.மில். | 8,465 | 12,467 | 5,966 | 47 | -52 |
| | ஐ.அ.டொ.மில். | 153 | 212 | 92 | 39 | -57 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ.மில். | 1,237 | 1,635 | 1,568 | 32 | -4 |
| | ஐ.அ.டொ.மில். | 22 | 28 | 24 | 27 | -14 |
| மசகெண்ணெயின் சராசரி விலை (கொ.க.) | ரூ. பீப்பா | 1,116 | 1,155 | 8874 | 3 | -23 |
| | ஐ.அ.டொ. / பீப்பா | 20.19 | 19.42 | 13.63 | -4 | -30 |
| ஏற்றுமதிகளின் அளவு | '000 மெ.தொன்கள் | 661 | 547 | 468 | -17 | -14 |
| ஏற்றுமதிகளின் பெறுமதி | ரூ.மில். | 5,740 | 6,131 | 4,665 | 7 | -24 |
| | ஐ.அ.டொ.மில். | 104 | 95 | 72 | -9 | -24 |
| உள்நாட்டு விற்பனைகள் | '000 மெ.தொன்கள் | 2,120 | 2,321 | 2,436 | 9 | 5 |
| சிறப்புப் பெற்றோல் | " | 197 | 193 | 203 | -2 | 5 |
| தன்னியக்க டீசல் | " | 1,048 | 1,295 | 1,181 | 24 | -9 |
| பார டீசல் (இ) | " | 87 | - | - | - | - |
| சிறப்பு டீசல் | " | 26 | 33 | 38 | 27 | 15 |
| மண்ணெண்ணெய் | " | 228 | 225 | 235 | -1 | 4 |
| உலை எண்ணெய் | " | 336 | 372 | 551 | 11 | 48 |
| அவுட்டூர் | " | 110 | 104 | 111 | -5 | 7 |
| திரவப் பெற்றோலிய வாயு | " | 88 | 99 | 117 | 13 | 18 |
| உள்நாட்டு விலை | | | | | | |
| சிறப்புப் பெற்றோல் | ரூ. / லீற்றர் | 50.00 | 50.00 | 50.00 | 0 | 0 |
| தன்னியக்க டீசல் | " | 13.20 | 13.20 | 13.20 | 0 | 0 |
| பார டீசல் | " | - | - | - | - | - |
| சிறப்பு டீசல் | " | 18.50 | 18.50 | 18.50 | 0 | 0 |
| மண்ணெண்ணெய் | " | 10.40 | 10.40 | 10.40 | 0 | 0 |
| உலையெண்ணெய் | " | | | | | |
| 500 செக்கன்ட் | " | 7.80 | 7.80 | 7.80 | 0 | 0 |
| 800 செக்கன்ட் | " | 7.50 | 7.50 | 7.50 | 0 | 0 |
| 1000 செக்கன்ட் | " | 7.20 | 7.20 | 7.20 | 0 | 0 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ. / கி.கி. | 22.30 | 23.07 | 23.07 | 3 | 0 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சுயஉருவாக்கம் நீங்கலாக
(இ) 1996 யூலையிலிருந்து பார டீசலின் விற்பனைகள் தன்னியக்க டீசலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலங்கள்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
இலங்கை மின் சபை.
வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயுக் கம்பனி.
வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் (பிறைவேட்)

அடைந்தமைக்கு 1998இல் கொள்வனவு செய்யப்பட்ட வலுவின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றே காரணமாக அமைந்தது. வலு கொள்வனவிற்கான உடன்படிக்கைகளின்படி இலங்கை மின்சபை நிதியியல் கட்டணம்/இயலளவு கட்டணம், எரிபொருள் கட்டணம், தொழிற்பாட்டுக் கட்டணம் மற்றும் செலுத்த வேண்டிய வரிகள் என்பனவற்றை கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப் பட்ட விலையில் லக்டனாவி வலுப் பொறியிலிருந்து ஆண்டொன்றுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட ஆகக்குறைந்த 168 கிகாவாட் மணித்தியாலங்களையும் ஆசியா பொறியிலிருந்து ஆண்டொன்றுக்கு 330 கிகாவாட் மணித்தியாலங்களையும் கொள்வனவு செய்கின்றது. அனைத்தையும் உள்ளடக்கிய ஆண்டுச் சராசரி கொள்வனவு விலை 1998இல் கிவாம ஒன்றிற்கு ரூ.4.58ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1998இன் சராசரித் தீர்வையான ரூ.4.47இனைவிட உயர்வாகக் காணப்பட்டது. எனினும் குறைந்த செலவுடைய நீர் மின்வலு பெருமளவில முழுமையாகப் பயன்படுத்தப் பட்டமையாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட தீர்வை விலக்களிக்கப்பட்ட எரிபொருள் வடிவிலான மறைமுக உதவு தொகையொன்றின் காரணமாகவும் மின்சக்தி அலகொன்றின் உருவாக்கத்துக்கான மேந்தலைச் செலவு 1998 இல் வீழ்ச்சியடைந்தமையினால் இலங்கை மின்சார சபைக்கு இது பாரிய பிரச்சினை ஒன்றைத் தோற்றுவிக்கவில்லை. எனினும், இலங்கை மின் சபைக்கும் கிடைக்கத் தக்கதாகவுள்ள மொத்த வலுவில் ஏனைய மூலங்களிலிருந்தான வலுவான கொள்வனவுகள் (கிட்டத்தட்ட 7 சதவீதம்) போதுமானதாகவில்லை.

மின்சக்திக்கான சராசரி தீர்வை 1998இல் கிட்டத்தட்ட 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது குறிப்பாக 1997 செத்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட பொதுவான தீர்வை திருத்தத்தின் விளைவால் ஏற்பட்டதாகும். இத் திருத்தத்தின்கீழ் சராசரி தீர்வை கிட்டத்தட்ட 11 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டது. மேலும் மாதமொன்றுக்கு 90 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு மேலாக நுகரும் நுகர்வோரின் மின்சார விலைப் பட்டியல்கள் மீது விதிக்கப்பட்ட பொருட்கள் பணிகள் வரியும் சராசரி தீர்வையின் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தது. தற்போதைய தீர்வை வீதங்களின்படி வீட்டுத் துறையினரது நுகர்வுக்கு வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளினால் உயர்ந்தளவில் துணையாதரவு வழங்கப்படுகின்றது. 1998இல் வீட்டுத் துறைக்கான சராசரி தீர்வை ரூ.3.11ஆகக் காணப்பட்ட வேளையில் வட்டிக் கொடுப்பனவு நீங்கலான சராசரி செலவு கிலோவாட் மணித்தியாலமொன்றிற்கு ரூ.3.50ஆக விளங்கியது. பொதுநோக்கங்களுக்கான மின்சக்திக்கான சராசரி தீர்வை வீதங்கள் கிகாவாட் மணித்தியாலமொன்றிற்கு ரூ.7.00ஆக அமைந்து சராசரி செலவிலும் இரு மடங்காக அமைந்து காணப்பட்டது. கைத்தொழில் நோக்கங் களுக்கான தீர்வை கிகாவாட் மணித்தியாலமொன்றிற்கு ரூ.5.20ஆக விளங்கி சராசரி செலவைவிட 49 சதவீதம் உயர்வானதாகக் காணப்பட்டது. வெப்ப மின்வலுவில் அதிகம் தங்கியிருப்பதன் காரணமாக மின்சக்தி உருவாக்கத்திற்கான உண்மைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. எனினும் அரசு இலங்கை மின்சார சபைக்கு தீர்வை விலக்களிக்கப்பட்ட விலையில் எரிபொருளை வழங்குவதற்கு இணங்கியதையடுத்து 1998இல் இன்னுமொரு தீர்வை அதிகரிப்பிற்கான தேவை தவிர்க்கப்பட்டது. இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்டுவந்த புரழ்வு வரிக்கான தீர்வையில் சீராக்கம் செய்யாது பொருட்கள் பணிகள் வரியினை நுகர்வோரில் சுமத்துவதனை அனுமதிக்கப்பட்டமை யினால் இலங்கை மின்சார சபை மேலும் பயனடைந்தது. மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய காரணங்களின் காரணமாக ஒரு அலகு மின்வலுவினை உற்பத்தி செய்வதற்கான சராசரிச் செலவு 1997இன் ரூ.4.50 இலிருந்து 1998இல் ரூ.3.50இற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எனினும் இவ்வகையிலான உட்கிடையானதும் புலப்பாடு அற்றதுமான தீர்வை மாற்றங்கள் இலங்கை மின்சாரசபை தீர்வை முறையில் நிலவும் குறைபாடுகளுக்கு நீண்டு நிலைத்திருக்கக்கூடிய தீர்வாக அமையாது. வலு உருவாக்கம், கடத்தல், விநியோகம் என்பனவற்றின் பொருளாதார செலவினை அடிப்படையாகக் கொண்ட வெளிப்படையான உபாயம் ஒன்று இலங்கை மின்சார சபையின் தீர்வை அமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமாகின்றது.

நாட்டின் மொத்த மின்வலு நுகர்வு 1998இல் 4,509 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு கிட்டத்தட்ட 12 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு நுகர்வோர் தளம் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டில் வீட்டுத் துறைக்கான மின்வலு விற்பனைகள் 1,368 கிகாவாட் மணித்தியாலங்களுக்குக் கிட்டத்தட்ட 13 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வரையறுக்கப்பட்ட லங்கா இலெக்ரிசிட்டி கம்பனியினதும் உள்ளிட்ட வீட்டுத்துறை நுகர்வோர் வலையமைப்பு 10 சதவீதத்தால் 2,053,833இற்கு அதிகரித்தது. (மொத்த மின்வலு விற்பனையில் கிட்டத்தட்ட 16 சதவீதம் லங்கா இலெக்ரிசிட்டி கம்பனியினூடாக விற்பனை செய்யப்படுகின்றது.) வீட்டுத்துறை நுகர்வோர் வலையமைப்பின் இவ்வதிகரிப்பானது முக்கியமாக அண்மைய ஆண்டுகளில் கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்களின் விரைந்த விரிவாக்கத்தினால் ஏற்பட்டதெனலாம். மின்வலு இணைப்புக்களுடனான வீடுகளின் விகிதம் 1998இல் மொத்த வீடுகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு

அதிகரித்தது. எனினும், இலங்கை மின்சார சபையினால் அண்மையில் நடாத்தப்பட்ட அளவீடுகள் நகர்ப் பிரதேசங்களின் 95 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 36 சதவீதமான கிராமிய வீடுகள் மட்டுமே மின்வசதியினை கொண்டிருப்பதனை வெளிக்காட்டியது. கிராமிய மின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் அதிக செலவுடையதாயிருக்கின்ற வேளையில் அதிகரித்த வலுக் கிடைப்பனவின் காரணமாக சமூகத்திற்கு மறைமுக நன்மையொன்றும் காணப்படுகின்றது. புதுப்பிக்கக்கூடிய வலு மூலங்களையும் வெப்ப மின்வலு மூலங்களையும் பிராந்திய மட்டத்தில் அபிவிருத்தி செய்வதன் மூலம் இச் செலவினை குறைவடையச் செய்யக் கூடியதும் மின் கடத்தல் மற்றும் விநியோக இழப்புக்களையும் குறைவடையச் செய்யலாம். இதேவேளை சுய உருவாக்கம் நீங்கலான கைத்தொழில் துறைக்கான மின்வலு விற்பனைகள் ஏறத்தாழ 13 சதவீதத்தினால் 1,786 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்ததுடன், இவற்றுள் 174 கிகாவாட் மணித்தியாலங்கள் லங்கா இலெக்றிசிட்டி கம்பனியினால் விற்பனை செய்யப்பட்டது. லங்கா இலக்ரிசிட்டி கம்பனியின் கீழானவையும் உள்ளிட்ட கைத்தொழில்துறை நுகர்வோர் வலையமைப்பு ஆய்விற்குரிய ஆண்டில் 5 சதவீதத்தினால் 28,006இற்கு அதிகரித்தது. இலங்கை மின்சார சபையின் பொது நோக்கங்களுக்கான வகையின் கீழான மின்வலு விற்பனை 10 சதவீதத்தினால் 757 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்த வேளையில் இவ்வாண்டின் கீழான லங்கா இலெக்ரிசிட்டி கம்பனியின் விற்பனைகள் 15 சதவீதத்தினால் 118 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தன. பொது நோக்கங்களுக்கான நுகர்வோர் வலையமைப்பின் மொத்தம் 7 சதவீதத்தால் 252,016இற்கு விரிவடைந்தது. இவற்றுள் 32,750 லங்கா இலெக்ரிசிட்டி கம்பனியின் கீழானதாகும்.

ஆய்விற்குரிய ஆண்டில் மின்வலுத் துறை மீதான முதலீடு கிட்டத்தட்ட 58 சதவீதத்தினால் ரூ.14,873 மில்லியனிற்கு கடுமையாக அதிகரித்தது. மொத்த மூலதனச் செலவினம் வெளிநாட்டு மூலவளங்கள் (ரூ.6,029 மில்லியன்), அரசாங்க நிதியங்கள் (ரூ.1,000 மில்லியன்), இலங்கை மின்சார சபையினால் உள்ளக நிதிதிரட்டல்கள் (ரூ.6,044 மில்லியன்) மற்றும் நுகர்வோரின் உதவுதொகைகள் (ரூ.1,800 மில்லியன்) என்பனவற்றால் நிதியிடப்பட்டது. பல வலுச்

வரைபடம் 5.3
முக்கிய வலு மூலங்கள்



செயற்றிட்டங்களின் நிருமாண வேலைகள் 1998இல் நடைமுறையிலிருந்தன. சபுகஸ்கந்தை டீசல் மின்வலு உருவாக்க நிலையத்தின் 40 மெகாவாட்டு கொண்ட இரண்டாவது விரிவாக்கம் 1998இல் நடைபெற்றுக் கொண்டிருந்ததுடன் இது 1999 இறுதியில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேசிக்கப்பட்ட குங்குல கங்கை நீர் மின்வலுப் பொறியின் (70 மெகாவாட்) செல்வழிப் பாதைகள் போன்றவற்றின் நிருமாணத்துடன் தொடர்புடைய பூர்வாங்க வேலைகள் 1997இல் கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு 1998இலும் தொடர்ந்தன. இச் செயற்றிட்டத்தின் பிரதான நிருமாண வேலைகளை 1999இன் முற்பாகத்தில் தொடங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 13,000 மில்லியன் ஆகும். இதேவேளை சமனலவெவ நீர்த்தேக்கத்தின் வலதுகரை கசிவுக்கெதிராக ஈரப் பதுமைமையிலான திருத்த வேலைகள் 1998 மாச்சில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் கட்டம் I 1998 ஒற்றோபரில் பூர்த்திசெய்யபபட்டது. இதன் விளைவால், வினாடிக்கு 2.8 கனமீற்றர் கொண்ட கசிவு. வினாடிக்கு 2.2 கனமீற்றருக்கு குறைக்கப்பட்டதுடன் நிலத்தின் அடிப்பாகத்தின் நீர் அமுக்கமும் குறைக்கப்பட்டுள்ளது. இத் திருத்த வேலைகளின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.1,428 மில்லியனாக விளங்கியதுடன், இதில் ரூ.768 மில்லியன் 1998இல் செலவிடப்பட்டது. கட்டம் Iஇன் பெறுபேறுகளின் கணிப்பீட்டின் பின்பு கட்டம் II ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தால் நிதியிடப்பட்ட 150 மெகாவாட் களனிதிஸ்ஸ இணைந்த சுழற்சி மின்வலுப் பொறியின் நிருமாண வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், இது 2000ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்படவிருக்கிறது. மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டத்திற்கான சுற்றாடல் சுத்திகரிப்புக்கு மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரால் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இத் தீர்மானத்திற்கெதிராக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நீதிமன்ற வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், முன்மொழியப்பட்ட மேற்குக் கரை நிலக்கரி மின்வலுப் பொறியின் தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் தாக்கத்தின் மதிப்பீடு 1998இல் மேற்கொள்ளப்பட்டதுடன், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1997இல் ஆரம்பித்த மூன்றாவது கிராமிய மின்னூட்டல் திட்டம் 1998இலும் செயற்பாட்டிலிருந்தது. இத் திட்டம் 2000ஆம் ஆண்டு இறுதியளவில் கிராமப் பகுதிகளில் குறைந்தபட்சம் 110,000 புதிய நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ.3,051 மில்லியனாகும். இவ்வேலையின் கிட்டத்தட்ட 52 சதவீதம் 1998 இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தனியார் துறை மின்வலுச் செயற்றிட்டங்கள் பலவற்றின் மீதான வேலைகள் 1998இல் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1998 இறுதியில் 10 மெகாவாட் டீசல் மின்வலுப் பொறியொன்று வரையறுக்கப்பட்ட கூல் ஏயர் நிறுவனத்தினால் கட்டி, தொழிற்படுத்தி, சொந்தமாக்கும் அடிப்படையில் காங்கேசன்துறையில் நிறுவப்பட்டது. அநுராதபுரம்/மாத்தறை/மத்துகமவில் பிராந்திய மட்டத்தில் 40 மெகாவாட் டீசல் வலுப்பொறியொன்றை நிறுவுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. களனிதிஸ்ஸவில் கட்டி, தொழிற்படுத்து, சொந்தமாக்கும் அடிப்படையில் 165 மெகாவாட் கொண்ட புதிய இணைந்த சுழற்சி மின்வலுப் பொறியொன்றை நிறுவுவதற்கு சம்மதிக்கும் கடிதம் ஒன்று சம்பந்தப்பட்டவர்களிடையே கைச்சாத்திடப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் முக்கிய பங்குடைமையாளராக ஐக்கிய அமெரிக்க நாடுகளைத் தளமாகக் கொண்ட ஏஈஎஸ் கூட்டுத்தாபனம் விளங்குகின்றது. கொழும்பில் கட்டி தொழிற்படுத்தி சொந்தமாக்கும் அடிப்படையில் ரூ.3,500 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் கப்பலிலேயே பொருத்தப்படும் 60 மெகாவாட் மின்வலுப் பொறியொன்றை நிறுவுவது சார்பான பேச்சுவார்த்தைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. மின் உற்பத்தி 2000 ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கும் மேலாக, 1998இல் வரையறுக்கப்பட்ட ஹேக்கப் நிறுவனத்தின் 4.03 மெகாவாட் மொத்த இயலளவு கொண்ட சிறிய நீர் மின்வலு செயற்றிட்டங்களுக்கும் விரய வெப்ப மின்வலுப் பொறிக்கான (0.390 மெகாவாட்) நிருமாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன. 27.7 மெகாவாட் இயலளவு கொண்ட 5 ஏனைய சிறிய நீர் மின்வலுச் செயற்றிட்டங்கள் சார்பான முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இலங்கை மின்சபைக்கும் தெல்கொட சிறிய நீர் மின்வலுப் பொறி (2.5 மெகாவாட்) அபிவிருத்தியாளர்களுக்குமிடையே மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (மி.கொ.உ.) கைச்சாத்திடப்பட்டிருக்கையில், இரு ஏனையமிகொஉ (11.3 மெகாவாட்) பேச்சுவார்த்தையின் கீழ் இருந்தன.

## பெற்றோலியம்

நாட்டின் மொத்த பெற்றோலிய நுகர்வு இலங்கையின் மொத்த முதன்மை வலு நுகர்வின் 32 சதவீதமளவிற்கு வகைகூறியது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி, கடந்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு 12 சதவீத சராசரி வீதத்தில் அதிகரித்து வருகின்றது. டீசல் மற்றும் உலை எண்ணெய்க்கான கேள்வியின் வளர்ச்சி வெப்ப மின்வலுவின் அண்மைய விரிவாக்கத்திலும்

போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தாலும் சார்புரீதியில் அதிகரித்துக் காணப்பட்டது.

1998இல் மசகு எண்ணெய் இறக்குமதிகள், ஆண்டு முழுவதிலும் தூய்மி முழுமையாக தொழிற்பாட்டில் இருந்ததால் 2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக, இவ்வாண்டில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகள் 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. உலக சந்தையில் மசகெண்ணெயின் விலைகள் குறைந்து இருந்ததன் காரணமாக, 1998இல் பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி ஐ.அ.டொலர் 345 மில்லியனுக்கு 36 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெயின் பீப்பா ஒன்றுக்கான சராசரி விலை, 1999இன் ஐ.அ.டொலர்கள் 19.42இலிருந்து, 1998இல் ஐ.அ.டொலர்கள் 13.63இற்கு வீழ்ச்சியடைந்தது. 1998 இறுதியில் மசகெண்ணெயின் பீப்பா ஒன்றுக்கான விலை ஐ.அ.டொலர் 10.97ஆக விளங்கியது.

மசகெண்ணெய் விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த போதிலும், பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளில் நேரிணையான குறைப்பு காணப்படவில்லை. இதன் விளைவாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாப அளவு அதன் அனைத்து உற்பத்திப் பொருட்களிலும் அதிகரித்திருந்தது. வரிகளையும் உள்ளடக்கிய உற்பத்திச் செலவின் 60 சதவீதத்திற்கும் கூடிய விலையில் சிறப்புப் பெற்றோல் விற்கப்படுகின்றது. டீசல் மற்றும் உலை எண்ணெய் என்பனவற்றைப் பொறுத்தமட்டில் விற்பனை விலைகள் முறையே 24 சதவீதத்தாலும் 19 சதவீதத்தாலும் உயர்வாகக் காணப்பட்டன. இதேவேளையில், பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும், வாயு விலைகளும் அநேகமாக மாற்றமின்றிக் காணப்பட்டன. எனினும், இவ்வாண்டில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 9.6 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்ததால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சேரவேண்டிய மொத்த இலாபம் ஓரளவிற்கு குறைந்துவிட்டது. இத்துடன் அரசு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீது சிறப்புத் தீர்வைகளை விதித்தும், 1998 நவெம்பரிலிருந்து பெற்றோலிய இறக்குமதிகள் மீதான தீர்வையை 25 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கு அதிகரித்தும் அதன் இலாபத்தின் ஒரு பகுதியை ஈர்த்துக்கொண்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அதன் இலாபத்தின் ஒரு பகுதியை அதன் பொறுப்புக்களைக் குறைப்பதற்கு பயன்படுத்தியது. தற்காலிகத் தரவுகளின்படி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1997இலான ரூ.407 மில்லியன் இலாபம் மற்றும் 1996இலான ரூ.3,657 மில்லியன் இழப்பு என்பனவற்றுக்கு எதிராக, இவ்வாண்டில் வரிக்கு முன்பான தேறிய இலாபமாக ரூ.6.6 பில்லியனைப் பெற்றது. 1998இல் பெற்றோலிய விலைகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்த போதிலும் அரசின் அதிகரித்த மூலவளத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, இவ்வாண்டில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகளில் கீழ்நோக்கிய திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்படவில்லை.

1998இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு விற்பனை 2.4 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, புதிய வெப்ப மின்வலுப் பொறிகளின் அதிகரித்த கேள்வியின் காரணமாக உலை எண்ணெய் விற்பனைகள் 48 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமையில் தெளிவாகத் தெரிகின்றது. இது, கடற்கல எரிபொருளுக்கான உலை எண்ணெயின் வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இட்டுச் சென்றது. இதன் விளைவாக, எரிபொருள் நிரப்பலுக்காக கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் உலை எண்ணெய்க்கான முழுமையான கேள்வியை எதிர்கொள்ள வரையறுக்கப்பட்ட லங்கா மறைன் சேர்விசஸ் நிறுவனத்துக்கு இயலாது போனமையினால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை இழக்க நேரிட்டது. கடற்கல எரிபொருள் நிரப்பல் பணிகளுக்கான உலை எண்ணெய் விற்பனை 189,000 மெற்றிக் தொன்களுக்கு 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன், வருவாய்கள் ஐ.அ.டொலர் 16 மில்லியனுக்கு 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. கொழும்புத் துறைமுகத்தில் கடற்கல எரிபொருள் பணிகளுக்காக அறவிடப்படும் விலைகள் சார்பு ரீதியில் உயர்வாகக் காணப்படுகின்றமையினால் கடற்கல எரிபொருள் பணிகளுக்காக கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. 1998இல் கொழும்பில் உலை எண்ணெயின் சராசரி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 86ஆக விளங்கியது. தற்பொழுது, இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான லங்கா மறைன் சேர்விஸ் நிறுவனம் கடற்கல எரிபொருளை வழங்குவதற்கான தனியுரிமையைக் கொண்டுள்ளது. சார்பு ரீதியில் கூடிய எரிபொருள் விலைகள் மற்றும் போதுமான அளவு வழங்கல் காணப்படாமை என்பனவற்றின் காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் எரிபொருள் வழங்கலைத் தாராளமயப்படுத்த வேண்டுமென கப்பற்படுத்தும் நிறுவனங்களின் உறுதியான கோரல் ஒன்று காணப்படுகின்றது. எவ்வாறிருந்தபோதிலும், ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு அது உதவக்கூடியதாக இருக்குமாகையால் போட்டி விலைகளில் கடற்கல எரிபொருளை வழங்குவதற்கான நிலையான கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டுமென்பது

இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இதேவேளை, பெற்றோலில் இயங்கும் உந்து ஊர்திகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றின் காரணமாக சிறப்புப் பெற்றோலின் விற்பனை முன்னைய ஆண்டின் 2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5சதவீதமளவில் அதிகரித்திருந்தது. எனினும், குறிப்பாக வாடகைக்கமர்த்தப்பட்ட வெப்ப மின்வலு செயற்றிட்டங்கள் போன்ற டீசல் வெப்ப மின்வலு செயற்றிட்டங்களிலிருந்தான குறைந்த கேள்வியின் காரணமாக இவ்வாண்டில் தன்னியக்க டீசல் விற்பனைகள் 1.2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 9 சதவீதமளவில் வீழ்ச்சியடைந்தது. வெப்ப மின்வலு உருவாக்கத்திற்கான டீசலின் கேள்வி 64 சதவீதத்தால் 110,201 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் போக்குவரத்துத் துறைக்கான டீசலின் கேள்வி 11 சதவீதத்தால் 1,042,109 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து மண்ணெண்ணெய் விற்பனைகள் 4 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளையில், அவுட்டூர் (வானூர்தி விசையாழி எண்ணெய்) விற்பனைகள், இப் பிராந்தியத்தில் அவற்றின் விலைகள் கூடியதாக இருந்தபோதிலும் 7 சதவீதத்தால் அதிகரித்தன. இப் பிராந்தியத்தில் இலங்கை வானூர்திகள் மாறிச் செல்லும் மைய நிலையமாக தோற்றம்பெற்று விளங்கவேண்டுமேயானால் எரிபொருள் விலைகளை போட்டித்தன்மையுள்ள மட்டங்களில் நிருணயித்தல் முற்தேவையாக இருக்கிறது. திரவப் பெற்றோலிய வாயுவின் நுகர்வு 1998இல் 117,269 மெற்றிக் தொன்களுக்கு 19 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1998இல் திரவப் பெற்றோலிய வாயுவின் இறக்குமதிகள் 13 சதவீதத்தால் 97,905 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்திருக்கையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்தான கொள்வனவுகள் 24 சதவீதத்தால் 17,221 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. உள்நாட்டுத் துறைக்கான திரவப் பெற்றோலிய வாயுவின் விற்பனைகள் 86,090 மெற்றிக் தொன்களாக விளங்கி, வீட்டுப் பாவனையாளர்களின் திரவப் பெற்றோலிய வாயு பாவனையில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16 சதவீதம்கொண்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. 1998இல் கைத்தொழில் வாயு விற்பனைகள் 28 சதவீதத்தால் 31,179 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. பெற்றோல் மூலம் இயங்கும் வாகனங்கள் திரவப் பெற்றோலிய வாயுவிற்கு மாற்றப்பட்டமையும் திரவப் பெற்றோலிய வாயுவின் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பகுதியளவில் காரணமாக இருந்தது. செப்பமற்ற மதிப்பீடுகளின்படி, புகழ்பெற்ற கம்பனிகளால் இதுவரை 5,000 ஊர்திகள் மாற்றப்பட்டு திரவப் பெற்றோலிய வாயுவில் இயங்குவதுடன், இவ்வெண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. எனவே, இக் கைத்தொழிலைக் கண்காணிப்பதற்கும் இம் மாற்றங்களின் பாதுகாப்பான தரங்களை உறுதிப்படுத்துவதற்கும் விதிகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்துவது தற்போது அவசியமாகின்றது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் களஞ்சியப்படுத்தும் வசதிகளையும், பகிர்ந்தளிப்பு வலையமைப்பையும் தரமுயர்த்துவதற்கான பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. பெற்றோலிய வசதிகளின் அவசர புத்தாக்கத்திற்கான செயற்றிட்டத்தின்கீழ், ஒறுகொடவத்தை மற்றும் கொலன்னாவையிலுள்ள புத்தாக்க வேலையும் சபுகஸ்கந்தையில் ஓர் புதிய பகிர்ந்தளிப்பு வசதியின் நிருமாணமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1998இன் ஆரம்பப் பகுதியில் தொடங்கியது. ஒறுகொடவத்தையிலுள்ள 3 தாங்கிகளினதும் கொலன்னாவையிலுள்ள 6 தாங்கிகளினதும் புத்தாக்க வேலை 1999 நடுப்பகுதியில் பூர்த்தி செய்யப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. சபுகஸ்கந்தை புதிய பகிர்ந்தளிப்பு வசதி 1999இன் இறுதியளவில் பூர்த்தி செய்யப்படும். இச் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.3,048 மில்லியனாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பிராந்திய களஞ்சியப்படுத்தல் வசதிகளை முன்னேற்றுவதற்கான ஒரு செயற்றிட்டத்தைத் தனது சொந்த நிதியங்களிலிருந்து ரூ.55 மில்லியன் செலவில் ஆரம்பித்தது, கட்டுநாயக்காவில் விமானங்களுக்கான எரிபொருள் நிரப்பும் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் செயற்றிட்டமும் 1998இல் ஆரம்பமானது. இச் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.462 மில்லியனாகும். கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஏற்கெனவேயுள்ள பொருட்களை மாற்றும் குழாய்களை ரூ.150 மில்லியன் செலவில் புத்தாக்கம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.6 போக்குவரத்து

### போக்குவரத்து வலையமைப்பு

நிலம், நீர், வான் போக்குவரத்துக்கள் பொருளாதார உட்கட்டமைப்பின் மிக இன்றியமையாத பங்கொன்றினைக் கொண்டுள்ளன. குறிப்பாக போக்குவரத்தில் தனியார் துறையின் பங்கேற்பு அண்மை ஆண்டுகளாக அதிகரித்துவந்த போதும், இலங்கையின் போக்குவரத்து ஏற்பாட்டில் அரச துறையே இன்னமும் முக்கிய ஆதிக்கம் கொண்டதாக விளங்குகின்றது. சில துணைத்துறைகள் பின்னடைவுகளைக் கொண்டிருந்த போதும் 1998இல் போக்குவரத்துத்துறை மிதமான முன்னேற்றத்தினைக் காட்டியது. 1997இல் மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து கொத்தணிக் கம்பனிகளை

பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளாக மாற்றியமை மற்றும் பயணிகள் பணிக்கான அர்ப்பணிப்புடன் இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் என்பனவற்றின் மூலமான நன்மைகளை இனிமேல்தான் அடையவேண்டும்.

இலங்கையில் போக்குவரத்திற்கான கேள்வியில் ஏறத்தாழ 90 சதவீதம், ஏறத்தாழ 100,000 ச.மீற்றர் கொண்ட நாடளாவிய வீதி வலையமைப்பைப் பயன்படுத்தி ஈடுசெய்யப்படுகிறது. வீதி அபிவிருத்தி மேலாண்மைச்சபை 11,285 கி.மீற்றர் நீளமான அ மற்றும் ஆ வகுப்பு தேசிய நெடுஞ்சாலைகளின் பேணலுக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பாக இருந்தது. வகுப்பு இ மற்றும் ஈ வகைகளாகப் பிரிக்கப்பட்ட ஏறத்தாழ இன்னொரு 15,000 கி.மீ வீதிகள் மாகாணசபை வரம்பிற்குள் இருந்தன. உள்ளூர் வீதிகள் , பெருந்தோட்ட வீதிகள், மற்றும் வேளாண்மை வீதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய எஞ்சிய வீதிகள் பெருந்தோட்டக் கம்பனிகள், மகாவலி மேலாண்மைச்சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வனவிலங்கு திணைக்களம் என்பனவற்றை உள்ளடக்கிய உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கீழ் இருந்தன.

1998இல் பிரதேச போக்குக் கம்பனிகளின் பேருந்துத் தொகுதி 7,942ஆகக் காணப்பட்டது. இது ஒரு சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியமைக்கு தொழிற்பாட்டு நிலைமைகளில் காணப் படாத பல பேருந்துக்கள் விற்பனை செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். 1998இல் பயணிகள் போக்கு வரத்தில் ஈடுபட்டிருந்த தனியார் பேருந்துக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 14,000ஆகக் காணப்பட்டது. 1980 இலிருந்து உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட உந்து ஊர்திகளின் எண்ணிக்கை 300,532 ஆக இருந்தவேளையில் உந்து ஈருருளிகளின் எண்ணிக்கை 711,617 ஆக விளங்கியது. பதிவு செய்யப்பட்ட பொருள் போக்குவரத்து ஊர்திகளின் எண்ணிக்கை 106,438 ஆக விளங்கியது. பொருள் போக்குவரத்துப் பணியில் இதன் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைப் பிரதிபலித்தது. பதிவு செய்யப்பட்ட முச்சில்லு வண்டிகளின் எண்ணிக்கை 75,666 ஆக விளங்கியது. இவ்வூர்திகள் நகர மற்றும் கிராமப் பகுதிகள் இரண்டிலும் மிக் முக்கியமான போக்குவரத்து முறையாக மாறியுள்ளது. ஆகவே, 1980 இலிருந்து பதிவு செய்யப்பட்ட உந்து ஈருருளிகளின் மற்றும் முச்சில்லு வண்டிகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஊர்திகளின் மொத்த எண்ணிக்கை 1998இறுதியில் 1,267,496 ஆக இருந்தது. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் புகைவண்டிச் சாதனங்கள் தொடர்பான நிலைமையானது 65 புகைவண்டி இயந்திரங்கள், 26 வலு இயந்திரங்கள் 1,262 புகைவண்டிப் பெட்டிகள், 2,575 சரக்குப் பெட்டிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. புகைவண்டிப் பகுதியின் வலையமைப்பு 1,463 கிலோமீற்றர்களாக மாற்றமின்றியிருந்தது. தேசிய வான் நிறுவனமாக எயர்லங்கா 21 நாடுகளிலுள்ள 29 சேரிடங்களுக்கு தொடர்ந்தும் அதன் தொழிற்பாடுகளை நடத்தியது. இது இந்தியத் துணைக்கண்டத்தின் புவியியல் பிரதேசங்கள், தூர கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. கடற் போக்குவரத்தினைப் பொறுத்தவரை இலங்கை போட்டி மிக்க கப்பற்படுத்தல் கைத்தொழிலுக்குள் நுழைவதிலும் பார்க்க பல கடற்றுறைமுகங்களை தொழிற்படுத்துவதன் மூலமாக ஒரு ஏற்பாட்டாளராகவே முக்கியமாக தொழிற்படுகின்றது. இத்துறையின் உச்ச நிறுவனமாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை விளங்குவதுடன் கொழும்பு, திருகோணமலை, காலி, காங்கேசன்துறை ஆகிய நான்கு முக்கிய துறைமுகங்களையும் தொழிற் படுத்துகின்றது. இலங்கைக் கப்பற்படுத்தல் கூட்டுத் தாபனமும் வேறுபல தனியார்துறை கப்பற்படுத்தல் கம்பனிகளும் நாட்டில் வரையறுக்கப்பட்ட கப்பற் பணிகளை வழங்கின.

## வீதி அபிவிருத்தி

1998இல் 11,285 கி.மீற்றர்களாகக் காணப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கும் பேணலுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையே பொறுப்பாக இருந்தது. இவ்வாண்டில் மொத்தமாக 138 கி.மீற்றர் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு சேர்க்கப்பட்டது. மேலும் 4,200 பாலங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பேணப்பட்டன. 1998இல் வீதிகள் மீதான மொத்தச் செலவு 3 சதவீதத்தினால் ரூ.5,783 மில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தச் செலவினத்தில் 57 சதவீதம் வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுகளின் புத்தாக்கம் மற்றும் மேம்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கையில், 3 சதவீதம் பாதைகளின் அமைப்பு, அதிகரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதேவேளை தேசிய வீதிப் பேணலுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 3 சதவீதத்தினால் ரூ.265 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

சார்புரீதியில் இலங்கை சிறந்த வீதி அமைப்பையும், வீதி அடர்த்தியையும் கொண்டுள்ள போதும் வீதிப் பேணலும் மேம்பாடும் வரையறுக்கப் பட்ட மூலவளங்களின் காரணமாக சிறந்த வீதி வலையமைப்பிற்கான அதிகரித்துச் செல்லும் தேவையுடன் இணைந்து செல்வதாக இருக்கவில்லை. புதிய வீதிகளின் கட்டுமானம் அல்லது ஏற்கனவேயுள்ள வீதிகளை அகலமாக்குவதற்கான காணிகளைக் கையேற்பதில் எதிர்நோக்கப்படும் எதிர்ப்புக்கள், நெடுஞ்சாலை அதிகாரசபைகள் மற்றும் பொதுவசதிகள்

முகவராண்மைகளுக்கிடையே ஒத்துழைப்புப் போதுமானதாக இல்லாமையினால் ஏற்படும் நிதி விரயம், ஒப்பந்தக்காரர்களினால் எதிர் நோக்கப்படும் நிதித் தடைகள் போன்ற பல ஏனைய காரணிகள் சில செயற்றிட்டங்கள் நிறைவடைவதனைத் தாமதப் படுத்துகின்றன. உள்ளூர் மற்றும் மாகாண மட்டங்களில் வீதி வலையமைப்பின் மேம்பாடு எப்போதோ செய்திருக்கப்பட வேண்டியதாகும். பெரும்பாலான மாகாண வீதிகள் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க பொறியியல் தரங்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டோ அல்லது கட்டப்பட்டோ இராமையினால் ஊர்திகளின் குறிப்பாக பார வண்டிகளின் அதிகரித்துச் செல்லும் எண்ணிக்கை இவ்வீதிகளுக்கு சேதத்தினை ஏற்படுத்துகிறது. மூலவளத்தடைகள் இவ்வீதிகளின் புனரமைப்பிற்கு பெரும் பிரச்சனைகளாக இருக்கின்றன.

1998இல் தேசிய வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்து பேணுவதற்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளன. இவ்வாண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வெளிநாடுகளில் நிதியிடப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. பெரும்பாலும் அனைத்து செயற்றிட்டங்களும் தேசிய நெடுஞ்சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டன. இவ்வாண்டில் உலக வங்கியின் உதவியுடன் தென், மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 397 கி.மீற்றர் நீளமான வீதிகளையும் 19 பாலங்களின் கட்டுமானங்களையும் புத்தாக்கம் செய்வதற்கான மூன்றாவது வீதி புத்தாக்க செயற்றிட்டம் செயற்பாட்டிலிருந்தது. பெரும்பாலான ஒப்பந்தங்களின் மீதான வேலைகள் முற்றுப் பெற்றுவிட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மூன்றாவது வீதிப் புத்தாக்க மற்றும் மேம்பாட்டுச் செயற்றிட்டம் செயற்பாட்டிலிருந்தது. இச் செயற்றிட்த்தின் கீழ் நாரம்மல-கிரியுல்ல, குருநாகல்-பேராதனை, கட்டுகஸ்தோட்டை-மாத்தளை, வத்தேகம-மாத்தளை, பேராதனை-கம்பளை மற்றும் கண்டி-தென்னங்கும்புற என்பனவற்றிலுள்ள மொத்தமாக 82 கி.மீ, வீதிகளின் புத்தாக்கம் முடிவடையும் கட்டத்திலுள்ளன. இதே செயற்றிட்டத்தின் கீழ் கட்டுநாயக்கா-புத்தளம் வீதியும் ரூ.1,084 மில்லியன் செலவில் புத்தாக்கம்/ மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. 1998இல் இச்செயற்றிட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ள வேலையின் மொத்தப் பெறுமதி ரூ.753 மில்லியன்களாக இருந்தன. இலங்கை-யப்பான் நட்புப்பாலத்தின் கட்டம் 11 கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் கட்டப்பட்டுவருவதுடன் 2000 இல் நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் பேஸ்லைன் வீதி புத்தாக்க செயற்றிட்டத்தின் (கட்டம் 1) மீதான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இச் செயற்றிட்டத்தின் கீழ் களனிதிஸ்ஸ சுற்றுவட்டத்திலிருந்து கனத்தை சுற்றுவட்டம் வரையும் இரட்டை 3 வழி மேட்டுப்பாதைகள் தெமட்டகொடை பிரதான புகைவண்டிப்பாதைக்கு குறுக்காக மேம்பாலமொன்றும் பொரளையில் நடந்து செல்வோர்க்கான சுரங்கப்பாதையொன்றுடனும் அமைக்கப்பட்டு வருகின்றது. கனத்தை சுற்றுவட்டத்திலிருந்து கைலெவல் வீதி வரைக்குமான எஞ்சிய பிரிவின் மீதான வேலைகள் 1999இல் தொடங்கும். இச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ.1530 மில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இதில் ரூ.457 மில்லியன் 1998இல் செலவிடப்பட்டது.

1998இல் அரசு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் உதவியுடன் ரூ.600 மில்லியன் செலவில் 28 பாலங்களின் புத்தாக்கம்/கட்டுமான வேலைகள் நடைபெற்றன. அதேவேளை வீதி கட்டுமான பொறித் தொகுதிகள் மற்றும் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான திட்டமொன்று கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் இவ்வாண்டில் முற்றுப் பெற்றுள்ளன. மேலும் 345 கி.மீற்றர் நீளமான வீதிகளையும் 47 பாலங்களையும் மேம்படுத்தும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நான்காவது வீதி மேம்பாட்டுச் செயற்றிட்டத்தினை 1999இல் தொடருவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. விரிவாக்கம், மணலிட்டு நிரப்புதல், வீதிகளின் மேற்பரப்பிணை செப்பனிடுதல் என்பவற்றுடன் தொடர்பான காலத்திற்குக் காலம் செய்யப்படும் பேணல் நிகழ்ச்சித்திட்டம் கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் தொடர்ந்தது. இச் செயற்றிட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்ட மொத்தக் கிலோ மீற்றர் 3,215ஆக விளங்கியதுடன் இதில் 3,104 கி.மீற்றர் மண் நிரப்பலுக்குட் பட்டதுடன் 111 கி.மீ. வீதிக்கு இரட்டை நிலக்கீழ் மேற்பரப்பு சீர்செய்தல் வேலைகளும் மேற்கொள்ளப் பட்டன. இச் செயற்றிட்டத்தின் கீழ் 1998இல் ரூ.1,179 மில்லியன் கொண்டதொகை செலவிடப்பட்டது.

ஒன்று திரட்டப்பட்ட நிதிகள் செயற்றிட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களின் கட்டுமானமும் மேம்பாடும் மாகாண மட்டத்தில் வேலைகளை நிறைவேற்றுவதற்கான ரூ.1,658 மில்லியன் ஒதுக்குக் கடன் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டன. இதன்கீழ் மேற்கு கடற்கரையோரம் நெடுகிலுமான கடற்கரையோரப்பாதை மீதான வேலைகள் ரூ.72 மில்லியன் மொத்த மதிப்பீட்டுச் செலவுகளுடன் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவான ரூ.52 மில்லியனுடன் டூப்பிளிகேசன் வீதி விரிவாக்கச் செயற்றிட்டத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் 50 பாலங்கள் மீதான வேலைகள் நிறைவு பெற்றதுடன் இவை சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது திறந்து வைக்கப்பட்டன.

களனி ஆற்றிற்கு மேலான களனி சிறிய பாலத்தின் மீதான கட்டுமான வேலைகள் ரூ.110 மில்லியன் செலவில் நடைபெற்று வருகின்றன. அதேவேளை ரூ.200 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் இறாகமையிலுள்ள பிரதான புகைவண்டிப் பாதைக்குக் குறுக்காக அமைக்கப்பட்டு வரும்மேம்பாலத்தின் கட்டுமான வேலைகள் நிறைவு பெறும் தறுவாயிலுள்ளன. இலங்கையில் முதற் தடவையாக 1998இல் நடந்து செல்வோர்க்காக ரூ.24 மில்லியன் செலவில் சுரங்கப் பாதையொன்று கட்டப்பட்டது. பாதசாரிகள் பாதுகாப்பாக நடந்து செல்வதனையும் நெரிசல்களைக் குறைப்பதனையும் தேவையாகக் கொண்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இந்தவகை சுரங்கப் பாதைகள் இன்னும் பல அமைக்கப்படவுள்ளன.

நாட்டில் விரைவானதும் நம்பகமானதுமான வீதிப் போக்குவரத்திற்காக தோன்றிவரும் கேள்வியைச் சமாளிப்பதற்காக பல இறுதி வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி மூன்று கடுகதிப் பாதைகளின் கட்டுமானத்திற்கு முன்மொழியப் பட்டுள்ளது. 4 வழி இரட்டை பொருள் போக்குவரத்து கடுகதிப்பாதையாக வடிவமைக்கப்பட்டுள்ள கொழும்பு - கட்டுநாயக்கா கடுகதிப்பாதை ரூ.6.5 பில்லியன் செலவில் 1999இல் தொடங்கப்படும். மாத்தறை - கொழும்பு கடுகதிப் பாதை தொடர்பான சாத்தியவள ஆய்வின் இறுதி அறிக்கை இறுதியாக்கப்பட்டுள்ளதுடன் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் 1999 மாச்சில் தொடங்கும். கொழும்பு- கண்டி கடுகதிப் பாதையைப் பொறுத்தவரை முன் சாத்தியவள ஆய்வினை 1999இல் மேற்கொள்ளுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

## பயணிகள் போக்குவரத்து

பயணிகள் போக்குவரத்து முறையை அபிவிருத்தி செய்வதற்காக 1998இல் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்,பேருந்து மற்றும் புகைவண்டிப் பணிகளை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் நிதியியல் அதேபோன்று உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் போன்றவற்றின் மூலமாக தேவையான உதவிகளை வழங்குதல் என்பனவற்றின்மீது கவனம் செலுத்தப்பட்டது. வர்த்தக ரீதியான ஆற்றலில் போதுமானளவு கவனம் செலுத்தாமை பயணிகள் போக்குவரத்துத்துறையில் காணப்படும் மிக முக்கியமானதொரு வினைத் திறனின்மையாகும். பேருந்து வகைகளை குறிப்பாக கிராமப் புறங்களில் அதிகரிப்பதற்காக 32 இருக்கைகளைக் கொண்ட 500 பேருந்துக்களை இறக்குமதி செய்த ஏற்பாடும் பிரதேசப் போக்குவரத்து கம்பனிகள் அவற்றின் பேருந்துக்களை திருத்துவதற்காக 500 எந்திரத் தொகுதியினை வழங்கியமையும் 1998இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்களாகும். செயலாற்றம் எதிர்பார்க்கப்பட்டவாறு திருப்திகரமாக இல்லாத போதும் மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளை கொத்தணிப் பேருந்துக் கம்பனிகளாக மீளமைக்கப்படுகின்றமை எதிர்கால அபிவிருத்திக்கு பலமான அடித்தளத்தினை வழங்கியுள்ளது. நடைமுறை இடர்பாடுகள் காணப்பட்டபோதும் சிறந்த புகைவண்டிப் பணிகள் வழங்கப்பட்டதன் காரணமாக இலங்கைப் புகைவண்டிப் பகுதியும் ஓரளவிற்கு வலுவடைந்தது.

## பேருந்துப் போக்குவரத்து

கடந்த பல ஆண்டுகளாக பேருந்துப் போக்குவரத்திற்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. திருப்திகரமான பணிகளை வழங்குவதற்காக ஏறத்தாழ 6,340 பேருந்துக்கள் தேவைப்படுகின்றன. எனினும் 1998இல் பிரதேசப் போக்குவரத்துக் கம்பனிகளினால் தொழிற்படுத்தப்படும் பேருந்துக்களின் சராசரி எண்ணிக்கை 4,325 மாத்திரமேயாகும். பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் 1998இல் 313 கி.மீற்றர்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பயணிகள் கிலோ மீற்றரும் 17,716 கி.மீற்றருக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் மொத்த வருமானம் ரூ.4,742 மில்லியனுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலாபமற்ற பேருந்து வழித்தடம்களில் தொழிற்பாடுகளை மேற்கொண்டமை மற்றும் பள்ளிக்கூடச் சிறார்களுக்கு உதவுதொகை வீதங்களில் பருவகாலச் சீட்டுக்களை வழங்கியமை என்பனவற்றின் பேரில் அரசாங்கத்திடமிருந்து பிரதேச போக்குவரத்துக் கம்பனிகள் ரூ.435 மில்லியன் உதவு தொகையைப் பெற்றன. 1998இல் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளின் மொத்தச் செலவினமும் ரூ.6,362 மில்லியனுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

தரம்மிக்க பணிகளை வழங்கும் பொருட்டு பேருந்துப் போக்குவரத்து மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசதுறையினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 1,500 ஊழியர்களைக் குறைப்பதற்காக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டமொன்று அறிமுகப்படுதியது. இதற்குத் தேவையான நிதிகள் ரூ.800 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக கிடைக்கச் செய்யப்பட்டது. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையுடன் இணைந்திருக்கும் விதத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்ட மத்திய கண்காணிப்புக் குழுவொன்று ஏற்படுத்தப்படும். இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் இணைந்த நிறுவனங்களும் மறுசீரமைக்கப் படும். இதன்படி, இலங்கை சேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கூடமும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் சுதந்திரமாகத் தொழிற்பட அனுமதிக்கப்படும்.

## அட்டவணை 5.6
## போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள்

| விடயம் | அலகு | 1996 | 1997 | 1998(அ) | சதவீத மாற்றம் 1997 | சதவீத மாற்றம் 1998(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | | |
| பேரூந்துகள் | எண்ணிக்கை | 1,364 | 1,999 | 3,190 | 46.6 | 59.6 |
| தனியார் பயணி வண்டிகள் | " | 17,671 | 31,338 | 41,151 | 77.3 | 31.3 |
| தனியார் ஊர்திகள் | " | 14,250 | 16,293 | 18,455 | 14.3 | 13.3 |
| உந்து ஈருருளிகள் | " | 31,955 | 36,755 | 42,089 | 15.0 | 14.5 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | " | 5,660 | 5,561 | 8,703 | -1.7 | 56.5 |
| நில ஊர்திகள் | " | 8,340 | 7,652 | 8,405 | -8.2 | 9.8 |
| தனியார் சொகுசு வண்டிகள் | " | 115 | 60 | 158 | -47.8 | 163.3 |
| ஏனையவை | " | 65 | 16 | 62 | 47.8 | 163.3 |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 7,705 | 7,787 | 8,467 | 1.1 | 8.7 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | " | 3,241 | 3,290 | 3,538 | 1.5 | 7.5 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் | " | 107 | 96 | 102 | -10.3 | 6.3 |
| மொத்த வருவாய் | ரூ.மில்லியன் | 938 | 1,030 | 1,190 | 9.8 | 15.5 |
| நடைமுறைச் செலவு | " | 1,826 | 1,742 | 2,256 | -4.6 | 29.5 |
| தொழிற்பாட்டு இழப்பு | " | 887 | 712 | 1,066 | -19.7 | 49.7 |
| மூலதனச் செலவு | " | 4,624 | 4,483 | 3,457 | -9.5 | -17.4 |
| 3. பிரதேச பேருந்துக் கம்பனிகள் | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 348 | 232 | 313 | -4.6 | -5.7 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | " | 20,259 | 19,154 | 17,716 | -5.5 | -7.5 |
| மொத்த அரசிறை | ரூ.மில்லியன் | 5,170 | 4,892 | 4,742 | 5.4 | -8.1 |
| தொழிற்பாட்டுச் செலவு | " | 6,012 | 6,467 | 6,362 | 7.6 | -1.6 |
| தொழிற்பாட்டு இழப்பு | " | 842 | 1,575 | 1,620 | 87.1 | -2.9 |
| 4. எயார் லங்கா | | | | | | |
| பறந்த மணித்தியாலங்கள் | மணித்தியாலம் | 29,899 | 31,045 | 24,118(ஆ) | 3.8 | வி.கி. |
| பறந்த பயணிகள் கிலோமீற்றர் | மில்லியன் | 3,809 | 4,264 | 3,056(ஆ) | 11.9 | வி.கி. |
| ஏற்றி இறக்கப்பட்ட பயணிகள் | % | 69.9 | 75.9 | 69.7(ஆ) | 8.6 | வி.கி. |
| ஏற்றிய நிறை | % | 3.1 | 68.6 | 62.1(ஆ) | 8.7 | வி.கி. |
| சரக்கு | மெ. தொ. | 25,128 | 36,959 | 27,743(ஆ) | 47.1 | வி.கி. |
| தொழில் நிலை | எண்ணிக்கை | 5,089 | 4,793 | 4,782(ஆ) | -5.8 | வி.கி. |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) செத்தெம்பர் வரைக்கும்

மூலங்கள்: உந்து ஊர்திகள் திணைக்களம், இலங்கைப் புகைவண்டிப் பகுதி. இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு. சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்

1998இல் தனியார்துறை பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. 1998இறுதியில் மாகாணங்களில் (வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர) மொத்தமாக 11,242 பேருந்துக்கள் தொழிற்பட்டன. 1997உடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. 1998இல் இத் தனியார்துறைப் பேருந்துக்களின் மொத்த இருக்கை இயலளவும் 29 சதவீதத்தினால் குறிப்பிடத் தக்களவிற்கு அதிகரித்தது. மாகாண சபைகளினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கையும் 17 சதவீதத்தினால் அதிகரித்தது. மாகாண மட்டத்தில் தனியார்துறைக்கு ஒதுக்கப்பட்ட வழித் தடம்களின் எண்ணிக்கையும் 1997இன் 1,335இலிருந்து 1998இல் 1,446 இற்கு அதிகரித்தது. எனினும், பேருந்துச் சொந்தக் காரர்களின் எண்ணிக்கை 1997இன் 9,432இலிருந்து 1998இல் 10,922இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையானது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட தனியுடமையாளர் களிடமிருந்து தொகுதி உடமையாளர்களுக்கு படிப்படியாக மாற்றமடைந்த தன்மைக்கு மாறானதாகும். இது தனியார் பேருந்துக் கைத்தொழிலின் செலவுப் பயன்பாட்டிலும் அதேபோன்று அவற்றின் கண்காணிப்பிலும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும். மாகாண மட்டத்தில் இத்துறையிலுள்ள நேரடித் தொழில் வாய்ப்பின் எண்ணிக்கை 1998இல் ஏறத்தாழ 27,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் பிரதேச போக்குவரத்து கம்பனிகளினதும் தனியார் துறைத் தொழிற்பாட்டாளர்களினாலும் பதிவு செய்யப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பேருந்துக் களின் புதிய பதிவுகளினது மொத்த எண்ணிக்கை 1998இல் 60 சதவீதத்தினால் 3,190இற்கு அதிகரித்தது.

தனியார் பயணிகள் போக்குவரத்தின் மீதான தேசிய கொள்கை மீது அரசிற்கு மதியுரைவழங்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நாட்டின் தற்போதைய பேருந்துப் பணிகளை மேம்படுத்தும் பொருட்டு பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தியது. தனிப்பட்ட தொழிற்பாட்டாளர்களும் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளும் பொதுவான முணைக்கோடியினைப் பயன்படுத்தி பொதுவான அட்டவணையின்படி பேருந்துக்களைத் தொழிற் படுத்துவதற்கு மாகாண அதிகாரிகளின் உதவியுடன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்போதுள்ள தாழ்ந்த கூரைகளைக் கொண்ட பேருந்துக்களைப் படிப்படியாக

அகற்றும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பயிற்சிப் பாடசாலையின் ஒத்துழைப்புடனும் உலக வங்கியிலிருந்தான உதவியுடனும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தனியார் பேருந்து ஓட்டுநர்களுக்கும் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நாடளாவிய முறையில் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1998இறுதியில், இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 6,266 ஓட்டுநர்களும், 8,529 நடத்துநர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும் பிரதேச போக்குவரத்துக் கம்பனிகளிலுள்ள இன்னுமொரு 10,000 பேருந்து ஓட்டுநர்களுக்கும் பயிற்சியளிக்கப்படும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் பயணிகள் போக்குவரத்தின் உற்பத்தித்திறனை உயர்த்துவதும் பயணிகளை மேம்படுத்துவதும் வீதி ஒழுங்கு முறைகளை உயர்த்துவதுமேயாகும். பேருந்துச் சொந்தக்காரர்களுக்கு கல்விபுகட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று தென் மாகாணத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது: 1998இல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மற்றைய நடவடிக்கைகளுடன் தனியார் பேருந்து விபத்து நிவாரண ஏற்பாடு, மாகாணங்களுக்கிடையேயும் மாகாணங்களுக்குள்ளேயுமான பேருந்துகளுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், கிராமிய பேருந்துப் பணிகளுக்கான நிதியியல் ஆதரவு ஏற்பாடு (ரூ.212 மில்லியன்) என்பனவும் காணப்பட்டன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உலகவங்கியின் உதவியுடன் நாடளாவிய பேருந்துத் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய பேருந்து தகவல் அமைப்பொன்றினை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 1998இல் திறக்கப்பட்ட வீதி பாதுகாப்புச் செயலகம் நெடுஞ்சாலையில் போக்குவரத்துப்பாய்ச்சல் ஒழுங்கு முறைப்படுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டது. வீதிப் பாதுகாப்பு செயலகத்தின் பணிப்புரையின் கீழ் 1998இல் கொழும்பிற்குள்ளும் கொழும்பைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களினதும் போக்குவரத்து நிற விளக்குகளை நிறுவியது. வீதி நிர்மாண அபிவிருத்திக் கம்பனியும் மொரட்டுவைப் பல்கலைக் கழகமும் கூட்டுச் செயற்திட்டமாக போக்குவரத்து விளக்குகளை உள்ளூரில் உற்பத்தி செய்வதன் காரணமாக போக்குவரத்து நிற விளக்குகளின் செலவு ஏறத்தாழ 80 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

இலங்கைக்கான தேசிய பேருந்து போக்குவரத்து கொள்கையை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவொன்று, நியாயமான செலவில் சிறந்த பணிகளை வழங்கும் பொருட்டு அரசதுறையின் பேருந்துப் பணிகளின் பங்கை தற்போதைய 50 சதவீதத்திலிருந்து குறைந்தது 60 சதவீதத்திற்காவது உயர்த்த வேண்டுமென விதந்துரைத்தது. கிடைக்கத்தக்க மூலவளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலமாக திறன்படைத்த பயன்பாட்டாளர் நட்புறவுமுறையிலான போக்குவரத்து வலையமைப்பை வழங்கமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதனையும் கண்காணிப்பு நடைமுறைகளை இலகுபடுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு ஆகக் குறைந்தது 50 பேருந்து தொகுதியைக் கொண்ட தனியார் பேருந்து கம்பனிகளை உருவாக்குவதற்கான தேவை வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. எனினும், பேருந்து (புகையிரதத்திலும் இதேபோன்றே) போக்குவரத்து முறையிலுள்ள முக்கிய பிரச்சனை இலாபம் தராத மட்டங்களில் பேருந்துக் கட்டணங்களை கட்டுப்படுத்துவதேயாகும். இவ்வடிப்படையில் பிரச்சனையைக் கட்டுப்படுத்தாமல் பேருந்துப் போக்குவரத்தில் அரசதுறையின் அளவினை அதிகரிப்பது கொள்கைகளுக்கு நேர்மாறானதாக இருக்கும்.

வீதிப் போக்குவரத்துத் துறையில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்திகளிடையே, போக்குவரத்தில் தனியார் ஊர்திகளின் பாவனை அதிகரித்துச் செல்வதற்கு அரசதுறைப் போக்குவரத்து முறையிலுள்ள குறைபாடுகளே முக்கிய காரணமென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்போக்கு மாநகர மையங்களில் குறிப்பாக உச்ச நேரங்களில் பாரிய நெருக்கடிகளுக்கு வழியமைத்திருக்கிறது. இப்போக்கின் ஒரு பகுதியாக பள்ளிக்கூட வான்கள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் போன்ற ஊர்திகளின் எண்ணிக்கை மாநகர மையங்களில் விரைவாக அதிகரித்து வருகின்றன. அப்போக்கு அதிகரிக்கின்ற பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வழங்கப்படுகின்ற தொழில் வாய்ப்பு என்பனவற்றினூடாக பொருளாதாரத்தின் மீது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளபோதும் தேவையற்ற வீதி நெரிசல்களையும் மிகமுக்கியமாக இவ்வூர்திகளில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் ஒழுங்குமுறைப் படுத்தும் வலையமைப்பு போதுமானளவிற்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை. மறுபுறத்தில் ஏனைய ஊர்திகளின் வீதிப்பாவனை 60 சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கின்ற வேளையில் பயணிகள் போக்குவரத்து பேருந்துத் தாக்கம் பொருளாதாரத்திற்கு மிகக் கூடுதலாக குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதும் அவற்றின் வீதிப்பாவனை வீதம் மிகக் குறைந்த வீதத்திலேயே காணப்பட்டது. அதேவேளை தனியார் துறை மற்றும் அரசதுறை வர்த்தக அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் ஊழியர் போக்குவரத்து வழங்கப்படுகின்ற இறை ஊக்குவிப்புக்களின் மூலம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. பேருந்துக்களின் கொள்வனவு மீது இந்நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவிற்கு வருமான வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், இந் நிறுவனங்கள் சுங்கத் தீர்வையின்றி பேருந்துக்களையும், சொகுசு வண்டிகளையும் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்பட்டன. பேருந்துகளின் உடற்

கோப்புக்களில் ஈடுபட்டுள்ள உள்ளூர்க் கம்பனிகளும் தீர்வையின்றி உதிரிப்பாகங்களையும் கருவிகளையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன. இக் கொள்கைகள் பயணிகள் போக்குவரத்தில் குறிப்பாக உச்ச நேரங்களில் கேள்வியின் அழுத்தத்தில் குறைப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தீர்வைச் சலுகைகள் தனியார்துறை பேருந்து தொழிற்பாட்டாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் 40 இருக்கைகளுக்கு மேல் இயலளவைக் கொண்ட பேருந்துக்களுக்கு மேலும் விரிவாக்கப்பட்டது.

1996இல் அரச போக்குவரத்து கட்டண குழு போதுமான கட்டண அதிகரிப்பினை விதந்துரைத்த போதும் 1996 யூலை, மாச்சிலிலிருந்து அரசாங்கப் பேருந்து மற்றும் புகைவண்டிக் கட்டணங்களை முறையே 15 சதவீதத்தினாலும் 20 சதவீதத்தினாலும் மட்டுமே அதிகரிக்க அனுமதித்தது. அவ்வதிகரிப்பானது உதிரிப்பாகங்களின் விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்கள் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் 1998 ஏப்பிறலில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் வரி என்பனவற்றின் காரணமாக உயர்ந்து செல்லும் செலவினால் மிகப் பெருமளவிற்கு இழக்கப்பட்டுவிட்டன. இக் கைத்தொழில் காணப்படும் தாழ்ந்த இலாப எல்லைகள் பணிகளின் தரத்தினை மோசமாகப் பாதிப்பது மட்டுமன்றி அப் பேருந்துக் கைத்தொழிலின் புதிய முதலீடுகளையும் ஊக்கமிழக்கச் செய்கிறது. தற்போதைய கட்டண அமைப்பினைத் தொடர்வது காலத்திற்குக் காலம் அரசதுறை பேருந்துக் கம்பனிகளுக்கு உதவு தொகைகளை வழங்கும் அரசிற்கு நிச்சயம் ஒரு சுமையாகவே இருக்கும். 1999 சனவரியிலிருந்து பிரதேசப் போக்குவரத்து கம்பனியின் ஊழியர்களுக்கு வழங்கப் பட்ட ரூ.1,000 கொண்ட கூலி அதிகரிப்பிலிருந்தும் தோன்றிய மேலதிக செலவுகள் அதிகரித்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் மூலமாக அரசினால் வழங்கப்பட வேண்டியுள்ளன. மேலதிக வருமானம் பொதுமக்களுக்கு சிறந்த தரமானதும் மிகக் கூடியளவு நம்பகரமானதுமான பேருந்துப்பணிகளை வழங்குவதற்கும் திருப்திகரமாகப் பயன்படுத்தப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பயணிகள் கட்டணங்களை நியாயமான தொகையினால் அதிகரிக்க வேண்டிய கட்டாய தேவையொன்று காணப்படுகின்றது.

## புகைவண்டிப் போக்குவரத்து

பற்றாக்குறையான புகைவண்டிச் சாதனங்கள் மற்றும் அழிந்து கொண்டுவரும் உட்கட்டமைப்பு போன்ற கடுமையான பிரச்சனைகளால் புகைவண்டிப் பகுதி தொடர்ந்தும் பாதிக்கப்பட்டபோதும் ஆய்விற்குரிய ஆண்டில் அதன் பல துறைகளில் சிறிதளவு முன்னேற்றத்தினைக்காட்டியது. இதன்படி இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 8.5 மில்லியன் கிலோ மீற்றர்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் பயணிகள் கிலோ மீற்றர்கள் 8 சதவீதத்தினால் 3,538 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் கொண்டு செல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை 87.4 மில்லியனுக்கு ஒரு சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. தொழிற்பட்ட சரக்கு கிலோ மீற்றர்கள் 6 சதவீத அதிகரிப்பினைக்காட்டி 102 மில்லியன்தொன் கி.மீற்றர்களாக விளங்கிய வேளையில் 1998இல் கொண்டு செல்லப்பட்ட பொருட்களின் அளவு 1.2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது.

1998இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு அளவில் மேம்பாடு காணப்பட்டபோதும் அது தொடர்ந்தும் இடர்பாடுகளையே அனுபவிக்கிறது. இலங்கைப் புகைவண்டியினால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் பலவாகும். அடிக்கடி புகைவண்டிகள் தடம் புரள்வதற்கும் பல எண்ணிக்கையான வேகத்தடைகளை ஏற்படுத்துகின்றதுமான பலவிதமான புகைவண்டிப்பாதை, புகைவண்டிச் சாதனங்களின் மோசமான செயலாற்றம், முழுமையாக மையப்படுத்தப் பட்ட போக்குவரததுக் கட்டுப்பாடு மற்றும் தொடர்பூட்டல் முறைகள், பொருத்தமற்ற தொழில்நுட்ப விபரங்கள் போன்றவற்றை தொழில்நுட்ப ரீதியில் முக்கிய பிரச்சனைகளாக இனங்காணலாம். மோசமான தொழிலாளர் உற்பத்தித்திறன் முக்கியமான உள்ளக சமூகப் பிரச்சனையாக உள்ளவேளையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் தீர்க்கப்படாத பாதுகாப்புப் பிரச்சனைகள் ஓர் முக்கிய வெளியக சமூகப் பிரச்சினையாக இலங்கைப் புகையிரதத் திணைக்களம் எதிர்கொண்டது. இப் பிரச்சினைகள் எந்தவகையிலும் செலவினை மீட்கமுடியாத யதார்த்தமற்ற தாழ்ந்த புகைவண்டிக் கட்டணங்களால் மேலும் மோசமடைந்தன. 1999 வரவு செலவுத் திட்டத்தில் புகைவண்டிக் கட்டணங்களை உயர்த்துவத ற்காக முன்மொழிவு இறுதி நேரத்தில் புறக்கீடு செய்யப்பட்டமை மிக துர்ரதிஷ்ட வசமானதாகும்.

இச்சூழ்நிலையைச் சமாளிக்கும் பொருட்டு, பல நடவடிக்கைகள் குறிப்பாக புகைவண்டிப் பகுதியின் பணிகளின் தரத்தினை மேம்படுத்தல், புகைவண்டிச் சாதனங்களின் இருப்பினை வலுப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய விடயங்களில் எடுக்கப்பட்டன. இதன்படி இரு புகைவண்டிகள் குறிப்பாக பொல்காவலை/கண்டி மற்றும் நாவலப்பிட்டி/கலபொட ஆகிய இடங்களுக் கிடையில் புகைவண்டி மூலம் பயணம் செய்யும் பள்ளிக் கூடச் சிறார்களின் வசதிக்காக முக்கிய பாதையில் (மலைநாடு) இரு புதிய புகைவண்டிகளை அறிமுகப் படுத்தியதன் மூலம் புகைவண்டிப்பணிகள் மீள

அட்டவணைப்படுத்தப்பட்டன. கொழும்பு சுற்றுப்புற வலயத்தில் கொழும்புக் கோட்டைக்கும் கம்பகாவிற்குமிடையில் கடுகதி புகைவண்டியொன்று அறிமுகப் படுத்தப்பட்டமை மாலை அலுவலக புகைவண்டியின் நெரிச்சலைக் குறைப்பதற்கு உதவியது. காலிக்கும் கொழும்புக் கோட்டைக்கும் இடையில் புதிய நகரங்களுக்கிடையிலான புகைவண்டியொன்று அறிமுகப்படுத்தப் பட்டது. திருகோணமலைப் பாதையில் பகல்நேர புகைவண்டிப் பணிகள் தொழிற்படுத்தப்பட்டதுடன் மட்டக்களப்புப் புகைவண்டிப்பணி பாதுகாப்புக் காரணங்களுக்காக பொலனறுவையுடன் நிறுத்தப் பட்டது. 1998இல் புகைவண்டிப் பணிகளுக்காக ஐந்து புதிய துணை- புகைவண்டி நிலையங்கள் திறக்கப் பட்டன. மேலும் கட்டுவ, பூனாவ, அக்கபோதிபுர, திஸ்மல்புர மற்றும் பன்னவல ஆகிய இடங்களில் புதிய நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ள அதேவேளையில் 60 சதவீதமான புகைவண்டிகள் சரியான நேரத்தில் தமது சேரிடங்களை வந்தடைந்ததன் மூலம் அட்டவணையிடப்பட்ட தொழிற்பாடுகள் கொழும்பு பிற நகர்ப் பிரதேசங்களில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டன. இப் பிரதேசங்களில் 75 சதவீதமான புகைவண்டிகள் சரியான நேரத்தில் சேருமிடங்களை அடைந்துள்ளன. 1998இல் அட்டவணையிடப்பட்ட மொத்த புகைவண்டிப் பயணங்களில் இரத்துச் செய்யப்பட்ட புகைவண்டிகள் 5 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறின. பயணிகள் சங்கத்துடன் மேற்கொள்ளப் படும் கிரமமான கலந்துரையாடல்கள் பயணிகளின் தேவைக்கேற்ப புகைவண்டிகளின் நேர அட்டவணைகளை மீள ஒழுங்குபடுத்தவதற்கு உதவின.

இலங்கைப் புகைவண்டிப்பகுதி ஒழுங்கான புகைவண்டிப் பணிகளுக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள புகைவண்டிச் சாதனங்களை உறுதிப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி ஏற்கனவேயுள்ள எந்திரத் தொகுதியுடன் ரூ.180 மில்லியன் செலவில் இரு புதிய இந்திய எந்திரங்கள் சேர்க்கப்பட்டன. அதே வேளை 1998இல் மீள எந்திரப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள எம்5 வகை எந்திரமொன்று பணிக்காக விடுவிக்கப்பட்டது. ஏறத்தாழ 10 ஆண்டுகளாக காங்கேசன்துறையில் கைவிடப்பட்டிருந்த எம்2 வகை எந்திரம் கொழும்பிற்குக் கொண்டவரப்பட்டு திருத்தம் செய்தபின்னர் வழமையான பணிகளுக்காக எந்திரத் தொகுதியுடன் சேர்க்கப்பட்டது. நான்கு எம் 3 வகை எந்திரங்களும் கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியின்கீழ் புத்தாக்கம் செய்யப்பட்ட பின்னர் பணிக்காகச் சேர்க்கப்பட்டன. மேலும் 2000இன் நடுப்பகுதியில் 10 அகலப் பாதை எந்திரங்கள் வழங்குவதற்காக விலைக் கோரலும் வழங்கப்பட்டுள்ளது. 15 டீசல் பல்நோக்கு அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்புதல்கள் பெறப்பட்டுள்ளதுடன் இதில் 6 அலகுகள் 1999இல் வழங்கப்படும். இது வலுப் பொறிகளின் தொகுதியை வலுப்படுத்த உதவும். திருத்த வேலைகளின் தரத்தினை அதிகரிக்கச் செய்யும் மாளிகாவத்தையிலுள்ள மின்னியல் எந்திரப் பகுதியை தரமுயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்ட செயற்றிட்டத்தின் கட்டம் 1 1998இல் நிறைவு செய்யப்பட்டது.

புகைவண்டிப் பாதைகளின் நிலைகளை மேம்படுத்துவதனையும், மேலதிக புகைவண்டிப் பாதைகளை நிருமாணிப்பதையும் நோக்கமாக்க கொண்டு இலங்கைப் புகைவண்டிப் பகுதி இவ்வாண்டில் பல நிகழ்ச்சித் திட்டங்களை தொடங்கியுள்ளது. புகைவண்டிப் பாதை புத்தாக்கச் செயற்றிட்டம் கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் 1998இலும் தொடர்ந்தது. மேலும், உள்ளூர் நிதியினைப் பயன்படுத்தி 40 கி.மீற்றர் நீளமான புகைவண்டிப்பாதை புத்தாக்கம் செய்யப்பட்டது. பொல்காவலையிலிருந்து இறம்புக்கனை வரையிலான இரட்டைப் புகைவண்டிப் பாதையின் கட்டுமான வேலைகள் நிறைவடைந்து விட்டதுடன் பாணந்துறையிலிருந்து அளுத்கமை வரையான இன்னொரு இரட்டைப்பாதை மீதான கட்டுமான வேலைகள் தொடங்கிவிட்டதுடன், இவ்வாண்டில் முடிவடையும். இராகமவிலிருந்து நீர்கொழும்பு வரையான இருவழிப்பாதை மீதான கட்டுமான வேலைகளும் இவ்வாண்டில் தொடங்கிவிட்டன. கரையோரப் பாதை நெடுகிலும் புதிய நிற வெளிச்ச சைகை முறையினை நிறுவும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. புறநகர்ப்பாதை புகைவண்டி வலையமைப்பினை மின்னூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் நிதியியல் நிலைகளைப் பொறுத்தவரையில், 1998இல் மொத்த வருமானம் ரூ.1,113 மில்லியனாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 8 சதவீத அதிகரிப்பினைக் காட்டியமைக்கு பொருட்போக்குவரத்து மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான வருமானங்களில் ஏற்பட்ட மிகக் கூடுதலான அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். மொத்த வருமானத்தில் இவையிரண்டும் முறையே 20 சதவீதத்திற்கும் 27 சதவீதத்திற்கும் வகை கூறின. நடைமுறைச் செலவினம் 16 சதவீதத்தினால் ரூ.2,030 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு பேணற் செலவில் ஏற்பட்ட 26 சதவீத அதிகரிப்பும் சம்பளங்களில் ஏற்பட்ட 2 சதவீத அதிகரிப்பும் காரணங்களாகும். அதேவேளை ரூ.3,504 மில்லியன் கொண்ட மூலதனச் செலவினை 1997உடன் ஒப்பிடுகைளில் 22 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை எடுத்துக் காட்டியதுடன் மொத்தச் செலவினத்தில் 11 சதவீதம்கொண்ட

வீழ்ச்சியையும் தோற்றுவித்தது. இதன் விளைவாக இலங்கை புகையிரதப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு ரூ.917 மில்லியனுக்கு 29 சதவீதத்தினால் அதிகரித்தது. எனவே தற்போதுள்ள மூலவளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதும் அதேபோன்று நியாயமான பயணிகள் கட்டண அதிகரிப்பும் இலங்கைப் புகையிரதப் பகுதியினால் உறப்படும் இழப்புக்களைக் குறைப்பதற்கு தேவையாகவுள்ளன.

புகையிரதப் போக்குவரத்துப் பணிகளை மேம்படுத்தும் பொருட்டு பல நடவடிக்கைகளை மேற கொள்வதற்கு இலங்கைப் புகையிரதப்பகுதி எண்ணியுள்ளது. இதன்படி, சரக்குப் போக்குவரத்து வாடிக்கையாளர்கள் இலங்கைப் புகையிரதப் பகுதியுடன் இணைந்து புகையிரதப் பாதைகளை பயன்படுத்துவதற்கு திறந்த நுழைவுக் கொள்கையின் கீழ் சரக்குப் போக்குவரத்துப் பணிகளை தொழிற் படுத்துவதற்கு அனுமதிக்கப்படும். இக் கொள்கையின் முக்கிய குறிக்கோள் யாதெனில், தற்பொழுது குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருக்கும் புகையிரதப் பாதையின் பயன்பாட்டினை அதிகரிப்பது வர்த்தக மயப்படுத்தப்பட்ட பொருள் போக்குவரத்தினூடாக இலங்கைப் புகையிரதப்பகுதி மேலதிக வருமானத்தினைப் பெறுவதனை இயலச்செய்யும் வியாபார உற்பத்திப் பிரிவு 1998இல் இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. வினைத்திறனை மேலும் அதிகரிக்கும் பொருட்டு தேசிய அபிவிருத்தி சபை இலங்கைப் புகையிரதப் பகுதியின் முகாமைத்துவத்தை மீளமைப்பதற்கு முன்மொழிந்துள்ளது. புகையிரத முகாமைத்துவ சபையினூடாக இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு குறிப்பிட்டளவு முகாமைத்துவ சுயநிர்ணயத்தை வழங்குவதன் மூலம் முன்மொழிவு நேரகாலத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேளையில் செயலாற்ற நிலைமைகளை ஏற்படுத்துகின்ற புதியதொரு கோட்பாடும் தொடங்கப்படவுள்ளது.

## சிவில் வான் போக்குவரத்து

நாட்டின் வான் போக்குவரத்துத் துறையின் உச்ச நிறுவனமாகவுள்ள சிவில் வான் போக்குவரத்துத் திணைக்களம் சிவில் வான் போக்குவரத்திற்கான பன்னாட்டு பாதுகாப்பு நியமங்களை உறுதிப்படுத்துவதற்கும் உலகளாவிய இக் கைத்தொழில் தேவைப்பாடுகளை வழங்குவதற்கான தொழிற்பாட்டு நியமங்களுக்கும் முக்கிய பொறுப்பாகவுள்ளது. சிவில் வான் போக்குவரத்துத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள், இருபுடை வான்பணிகள் பற்றிய பேச்சு வார்த்தைகள், உடன்படிக்கைகளும் வான் போக்கு வரத்து உரிமைகளும், சிவில் வானூர்திகளைப் பதிவு செய்தலும், சிவில் வானூர்திகளுக்கு அவற்றின் வான் பறப்புத் தகுதி பற்றிய நன்மதிப்புச் சான்றிதழ்களை வழங்குதலும் வானூர்திகளின் விபத்துக்களைப் புலனாய்வு செய்தல் வானூர்தி ஓட்டிகள் விமானத் தளப் பொறியியல் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு ஆளணியினர், மற்றும் வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு ஆளணியினர் அதே போன்று வானூர்தி நிலையம், மற்றும் வான்பணிகள் தொழிற்பாட்டாளர் என்போர்க்கு உரிமங்களை வழங்குதல் என்பனவற்றுடன் தொடர்புடையதாக இருக்கிறது. வெளியுலகிற்கான இலங்கையின் தலைவாசலாக விளங்கும் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கு மேலதிகமாக இலங்கையில் 12 உள்நாட்டு வானூர்தி நிலையங்கள் காணப்படுகின்றன. சிவில் பறப்புக்களுக்காக பெரும்பாலான உள்நாட்டு வானூர்தி நிலையங்கள் மிகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வேளையில் சில முக்கியமாக இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டன. முக்கியமாக குத்தகை ஒழுங்குகளின் கீழ் வானூர்திகளை தொழிற்படுத்துகின்ற பல தனியார் வான் வழிப் போக்குவரத்துக் கம்பனிகளும் தமது வரையறுக்கப்பட்டளவான தொழிற்பாடுகளுக்காக இவ்வானூர்தி நிலையங்கள் சிலவற்றைப் பயன்படுத்துகின்றன.

தேசிய வானூர்தி நிறுவனமான வரையறுக்கப்பட்ட எயர் லங்காவின் சொத்துடைமையானது இதன் பங்குகளில் 26 சதவீதம் எமிறேட்ஸ் வானூர்தி நிறுவனத்திற்கு ஐ.அ.டொலர் 43 மில்லியனுக்கு மாற்றப்பட்டமையின் மூலம் 1998 இல் பன்முகப்படுத்தப்பட்டது. எயர்லங்காவின் முகாமைத்துவமும் எமிறேட்ஸ் வான் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட பின்னர் புதிய முகாமைத்துவத்தின் கீழ் எயர்லங்கா பாரிய மூலதன முதலீட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற் கொண்டுள்ளது. இதன்கீழ் இது 6 புதிய வானூர்திகளை கொள்வனவு செய்யும். இவற்றிற்கான கொள்வனவுக் கட்டளைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும், எயர் லங்காவிற்கான நன்மைகளை உச்சத்தில் பேணும் பொருட்டு அட்டவணையிடப்பட்ட பறப்புக்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 1998இல் எயர்லங்காவின் பறந்த கிலோ மீற்றர்கள் 6 சதவீதத்தினால் அதிகரித்து 22,925,000 கி.மீற்றர்களாகக் காணப்பட்டன. பண்டாரநாயக்கா சருவதேச விமான நிலையத்தில் கொண்டுவரப்படட சரக்குத் தொன் 1997உடன் ஒப்பிடுகையில் 4 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. எயர்லங்காவின் மொத்த வருமானம் ரூ.17,608 மில்லியனாக விளங்கியது. தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.14,640 மில்லியனாக விளங்கியமையினால் வரிக்குப்பின்னான எயர்லங்காவின் தேறிய இலாபம் ரூ.1,642 மில்லியனாக விளங்கியது.

எயர் லங்காவின் அண்மைய பன்முகப்படுத்தலுடன் வான் பயணிகள் போக்குவரத்துத் துறையில் சில மேம்பாடுகள் காணப்பட்டபோதும், சிவில் வானூர்திப் போக்குவரத்துப் பிரிவினை முழுமையாக நோக்குகையில் நாட்டிற்கு மிகக் கூடிய சாத்தியமானளவு நன்மைகளைப்

பெற்றுக் கொடுக்கத்தக்க விதத்தில் அதன் உள்ளார்ந்த வளமட்டம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதன் காரணமாக பாதுகாப்பு தகுதிகளை ஆய்வு செய்வதற்காகவும் சிவில் வான் போக்குவரத்துத் திணைக்களத்தின் மீளமைப்புத் தொடர்பான விதந்துரைப்புக்களைச் செய்வதற்காகவும் பன்னாட்டு சிவில் வான் போக்குவரத்து அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு சிவில் வான் போக்குவரத்து அமைப்பு நடவடிக்கைத் திட்டமொன்றினைத் தயாரித்துள்ளதுடன் இத்திட்டத்திலுள்ள முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சிவில் வான் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபை என மாற்றியமைக்கப்பட்டுள்ளதுடன் இது சபையொன்றினால் முகாமைப்படுத்தப்படும் சுயநிர்ணயமானதொரு சபையாக தொழிற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொறுப்புவாய்ந்த முயற்சிகள் காணப்படாமை மற்றும் உலகில் இடம்பெற்றுவரும் விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப பொருத்தமாக மாற்றிக் கொள்ளமுடியாத தன்மை ஆகிய அடிப்படைக் காரணங்களினால் கடந்த பல ஆண்டுகளாக வான் போக்குவரத்துத் துறையின் பொதுவான செயலாற்றம் மந்த நிலையிலிருந்து வருகின்றது. பயணிகள் போக்குவரத்தினைக் கருத்திற் கொள்கையில் தேசிய வான் போக்குவரத்து நிறவனம் மட்டும் அண்மை ஆண்டுகளில் சில முன்னேற்றங்களைக் காட்டியுள்ளது. விரிவடைந்த உள்நாட்டு வான் போக்குவரத்துப் பணிகளை வழங்க தனிப்பட்ட தொழிற்பாட்டாளர்கள் விரும்பி பெருமளவு தொகைப்பணத்தை ஏற்கனவே முதலீடு செய்துள்ளபோதும் பாதுகாப்புக் காரணங்களும் தெளிவானதும், நிலையானதுமான சிவில் வான் போக்குவரத்துக் கொள்கை இல்லாமையும் அவர்களின் செயலாற்றத்தினை மிக மோசமாகப் பாதித்துள்ளன. எனினும் பயணம் மற்றும் சுற்றுலாவில் முக்கியமாக கவனத்தைச் செலுத்தும் தற்போதைய விடயங்களில் அடையப்பட்டுள்ள சாதனைகளுக்குப் புறம்பாக, வான் போக்குவரத்துத்துறையை வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்ததுறையாக அபிவிருத்தி செய்வதற்கு பெருளமவு உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது. இலங்கை, பயணிகள் மற்றும் சரக்கு கொண்டு செல்லல், அதேபோன்று வான் போக்குவரத்துடன் தொடர்பான ஏனைய பணிகளுக்கும் இப்பிராந்தியத்தில் ஒரு மைய வானூர்தி நிலையமாக தோற்றம் பெறுவதற்கான சகல சாத்தியங்களையும் கொண்டுள்ளது. நாட்டில் பன்னாட்டு வான் போக்குவரத்து பேணல் வசதியினை ஏற்படுத்தல், வான் போக்குவரத்துடன் தொடர்பான தயாரிப்பு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், வான் போக்குவரத்துடன் தொடர்பான பணிக் கைத்தொழில்கள் மற்றும் சரக்குப் பணிகளை மேம்படுத்தல் ஆகியன இக் கைத்தொழிலுக்கும் அதேபோன்று நாட்டிற்கும் நன்மை பயக்கக்கூடிய முக்கிய உள்ளார்ந்த வளம் கொண்ட துறைகளாகக் காணப்படுகின்றன. உட்கட்டமைப்புப் பணிகளுக்குமாக இத்துறையின் அபிவிருத்திக்குத் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி உள்ளூரிலும் பன்னாட்டு ரீதியிலும் தேவையான நிதிகளைக் கவர்ந்து கொள்வதற்கு கட்டி தொழிற்படுத்தி சொந்தமாக்கு/கட்டி தொழிற்படுத்தி மாற்றல்செய் முறையை பின்பற்றமுடியும்.

## துறைமுகப் பணிகள்

கொள்கலன் பொருள் நியதிகளில், கொழும்புத் துறைமுகம் உலகில் கொள்கலன்களைக் கையாளும் முதல் 26 துறைமுகங்களுள் ஒன்றாக தற்பொழுது அதன் வருடாந்த ஆகக்கூடிய வடிவமைக்கப்பட்ட இயலளவான 1.7 மில்லியன் இருபது அடிக்கு சமமான கொள்கலன் அலகுகளைத் தொழிற்படுத்துகிறது. பன்னாட்டு கப்பற் பாதைகளுக்கு மிகவண்மித்த கேந்திர முக்கியத்துவமான இடத்தில் கொழும்பு அமைந்திருப்பதும், தென்னாசிய பிராந்தியத்தில் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளும் கொழும்புத் துறைமுகத்தின் கொள்கலன் மயமாக்கல் தொடங்கப்பட்டு 18 ஆண்டுகள் முடிவடைந்த சார்பு ரீதியாக குறுகியதொரு காலத்தில் கொழும்புத் துறைமுகம் இந்நிலையை அடைவதனை இயலச் செய்தன. எனினும், அண்மைய ஆண்டுகளில் சரக்குக் கையாளலில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி 1998இல் மிக வெளிப்படையாகத் தடைப்பட்டமைக்கு இயலளவு வரையறைகள், கிழக்காசிய நிதியியல் நெருக்கடிகளின் தாக்கம், குறைவடைந்துபோன வினைத்திறன்,போன்றன முக்கியமான காரணங்களாக இருந்ததுடன் மிக முக்கியமான காரணம் இப் பிராந்தியத்திலிருந்த மற்றைய துறைமுகங்களிலிருந்து தோன்றிய சரக்கு மாற்றி ஏற்றலுக்கான பாரிய போட்டியாகும். கொழும்புத் துறைமுகம் சரக்குகளை மாற்றிக் கப்பலேற்றுவதிலேயே பெருமளவிற்கு தங்கியுள்ளமையினால் ( மொத்த சரக்குக் கையாளலில் ஏறத்தாழ 75 சதவீதம் சரக்குகளை மாற்றிக் கப்பலேற்றலாகும்) வெளி உலகில் ஏற்படும் எந்தவொரு அபிவிருத்தியும் இதன் தொழிற்பாடுகளின் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைக் கொண்டிருக்கும். இப்பிராந்தியத்தில் பல புதிய துறைமுகங்களும் துறைமுக மேடைகளும் நிருமாணிக்கப்பட்டு வருவதுடன் 1998இன் இறுதிப் பகுதியிலிருந்து சரக்குக் கையாளலுக்காக ஓமானிலுள்ள சலாகாவில் அத்தகைய புதிய துறைமுகமொன்று திறந்து வைக்கப்பட்டது. இத்துறைமுகம் தற்பொழுது ஆண்டிற்கு 900,000 இருபது தொன் அலகுகளுக்குச் சமமான கொள்கலன்களைக் கையாளுவதற்கான இயலளவைக் கொண்டுள்ளதுடன் 2000 ஆண்டளவில் 1.9 மில்லியன் இருபது தொன் அலகுகளுக்குச் சமமான கொள்கலன்களைக் கையாளுவதற்கான இயலளவைக் கொண்டிருக்கும். அடுத்துவரும் சில ஆண்டுகளில் இந்தியாவில் துறைமுக

## அட்டவணை 5.7
## துறைமுகப் பணிகளின் செயலாற்றம்

| விடயம் | 1996 | 1997 | 1998(அ) | சதவீத மாற்றம் 1997 | சதவீத மாற்றம் 1998(அ) |
|---|---|---|---|---|---|
| 1. வருகை தந்த கலங்கள் (எண்ணிக்கை) | 3,857 | 4,087 | 4,233 | 6 | 4 |
| கொழும்பு | 3,467 | 3,627 | 3,879 | 5 | 7 |
| காலி | 84 | 56 | 104 | -33 | 86 |
| திருகோணமலை | 306 | 404 | 250 | 32 | -38 |
| 2. கையாளப்பட்ட மொத்தச் சரக்கு ('000 மெ.தொன்) | 22,722 | 26,832 | 26,847 | 18 | 0 |
| கொழும்பு | 20,885 | 25,117 | 24,793 | 20 | -1 |
| காலி | 236 | 182 | 402 | -23 | 121 |
| திருகோணமலை | 1,601 | 1,533 | 1,652 | -4 | 8 |
| 3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.ச.அ.) (ஆ) (இ) | 1,356 | 1,687 | 1,714 | 24 | 2 |
| 4. மாற்றி ஏற்றல் கொள்கலன் ('000 இ.ச.அ.) (ஈ) | 980 | 1,233 | 1,191 | 26 | -3 |
| 5. அரசிறை (ரூபா மில்லியன்) | 9,007 | 10,974 | 13,638 | 22 | 24 |
| கொழும்பு | 8,775 | 10,731 | 13,221 | 22 | -23 |
| காலி | 81 | 81 | 218 | 0 | 170 |
| திருகோணமலை | 151 | 162 | 199 | 8 | 23 |
| 6. செலவு (ரூபா மில்லியன்) | 6,551 | 8,194 | 8,590 | 25 | 5 |
| கொழும்பு | 6,188 | 7,807 | 8,163 | 26 | 5 |
| காலி | 150 | 152 | 186 | 2 | 22 |
| திருகோணமலை | 213 | 235 | 241 | 10 | 3 |
| 7. வரிக்கு முன்னான தேறிய இலாபம் (ரூபா மில்லியன்) | 2,456 | 2,780 | 5,048 | 13 | 82 |
| கொழும்பு | 2,587 | 2,924 | 5,059 | 13 | 73 |
| காலி | -69 | -72 | 32 | 4 | -145 |
| திருகோணமலை | -62 | -73 | -42 | 17 | -42 |
| 8. தொழில் நிலை (எண்ணிக்கை) | 17,476 | 19,033 | 18,957 | 9 | -0 |
| கொழும்பு | 15,589 | 17,101 | 17,181 | 10 | 0 |
| காலி | 841 | 831 | 759 | -1 | -9 |
| திருகோணமலை | 1,046 | 1,101 | 1,017 | 5 | -8 |
| 9. உற்பத்திக் குறிகாட்டிகள் (முதன்மைக் கப்பல்கள்) | | | | | |
| மணித்தியாலத்திற்கு பாரம் தூக்கி (மொத்தம். | 14 | 26 | 16 | -14.2 | 0 |
| மணித்தியாலத்திற்கு பாரம் தூக்கி (தேறிய) | 15 | 17 | 18 | -43.3 | 6 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திலேயே கையாளப்படுகின்றன.
(இ) இ.ச.அ. இருபது அடி சமமான கொள்கலன் அலகுகள்.
(ஈ) மீளடுக்கு நீங்கலாக

மூலம்: இலங்கை துறைமுக மேலாண்மைச் சபை.

வசதிகளை தரமுயர்த்துவதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது ஜவகர்லால் நேரு துறைமுகத்தில் ஆண்டிற்கு 500,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள் இயலளவுடன் கூடிய "நவசேவ" என்றழைக்கப்படும் புதிய கொள்கலன்கள் துறைமுக மேடையையும் உள்ளடக்குகிறது. மத்திய கிழக்கிலுள்ள பல முக்கிய துறைமுகங்களும் விரிவாக்கப்பட்டு வருகின்றன. சிங்கப்பூரும் அதன் இயலளவைக் கணிசமானளவிற்கு விரிவாக்குவதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப் படுத்துகின்றது. இத்தகைய காட்சி இப் பிராந்தியத்தில் கொள்கலன்களைக் கையாளும் இயலளவு, இப்பிராந்தியத்தின் சரக்குகளை மாற்றிக் கப்பலேற்றும் வளர்ச்சி வீதத்தினைவிட விரைவாக வளர்ச்சியுறுவதனை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இந் நிகழ்ச்சியின் கீழ், கொழும்புத் துறைமுகத்திற்கு அதன் இயலளவினை விரிவாக்குவதற்கான அவசரதேவை காணப்பட்ட வேளையில் முக்கிய கப்பற் பணிகளைக் கவருவதற்கும் அதன் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்து வதுடன் இப்பிராந்தியத்தின் மையத்துறைமுகமாகவும் தொடர்ந்து தொழிற்படுகிறது.

1998இல் கொழும்பு, காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களுக்கு வருகைதரும் கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 4233 இற்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்புத் துறை முகத்திற்கு வந்த சரக்குக் கப்பல்கள் 7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் திருத்தவேலைகள், நீர்க்கல எரிபொருள் நிரப்பல், மற்றும் ஏனைய பணிகளுக்காக வந்த கப்பல்களின் எண்ணிக்கை 74இற்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய பணிகளுக்காக குறிப்பாக எரிபொருள் நிரப்பல் பணிகளுக்காக கொழும்புத்துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வீழ்ச்சியடைவதற்கு கொழும்பின் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த எரிபொருள் விலைகளும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் வழங்கலுமே முக்கிய காரணங்களாகும். அதே வேளை கொழும்பில் கையாளப்பட்ட மொத்தச் சரக்கு 1997இன் 20 சதவீத உயர்விற்கு மாறாக 1998இல் சிறிதளவால் வீழச்சிய டைந்தது. 1998இல் கொள்கலன் கையாளல் 1997இன் 24 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1,714,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன்

அலகுகளுக்கு 2 சதவீதத்தினால் மட்டும் உயர்வடைந்தது. மாற்றிக் கப்பலேற்றல் கொள்கலன் கையாளல், 1997இன் 26 சதவீதம்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1,191,000 இருபது அடிக்குச் சமமான அலகுகளுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், உள்நாட்டுக் கொள்கலன் கையாளல் 478,698 இருபது அடிக்குச் சமனான கொள்கலன் அலகுகளுக்கு ஏறத்தாழ 15 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமையே காரணமாகும். அதே வேளை 1998இல் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் செயலாற்றங்கள் திருப்திகரமான முறையில் மேம்பட்டன. காலி துறைமுகத்தில் சரக்குகளின் கையாளல் இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்த வேளையில் திருகோணமலையின் கையாளல் 8 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

1998இல், கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் மாற்றி கப்பலேற்றல் கையாளல் வீழ்ச்சியடைந்தமைக்கு பல காரணிகள் உதவின. முதலாவது, நியூ வேர்ல்ட் அலையன்ஸ் போன்ற பல முக்கிய கப்பற்படுத்தல் நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டமையும் என்ஒஎல் நிறுவனத்தினால் ஏபிஎல் நிறவனம் கொள்வனவு செய்யப்பட்டமையும், இவற்றின் விளைவாக 1998இல் கொழும்புத் துறைமுகத்திற்கு ஏறத்தாழ 100,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளை இழந்தமையும், இரண்டாவது, ஓமானின் சலாலாவில் மினா ரேசட் துறைமுகம் திறக்கப்பட்டதுடன் சீலாண்ட்/மசேர்க் கூட்டமைப்பு அதன் மாற்றிக் கப்பலேற்றும் கையாளலில் பெரும் பகுதியை கொழும்புத் துறைமுகத்திலிருந்து சலாலாவிற்கு மாற்றிக் கொண்டதன் விளைவாக ஏறத்தாழ 35,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள் இழக்கப் பட்டமையும், மூன்றாவது, விபத்தின் காரணமாக ஜயா கொள்கலன் இறங்குதுறை 2இனைப் பல மாதங்கள் மூடிவைக்க வேண்டியிருந்தமையின் விளைவாக பல கப்பல்கள் துறைமுக மேடைக்கு வருவதில் காணப்பட்ட தாமதத்தினால் கொழும்பைக் கடந்து சென்றமையும், இறுதியாக சில அணிகள், கொழும்புத் துறைமுகத்தில் பணிகள் சிதைந்து போனமை மற்றும் துறைமுக மேடைகளுக்கு வருவதில் காணப்பட்ட தாமதம் என்பனவற்றின் காரணமாக அவற்றின் பணிகளை புறக்கீடு செய்து கொண்டமை, மாற்றிக் கப்பலேற்றலின் கையாளலில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பல புதிய கப்லேற்றல் நிறுவனங்கள் கொழும்புக்கான தமது பணியினை தொடங்கியன் மூலமாக ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. மேலும் ஜயா இறங்குதுறையில் நிறுவப்பட்டுள்ள மேலதிக சாதனங்கள், புதிய இறங்குதுறை திறக்கப்பட்டமை, 24 மணிநேரமும் வேலை செய்யும் விதத்தில் முறைமாற்று வேலை முறை மாற்றப்பட்டமை என்பன கப்பல் வந்து திரும்பிச் செல்லும் காலத்தை ஓரளவிற்கு குறைக்க உதவியதுடன் மாற்றிக் கப்பலேற்றல் சரக்கு வேறிடங்களுக்கு மாறிச் செல்வதனையும் தடுத்தது.

துறைமுகப் பணிகளுக்கான எதிர்காலக் கேள்வியை ஈடுசெய்வதற்காக உற்பத்தித் திறனை உயர்த்துவதனையும் துறைமுகப் பணிகளை விரிவாக்கு வதனையும் நோக்கமாகக் கொண்டு இலங்கைத்துறைமுக அதிகாரசபை பல செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது. இச் செயற்றிட்டங்கள் முக்கியமாக துறைமுக அபிவிருத்திக்கான முதன்மைத் திட்டத்திற் கிணங்க கொழும்புத் துறைமுகத்தின் கொள்கலன் கையாளல் இயலளவை உயர்த்துவதற்காகவே வடிவமைக்கப்பட்டன. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரினால் நிதியிடப்பட்டன. ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரிடமிருந்தான நிதி உதவியுடன் எட்டு உயர மட்டத்திற்கு வெற்றுக் கொள்கலன்களைக் குவித்து வைக்கும் மேடையொன்று தேவையான சாதனங்களுடன் ரூ.612 மில்லியன் செலவில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. ஜயா கொள்கலன் இறங்குதுறையின் இயலளவையும் உற்பத்தித் திறனையும் உயர்த்தும் பொருட்டு ரூ.1,750 மில்லியன் செலவில் மேலதிக சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. வடமுனை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கட்டம் 1 யூனிட்டி கொள்கலன் இறங்குதுறை என்றழைக்கப்படும். கொள்கலன் இறங்குதுறை 1998 நவெம்பரில் திறக்கப் பட்டதுடன் நிறைவடைந்தது. யூனிட்டி கொள்கலன் இறங்குதுறையின் இயலளவு ஆண்டிற்கு 100,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளாகும். இச் செயற்றிட்டத்தின் கட்டம் 11 மேலதிகமாக ஆண்டிற்கு 100,000 இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளை கூட்டுவதற்காக விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளது. அச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ.2,375 மில்லியன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதில் ரூ.828 மில்லியன் இச்செயற்றிட்டத்தின் கட்டம் 1இற்காகச் செலவிடப்பட்டது.

கட்டி தொழிற்படுத்தி மாற்றல் செய்தல் என்ற அடிப்படையிலான தனியார்துறைப் பங்கேற்புடன் குயின் எலிசபெத் கப்பற் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1998இல் அரசாங்கம் வரையறுக்கப்பட்ட சவுத் ஏசியா கேட்வே ரேமினல்ஸ் (பிறைவேட்) உடன் ஆரம்பச் செயற்றிட்ட உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ் துறைமுகச் சுவர் உள்நோக்கி 100 மீற்றர்களினால் அகலமாக்கப் பட்டதுடன் 3 கொள்கலன் மேடைகளும் ஐ.அ.டொலர் 240 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் நிருமாணிக்கப்படும். செயற்றிட்டம் முடிவடைந்த பின்னர் குயின் எலிசபெத்துறையின் கொள்கலன் கையாளல் இயலளவு ஆண்டிற்கு 250,000 இருபது அடிக்குச்

சமமான கொள்கலன் அலகுகளிலிருந்து ஆண்டிற்கு 1 மில்லியன் இருபது அடிக்குச் சமமான கொள்லன் அலகுகளுக்கு உயர்த்தப்படும். செயற்றிட்டத்தின்மீதான கட்டுமான வேலைகள் 1999இல் தொடங்கப்பட்டு 2004 அளவில் 3 நிலைகளில் நிறைவு செய்யப்படும். அதே வேளை இலங்கைத் துறைமுக அதிகாரசபை ரூ.1,200 மில்லியன் செலவில் கொழும்புத் துறைமுகத்தில் மேலதிகத் துணைப் படகு மேடையொன்றை நிருமாணிப் பதற்காக விலைக் குறிப்பீடுகளைக் கோரியுள்ளது. மேலும், தென் மாகாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற் காகவும் அதேவேளை தொகைவடிவில் சரக்கேற்றப்படும் கப்பல்களை காலிக்கு திசைதிருப்பிவிடுவதன் மூலம் கொழும்புத் துறைமுகத்தின் நெரிசல்களை குறைப்பதற்காகவும் ரூ.900 மில்லியன் செலவில் காலித் தறைமுகத்தில் இறங்குதுறை ஒன்றைக்கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திருகோணமலைத் துறைமுகத்தில் அலைதாங்கி ஒன்றை ரூ.2,000 மில்லியன் செலவில் நிருமாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகப் பணிகளின் நீண்டகால தேவையினை ஈடுசெய்வதற்காக குயின் எலிசபெத் துறைக்கு வெளியே புதிய கொழும்பு தெற்கு துறைமுகமொன்றை நிருமாணிப் பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. பரீட்சார்த்தத் திட்டங்களின்படி இத்துறைமுகம் ஆண்டிற்கு 4 மில்லியன் இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளைக் கையாளக் கூடிய இயலளவுடன் கூடிய நீர் ஆழமாக்கலையும் 11 துறைமுக மேடைகளையும் கொண்டிருக்கும். இச் செயற்றிட்டத்திற்கான பொறியியல் ஆய்வு மிக விரைவில் மேற் கொள்ளப்படும். அதேநேரம் அரசாங்கம் காலித் துறைமுகத்தில் புதிய வெளிப்புற துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான தேவையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. நீர்பிரிமேடு, துறைமுகப்பாதையின் மண்வாருதல் மற்றும் துறைமுகத்தின் துறைமுகத்தளம் என்பன அரசினால் நிருமாணிக்கப்படுவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ள வேளையில், துறைமுக மேடைகளின் கட்டுமானம் கட்டி தொழிற்படுத்தி மாற்றல்செய் என்ற அடிப்படையில் தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும்.

1998இல் இலங்கைத்துறைமுக அதிகார சபையின் மொத்த அரசிறை முக்கியமாக 1997இன் இறுதியளவில் துறைமுகக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையாலும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் 24 சதவீதத்தினால் ரூ.13,638 மில்லியனுக்கு அதிகரித்தது. மொத்தச் செலவினம் ரூ.8,590 மில்லியனாக விளங்கி 5 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதன் விளைவாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை 1997 இன் ரூ.2,780 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1998இல் ரூ. 5,048 மில்லியன் மொத்த இலாபத்தையடைந்தது.

## 5.7. நீர்ப்பாசனமும் குடியேற்றத் திட்டங்களும்

1998 காலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நடவடிக்கைகளாக முகாமைத்துவ மீளமைப்பு, முறைமை அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆகியன காணப் பட்டன. இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையானது தனது முகாமைத்துவ மீளமைப்பு மற்றும் மீள உருவாக்கல் ஆகியவற்றின் ஒரு பகுதியாக காலத்துக்கு முந்திய தன்விருப்பு ஓய்வுப் பொதியொன்றை நடைமுறைப் படுத்தியது. இவ்வாண்டில் உறப்பட்ட மொத்தச் செலவு ரூ.1,844 மில்லியனாக விளங்கியது. மகாவலி ஆணைக்குட் பட்ட பகுதியின் கீழ் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1997இன் 118,371 எக்டேயர்களிலிருந்து 1998இல் 119,574 எக்டேயர்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

1998இல் உலக வங்கி நிதியீட்டலின் கீழான 'எச்' முறையின் கீழுள்ள மறுசீரமைப்பு வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட வேளையில் வளவை

**அட்டவணை 5.8**

**வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு**

| செயற்றிட்டத்தின் பெயர் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (ரூ.மில்.) | 1997இன் செலவு (ரூ.மில்.) (ஆ) | 1998இன் செலவு (ரூ.மில்.) (இ) | 1998 இறுதிவரை ஒன்றுசேர்ந்த செலவு (ரூ.மில்.)(இ) |
|---|---|---|---|---|---|
| 1. மினிப்பே-நாகதீப நீர்ப்பாசன புனரமைப்பு செயற்றிட்டம் | | | | | |
| (i) மகாவலிப் பாலம் | கபொஒநி | ய.யென் 1,850 | 283 | 256 | 961 |
| (ii)நீர்ப்பாசனம் | | | 78 | 232 | 815 |
| 2. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் | ஐசஆ | ஐ.நா.அ. 6.3 | 105 | 65 | 628 |
| 3. தேசிய நீர்ப்பாசனம் | பஅஅ | ரூபா 1,406.9 | 512 | 567 | 2,199 |
| புனரமைப்பு செயற்றிட்டம் | ஐபொச | ரூபா 1,622.6 | | | |

(அ) யபஒமு - யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர்.
ஐசஆ - ஐரோப்பிய சமுகங்களின் ஆணைக்குழு.
பஅஅ - பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (உலக வங்கி)
ஐபொச - ஐரோப்பிய பொருளாதார சமுகம்.
கபொஒநி - கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதயம் (யப்பான்).
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை.
(இ) தற்காலிகமானவை.

மூலம்: நீர்ப்பாசனத் திணைக்களம்.

இடதுகரை விரிவாக்கப் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடங்கியிருந்தன. வெளிநாட்டு நிதியீட்டப்பட்ட முக்கியமான மூன்று செயற்றிட்டங்களான மினிப்பே நாகதீப நீர்ப்பாசன மறுசீரமைப்புச் செயற்றிட்டம், தேசிய நீர்ப்பாசன மறுசீரமைப்புச் செயற்றிட்டம் மற்றும் வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டம் ஆகியவற்றின் தொழிற்பாடுகள் 1998இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் முறையே ரூ.488 மில்லியன், ரூ.567 மில்லியன் மற்றும் ரூ.65 மில்லியன்கொண்ட தொகைகள் இவ்வாண்டில் செலவிடப்பட்டன. மினிப்பே நாகதீப நீர்ப்பாசன மறுசீரமைப்புச் செயற்றிட்டத்தின்கீழ் 24 பெரிய மற்றும் நடுத்தரத் திட்டங்கள் மற்றும் 952 சிறிய திட்டங்கள் மீதான மறுசீரமைப்பு வேலைகள் ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்பட்டன. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டத்தின்கீழ் 9 திட்டங்களின் வேலைகள் நிறைவுசெய்யப்பட்டன. 1994இலிருந்து தொழிற்பாட்டிலிருந்த 'யாயா' விளக்கவுரை முன்னோடி நிகழ்ச்சித் திட்டமானது இவ்வாண்டில் அனைத்து மகாவலி முறைமைப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையும், விதை நெல்லுற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் விரிவாக்குவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. அத்துடன் சந்திரிகாவெவ பிரிவு உடவளவையில் நிறுவப்பட்ட புதிய வேளாண்மையாளர் கம்பனித் திட்டத்துடன் தொடக்கப்பட்ட வேளாண்மையாளர் கம்பனிகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.8 சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

### வீடமைப்பு

நகர குடித்தொகை விரிவடைவதன் காரணமாக வீடமைப்பிற்கான, குறிப்பாக நகர வீடமைப்பிற்கான கேள்வி விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்றது. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான சனாதிபதி செயலணிக் குழுவின் அண்மைய அறிக்கையின்படி, கட்டி முடிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள நகர வீடமைப்பு 1996 இறுதியில் 169,111 அலகுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 1998 - 2005 காலப்பகுதியில் வீடமைப்பின் தேவை 511,987 அலகுகளாக இருக்குமெனவும் இதில் 322,556 அலகுகள் நகரத்துறையில் காணப்படும் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது. மொத்த வீடமைப்புத் தேவையில், அரச துறையும் தனிப்பட்ட சொத்துடைமையாளர்களும் ஏறத்தாழ முறையே 20 சதவீதத்தினையும் 23 சதவீதத்தினையும் வழங்குவரென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மிகுதி (57 சதவீதம்) தனிப்பட்டவர் களிடமிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றது. வீடமைப்பு வழங்கலைப் போதுமானளவிற்கு விரிவாக்கும் பொருட்டு இக் கைத்தொழிலில் தனியார் முதலீடுகளை கவர்கின்றமையை வீடமைப்புக் கொள்கை இலக்காக கொண்டிருக்க வேண்டிய அதேவேளை தனிப்பட்ட வீடுகளைக் கட்டுவோர்க்கு வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

1998இல், அரசதுறை வீடமைப்பு கட்டடவாக்கம் மேலும் முன்னேற்றத்தினைக் காட்டியது. அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முக்கிய பொறுப்பான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது 1998இல் ஏழு முக்கிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அவையாவன ஜனஉதான நிகழ்ச்சித்திட்டம், கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித்திட்டம், பேரளவு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கடற்றொழில் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

**அட்டவணை 5.9**
அரச துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

| துணை நிகழ்ச்சித் திட்டம் | தொடங்கப்பட்ட அலகுகள் (எண்.) | | முற்றுப்பெற்ற அலகுகள் (எண்.) | | பகிர்ந்தளிக்கப்பட்டவை (ரூ. மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) | 1997 | 1998(அ) |
| ஜன உதான நிகழ்ச்சித் திட்டம் | 6,582 | 16,083 | 9,751 | 9,010 | 142 | 180 |
| கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 23,307 | 23,102 | 20,705 | 19,933 | 305 | 211 |
| செவன வீடமைப்பு கொடை நிகழ்ச்சித் திட்டம் | 1,279 | 7,300 | 845 | 5,070 | 16 | 65 |
| நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 1,008 | 2,224 | 883 | 1,397 | 19 | 20 |
| பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 562 | 810 | 92 | 400 | 123 | 339 |
| நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டம் | 184 | 82 | 1,571 | 2,351 | 23 | 25 |
| கரையோர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 1,006 | 2,029 | 180 | 1,646 | 10 | 49 |
| இடர் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் (தென் மாகாணம்) | | | | | | |
| மீன்பிடி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| மொத்தம் | 33,928 | 51,630 | 34,027 | 39,807 | 638 | 889 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.

என்பனவாம். ஆய்விற்குரிய ஆண்டில் தொடங்கப்பட்ட வீடமைப்பு அலகுகள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட அலகுகள் என்பனவற்றினது எண்ணிக்கை நியதிகளில் அரசதுறை வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட வீடமைப்பு அலகுகளின் மொத்த எண்ணிக்கை 51,630 வீடமைப்பு அலகுகளுக்கு 52 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்த வேளையில் நிறைவு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 39,087 வீடமைப்பு அலகுகளுக்கு 17 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களும் கொடைகளும் ரூ.888 மில்லியன்களாக விளங்கி 1997உடன் ஒப்பிடுகைளில் 39 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. நகர வீடமைப்பு பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பெருமளவு கவனம் செலுத்தப்பட்டதனால் 1998இல் ஜனஉதன நிகழ்ச்சித் திட்டமும் கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமும் 1997 உடன் ஒப்பிடுகையில் மெதுவான போக்கினைக் கொண்டிருந்தன. எனினும் 1998 இறுதியில் 11,484 வீடமைப்பு அலகுகளைக் கொண்ட மொத்தமாக 196 ஜனஉதான கிராமங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1998இல் கட்டி முடிக்கப்பட்ட வீடமைப்பு அலகுகளின் கட்டுமானத்திற்காக 1997இன் ரூ.16 மில்லியனுக்கெதிராக 1998இல் ரூ.65 மில்லியன் வழங்கப்பட்டது. இதன்படி 7,300 வீடமைப்பு அலகுகளின் கட்டட வேலைகள் 1998 இறுதியளவில் பூர்த்தி செய்யப்படவிருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடுகளை வழங்குவதென்ற அரசின் கொள்கையைப் பேணுகின்றவிதத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபை பெருந்தோட்ட வீடமைப்பு சமூக நலன்புரி நம்பிக்கை நிதியத்துடன் இணைந்து பெருந்தோட்ட வீடமைப்பு, நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நன்மை பெறுநருக்கும் ஆண்டொன்றிற்கு 15 சதவீத வட்டியில் ரூ.30,000 வரையிலான கடன் வழங்கப்பட்டதுடன் இது 15 ஆண்டுகளில் மீளப் பெறப்படும். 1998இல் பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,224 வீடமைப்பு அலகுகள் தொடங்கப்பட்ட வேளையில் 1,397 அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டன. பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1998 இறுதியில் ரூ.20 மில்லியனுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபை நியாயமான விலைகளில் குறிப்பாக நகர மத்திய வகுப்பு குடும்பங்களுக்கு விற்பனை செய்வதற்காக நேரடிக் கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வீடுகளை நிருமாணிப்பதில் நேரடியாக ஈடுபட்டிருந்தது. 1998இல் 810 அத்தகைய வீடமைப்பு அலகுகளின் கட்டுமானம் தொடங்கியதுடன் 400 அலகுகள் ரூ.339 மில்லியன் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. பேரழிவு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் குடும்பங்களில் சில தென்பகுதிகளில் மீளக் குடியமர விரும்பியதனால் அக் குடும்பங்களுக்கு அவை வழங்கப் பட்டன. பேரளவு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 2,351 வீடமைப்பு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது டன், 82 புதிய அலகுகளின் கட்டட வேலை ரூ.25 மில்லியன் மொத்தச் செலவில் தொடங்கப்பட்டன.

அதேவேளை, பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நம்பிக்கை நிதியம், இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை மற்றும் மீன்பிடி நீரியல் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு போன்ற ஏனைய பல நிறுவனங்கள் குடித்தொகையில் குறிப்பிட்ட பிரிவினரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இவ்வாண்டில் பல வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தின. சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் 11இன் கீழ், பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நம்பிக்கை நிதியம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நில அளவீடு சென்றடையும் வீதிகள், நீர்வழங்கல், சுகாதார வசதிகள் போன்ற வீடமைப்புக் கடன்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் , 1997இன் 298 புதிய வீடமைப்பு அலகுகளுடனும் 420 தரமுயர்த்தப்பட்ட அலகுகளுடனும் ஒப்பிடுகையில் 1998இல் 794 புதிய வீடமைப்பு அலகுகள் நிருமாணிக்கப்பட்டதுடன் 1,075 அலகுகள் தரமுயர்த்தப்பட்டன. 1998 இறுதியில் 1135 வீடமைப்பு அலகுகளில் மேலதிக வேலைகள் செய்யப்பட்டன. இவ்வாண்டில் சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் 11இன்கீழ் இந் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூ.41 மில்லியன் கொண்டதொரு தொகை செலவிடப்பட்டது. மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மக்களின் நன்மைக்காக 1997இல் மீன்பிடி நீரியல் மூலவள அபிவிருத்தி அமைச்சு புதிய "தியவற கம்மன" வீடமைப்புச் செயற்றிட்டமொன்றினை 1997இல் அறிமுகப்படுத்தியது. 1998இல் இச் செயற்றிட்டத்தின் கீழ் ரூ.107 மில்லியன் செலவில் மொத்தமாக 741 வீடமைப்பு அலகுகள் நிறைவு செய்யப்பட்டன. 1998இல் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய குடியேற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதே வேளை கொழும்பு மாநகர சபை எல்லைக்குட் பட்ட சேரிகள் மற்றும் சிறு குடிசைகளில் வசிப்பவர் களென மதிப்பிடப்பட்ட 60,000 குடியிருப்பாளர்களை சுத்தமான குடியமர்த்தல் செயற்றிட்டத்தின் கீழ் மீளக்

சிறப்புக்குறிப்பு 6

## கொழும்புப் பெருமபாக வீடமைப்பு ஒப்புதல் சுட்டெண்

வீடமைப்புக் கட்டடவாக்கம் முக்கியமானதொரு பொருளாதார நடவடிக்கையாகவும் உள்நாட்டு மூலதனவாக்கத்தின் முக்கியமானதொரு பகுதியாகவும் விளங்குகின்றது. தற்பொழுது நாட்டின் வீடமைப்புக் கட்டடவாக்கத்தின் அளவையும் போக்கையும் கணிப்பதற்கு பொருத்தமான அளவீட்டுமுறையெதுவும் காணப்படவில்லை. குறிப்பிட்ட சில கள அளவீடுகள் குடியிருப்பு வீடுகள் தொடர்பான சில தகவல்களைக் கொண்டிருந்த வேளையிலும் அத்தரவுகளை தொடர்ச்சியான அடிப்படையில் பெறுவது இன்னமும் கடினமாகவேயுள்ளது. இலங்கை மத்திய வங்கி தொடர்மாடிக் கட்டடத் தொகுதிகள் உட்பட கொழும்பு மாநகர சபையினால் வழங்கப்பட்ட கட்டட ஒப்புதல்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்து வருவதுடன் இதனை மாதாந்தச் செய்தித்திரட்டிலும் வெளியிட்டு வருகின்றது. இத் தரவுகள் உள்ளடக்கியுள்ள விடயங்களையும் அது சமர்ப்பிக்கப்படும் முறையையும் முன்னேற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. நிலத்தின் கிடைப்பனவு வரையறுக்கப்பட்டுள்ளதும் உயர்ந்த விலைகளும் கொழும்பு மாநகர சபைக்குள் வீடுகளின் கட்டடவாக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளன. எனவே இவ்விடயம் மீதான மிகச்சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்புப் பெரும்பாக பிரதேசத்தினை மட்டுமாவது உள்ளடக்கும் விதத்தில் பிரதேசத்தை விரிவாக்குவது அவசியமானதாகும். மேலும், வீடமைப்புக் கட்டடவாக்கச் சுட்டெண், எதிர்கால பொருளாதார போக்குகளை முன் கூட்டியே உய்த்துணர்ந்து கொள்வதிலும், பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப வீடமைப்பு முதலீட்டாளர்களின் மனப்போக்கினை இனங்கண்டு கொள்வதில் வீடமைப்புக் கட்டடவாக்கத் திற்கும் பொதுவான பொருளாதாரப் போக்குகளுக்கு மிடையிலான உறவு முறையை பகுப்பாய்வு செய்வதற்கும் உதவக்கூடும்.

வீடமைப்புக் கட்டடவாக்கத்திற்கான சுட்டெண்ணினைத் தயாரிக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்களிலுள்ள 4 மாநகர சபைகள், மூன்று நகர சபைகள், 8 பிரதேச சபைகள் என்பனவற்றை உள்ளடக்கிய 15 அரச உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து வீடமைப்பு ஒப்புதல் தொடர்பாக 1995ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தத் தரவுகளை சேகரித்துள்ளது. குடித்தொகை அடர்த்தி, கொழும்பிற்கு அண்மித்தான இட அமைவு என்பன அரச உள்ளூராட்சி மன்றங்களைத் தெரிவு செய்வதற்கான இரு முக்கிய அம்சங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த 15 உள்ளூராட்சி மன்றங்களினதும் குடித்தொகை, மேல் மாகாணத்தின் குடித்தொகையில் 54 சதவீதத்தினையும் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 15 சதவீதத்தினையும் கொண்டுள்ளன.

அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு தனி வீடமைப்பு ஒப்புதல் சுட்டெண் வேறுபட்ட வகைகளிலான தரைப் பரப்புக்களுக்காக கணிக்கப்பட்டது.

கொழும்புப் பெரும்பாக வீடமைப்பு ஒப்புதல் சுட்டெண் (1995 =100) 1996இல் 93.3 இற்கு

அட்டவணை 1
வதிவிட கட்டடங்களுக்கான கொழும்புப் பெரும்பாக வீடமைப்பு ஒப்புதல்கள் சுட்டெண் (கொபெவீஒசு)

(1995 =100)

| காலம் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | | | | கொ.பெ.வீ.ஒ.சுட்டெண் (1995 =100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | <1000 ச.அடி | <1000- 2000 ச.அடி | <2000 ச.அடி | மொத்தம் | <1000 ச.அடி | <1000- 2000 ச.அடி | <2000 ச.அடி | மொத்தம் |
| 1995 | 3,462 | 4,094 | 3,101 | 10.657 | 100 | 100 | 100 | 100 |
| 1996 | 2,895 | 3,906 | 3,144 | 9,945 | 83.6 | 95.4 | 101.4 | 93.3 |
| 1997 | 2,986 | 4,152 | 3,066 | 10,204 | 86.3 | 101.4 | 98.9 | 95.7 |
| 1998 | 2,908 | 4,213 | 3,186 | 10,307 | 84.0 | 102.9 | 102.7 | 96.7 |
| 1997 1ஆம் காலாண்டு | 620 | 924 | 702 | 2,246 | 79.2 | 94.7 | 93.7 | 89.5 |
| 2ஆம் காலாண்டு | 773 | 1,019 | 750 | 2,542 | 98.7 | 104.4 | 100.1 | 101.4 |
| 3ஆம் காலாண்டு | 831 | 1,112 | 860 | 2,803 | 106.1 | 113.9 | 114.8 | 111.8 |
| 4ஆம் காலாண்டு | 762 | 1,097 | 754 | 2,613 | .97.3 | 112.4 | 100.7 | 104.2 |
| 1998 1ஆம் காலாண்டு | 673 | 976 | 754 | 2,403 | 85.9 | 100.7 | 100.7 | 95.8 |
| 2ஆம் காலாண்டு | 647 | 895 | 717 | 2,259 | 82.6 | 91.7 | 95.7 | 90.1 |
| 3ஆம் காலாண்டு | 765 | 1,202 | 973 | 2,940 | 97.7 | 123.2 | 129.9 | 117.2 |
| 4ஆம் காலாண்டு | 823 | 1,140 | 742 | 2,705 | 105.1 | 116.8 | 99.1 | 107.6 |

வசதிகளை அபிவிருத்தி செய்தல், சிறு குடிசைகளைத் தரமுயர்த்தல், வீதிகளையும் பாலங்களையும் நிருமாணித்தல், வடிகால் வலையமைப்புக்களை நிருமாணித்தல், திண்மக்கழிவு, பொருட்களின் முகாமைத்துவம், நகர மத்தி அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் பேட்டைகளைத் திறத்தல் என்பன இச் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் சிலவாகும். அதேவேளை பத்தரமுல்ல, மற்றும் பெல்வத்தையிலுள்ள நிருவாகக் கட்டடத் தொகுதிகளின் வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்காக இவ்வாண்டில் ரூ.53 மில்லியன் கொண்ட தொகை நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை செலவிட்டது. அவிசாவளை நகரப்பகுதி மற்றும் தம்புல்ல நகரம் என்பனவற்றின் அபிவிருத்தி ரூ.15 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டது. குறைந்த செலவினைக் கொண்ட வீடமைப்பு, அரச ஊழியர்களின் வீடமைப்பு, மத்திய வருமான வீடமைப்புத் திட்டங்களின் மேம்பாட்டு மீதான செலவினம் ரூ.20 மில்லியனாக விளங்கியது. நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை கோமாகமவிலும், இரத்மலானையிலும் பல கைத்தொழில் அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் பொறுப்பேற்றுள்ளது. அதேவேளை நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்களின்மீது ரூ. 82 மில்லியனையும் நில வங்கிக்கான நிலத்தின் கொள்வன விற்காக ரூ.22 மில்லியன்களையும் செலவிட்டது.

கொழும்பு தலை நகரப் பிரதேசத்திற்காக அனைத்தையும் உள்ளடக்கிய பிராந்திய அமைப்புத் திட்டமொன்றின் வடிவமைப்பினை நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை 1998இல் நிறைவு செய்தது. இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கொழும்பு நகரத்திலும் அதன் புற நகர்ப்பகுதியிலும் உயர்ந்தளவு குடித்தொகை குவிவதைக் குறைப்பதேயாகும். மேலும், சப்பிரகமுவா, ஊவா, மத்தி, வடமேல் மற்றும் தென் மாகாணங்களும் தொடர்பான பிராந்திய வரைவு அமைப்புத்

**சிறப்புக்குறிப்பு 7**

## உண்மைச் சொத்து அபிவிருத்தி மற்றும் வங்கி நிதியிடல் மீதான அளவீடு

அதிகரித்துச் செல்லும் கேள்வி, மற்றும் சொத்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வழங்கப்பட்ட பொதுவான இறை ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் உண்மைச் சொத்துத்துறை குறிப்பிடத்தக்க விரிவினைக் காட்டியது. முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வரி ஊக்குவிப்புக்கள் உண்மைச் சொத்துத்துறையில் முதலீடு செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தன. இதன் விளைவாக, 1997 இறுதியில் முதலீட்டுச்சபை ரூ.99 பில்லியன் பெறுமதி கொண்ட மொத்தமாக 147 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. உண்மைச் சொத்துத்துறைக்கான வங்கித் தொழில் துறையின் வெளிப்படுத்துகை விரிவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் அமைந்துள்ள முக்கிய உண்மைச் சொத்து அபிவிருத்தி செயற்றிட்டங்களின் தற்போதைய நிலையை பரீட்சிப்பதற்காக சிறப்பாக தங்கல் வீதம் மற்றும் செயற்றிட்டங்களின் நிதியியல் ஆற்றல் என்பனவற்றிற்கு சிறப்புக்கவனம் செலுத்தி மத்தியவங்கியினால் நடத்தப் பட்ட அளவீட்டின் தொகுப்பு கீழே தரப்படுகிறது. கொழும்பு நகரிலும் புற நகர்ப்பகுதிகளிலும் அமைந்துள்ள மொத்த 33 பாரிய சொத்து அபிவிருத்தி நிறுவனங்கள் இவ்வளவீட்டின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வளவீடு 1998 யூலை- ஓகத்து காலப்பகுதியில் நடத்தப்பட்டது. மாதிரித்தெரிவு முதலீட்டுச்சபை, மற்றும் சில வங்கிகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. முக்கிய தெரிவு அம்சமாக செயற்றிட்டத்தின் கட்டுமான செலவு இருந்ததுடன் இதன் காரணமாக ரூ.200 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினைக் கொண்ட பெரும்பாலும் அனைத்துப் புதிய கட்டுமான செயற்றிட்டங்களும் இவ்வளவீட்டில் உள்ளடக்கப்பட்டன. அளவீட்டின் முடிவுகளின்படி 33 கம்பனிகளில் 14 வதிவிட கட்டுமான செயற்றிட்டங்களையும், 11 அலுவலகக் கட்டடங்களையும், 3 வர்த்தகக் கட்டட செயற்றிட்டங்களையும் கொண்டிருந்த வேளையில் எஞ்சிய செயற்றிட்டங்கள் வதிவிட/ வர்த்தக மற்றும்/ அல்லது அலுவலகச் செயற்றிட்டங்களுடன் இணைந்தவையாகக் காணப்பட்டன. பொதுவாக 33 செயற்றிட்டங்களும் 2.8 மில்லியன் ச.அடி கொண்ட அலுவலக மற்றும் வர்த்தக தரைப் பரப்பினையும் 2,230 தொடர்மாடி குடியிருப்பு அலகுகளையும் கொண்டிருந்தன. அளவீடு செய்யப்பட்ட செயற்றிட்டங்களில் 73 சதவீதமானவை உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு சொந்தமானவையாக விளங்கிய வேளையில் எஞ்சியவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு இணைந்த துணிகர தொழில்முயற்சிக் கம்பனிகளுக்குச் சொந்தமானவை

யாகவும் இருந்தன. 2 கம்பனிகள் நீங்கலாக அனைத்துக் கம்பனிகளும் முதலீட்டுச் சபைத் தகுதியைக் கொண்டிருந்தன. மொத்தச் செயற்றிட்டச் செலவு ரூ.31,000 மில்லியனாகக் காணப்பட்டது.

அளவீடு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையான 33 செயற்றிட்டங்களில் 23 செயற்றிட்டங்கள் மட்டும் முழுமையான வர்த்தகத் தொழிற்பாடுகளைக் கொண்டிருந்தன. வாத்தக அலுவலக தரைப் பரப்பிற்கான சராசரி தங்கல் வீதம் 70 சதவீதமாக இருந்தவேளையில் வதிவிடப் பிரிவுகளில் இவ்வீதம் 64 சதவீதமாக இருந்தது. அளவீடு செய்யப்பட்ட மொத்த நிறுவனங்களில் (33 செயற்றிட்டங்கள்) 25 கட்டிடங்களில் மக்கள் போதுமானளவிற்கு வதியவில்லை. இவற்றில் 17 நிறுவனங்கள் வாய்ப்புள்ள வாடகையாளர்களுடன் சொத்துக்களின் விற்பனை வாடகை அல்லது குத்தகை தொடர்பாக பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளன. எஞ்சிய எட்டு நிறுவனங்களும் வாடிக்கையாளர்களுடன் ஏற்கனவே உடன்படிக்கைகளை எட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளன. எனவே அளவீடு செய்யப்பட்ட நிறுவனங்களில் ஏறத்தாழ 50 சதவீதமானவை முழுமையான தங்கியிருப்பினைக் கொண்டுள்ளன என்ற நியாயமான முடிவிற்கு வரலாம். எனினும் துறைவாரியான செயலாற்றத்தினை கணக்கிலெடுக்கையில் வதிவிடச் சொத்துக்களின் விற்பனை, வாடகை அல்லது குத்தகை மற்றைய துறைகளுடன் ஒப்பிடுகையில் மிகப்பின் தங்கியுள்ளமையைக் காணலாம்.

அளவீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் நிதியியல் ஆற்றல் பற்றியும் பரீட்சிக்கப்பட்டது. இம் மதிப்பீட்டில் நிதிகளின் மூலங்கள், மீள் கொடுப்பனவு இயலளவு, வெளிநின்ற கடன் தொகை, கடன் மீள் அட்டவணைப் படுத்தல், போன்றவை கருத்திற் கொள்ளப்பட்டன. அளவீடு செய்யப்பட்ட செயற்றிட்டங்களுக்கான மூலதன நிதிகளின் முக்கிய மூலங்களாக பங்கு மூலதனம் (58சதவீதம்) சொந்த மூலதனம் (36 சதவீதம்) நீண்டகாலக் கடன்கள் (72 சதவீதம்) என்பன காணப்பட்டன. இரு கம்பனிகள் தொகுதிக்கடன்களை வழங்கிய வேளையில் 8 கம்பனிகள் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றன. அளவீடு மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் கம்பனிகளினாலும் பெறப்பட்ட நீண்டகாலக் கடன்களின் மொத்தத் தொகை ரூ.7,554 மில்லியன்களாக விளங்கியதுடன் இதில், ரூ.6,006 மில்லியன் அளவீடு செய்யப்பட்ட நேரத்தில் வெளிநின்றது. வெளிநின்ற கடன் தொகையில் ஏறத்தாழ 56 சதவீதம் வதிவிட சொத்து அபிவிருத்தியாளர்களிடமிருந்து வரவேண்டியிருந்த வேளையில் 21 சதவீதம் வர்த்தக மற்றும் அலுவலக சொத்து அபிவிருத்தியாளர்களிடமிருந்து வரவேண்டியிருந்தது. அளவீடு செய்யப்பட்ட செயற்றிடங்களுக்கான நீண்ட காலக் கடன்களின் முக்கிய முலங்களாக வர்த்தக வங்கிகளும் (உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் இரண்டும்) அபிவிருத்தி நிதி நிறுவனங்களும் காணப்பட்டன. அளவீடு செய்யப்பட்ட சொத்து அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ.2,834 மில்லியன்களாக விளங்கிய வேளையில், இரு முக்கிய நீண்டகால கடன் வழங்கல் நிறுவனங்கள் ரூ.1,680 மில்லியன்களை வழங்கின.

சில அபிவிருத்தியாளர்கள் கடன்களை மீளச் செலுத்த இன்னமும் தொடங்கவில்லை. அளவீடு செய்யப்பட்ட சொத்து அபிவிருத்தியாளர்களினால் ஏறத்தாழ 25 சதவீதத்தினர் ( 7 செயற்றிட்டங்கள் )கடன் மீள் அட்டவணைப்படுத்தலுக்கு விண்ணபித்துள்ள வேளையில் ஏறத்தாழ 45 சதவீதத்தினர் தமது கடன்களை மீளச் செலுத்தவதில் தங்களுக்கு எந்த இடர்பாடுகளும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். கடன் மீள் அட்டவணைப்படுத்தலுக்காக விண்ணப்பித்தவர்களின் உள்நாட்டுக் கடன்களின் வெளிநின்ற மொத்தத் தொகை ரூ.1,598 மில்லியன்களாக இருந்தது. இக் கோரிக்கையில் அரைப்பங்கு வதிவிட சொத்து அபிவிருத்தியாளரிடமிருந்தே எழுந்தது.

அளவீட்டின்படி, வர்த்தக/ அலுவலகத் தளப்பரப்பின் வாடகை/ குத்தகைக்கான சராசரி வீதம் ச.அடிக்கு 61.75ஆகவும் கொழும்பு 4 இல் உள்ள சொத்துக்களைப் பொறுத்தவரை ச.அடிக்கு ரூ.87.5 கொண்ட உயர்ந்த வீதமும் காணப்பட்டது. பாதுகாப்பு நிலைமை மற்றும் உயர்ந்த நிரம்பல் என்பனவற்றின் முக்கிய காரணமாக மிகக் குறைந்த வீதம் கொழும்பு 3 இல் பதிவு செய்யப்பட்டது.

அளவீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், குறைந்த தகவல் வீதத்திற்கு பொதுவாக நாட்டிலும் குறிப்பாக கொழும்பு நகரிலும் காணப்படும் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் பொருளாதாரம் மெதுவடைந்தமையின் விளைவாகத் தோன்றிய மந்தமடைந்த கேள்வி என்பனவே முக்கிய காரணங்களாகும். கட்டடப் பொருட்களின் அதிகரித்துச் செல்லும் செலவு, சுற்றுலா வருகைகளின் மெதுவான மீட்சி, சில சட்டரீதியான தடைகள் (எடுத்துக் காட்டாக கூட்டாட்சிச் சட்டம் வெளிநாட்டவர்களுக்கு 6ஆம் மாடிக்குக் கீழ் உள்ள தொடர்மாடி குடியிருப்புக்களை குத்தகைக்கு/

விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துகிறது.) என்பன உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களினால் அனுபவிக்கப் பட்டுவரும் உடைமைத் தடைகளில் சிலவாகும். அலுவலக, மற்றும் வர்த்தகப் பணி மனைகளுக்கான கேள்வி பாதுகாப்பு நிலைமைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவிடத்து வதிவிடப் பணிமனைகளுக்கான கேள்வி பொருளாதாரத்தின் மெதுவான போக்கினால் பாதிக்கப்பட்டது.

பல சொத்து அபிவிருத்தியாளர்கள் வங்கிக் கடன்கள் மீதான உயர்ந்த வட்டிவீதம் தொடர்பாகத் தமது விசனங்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் வட்டி விதங்களின் தற்போதைய மட்டத்தினைக் கருத்திற் கொள்கையில் செயற்றிட்ட செலவில் குறைந்தது 75 சதவீதத்தினையாவது பங்கு மூலதனம் மூலமாகத் திரட்டினாலொழிய சொந்த அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆற்றல் மிக்கனவாக இருக்க முடியாது என்பது அவர்களின் கருத்தாகும். பெரும் பாலும் அனைத்துச் சொத்து அபிவிருத்தியாளர்களும், அதிகரித்த கட்டடவாக்கச் செலவுகளுக்கும் அதன் விளைவாக ஏற்பட்ட தேவையற்ற தாமதங்களுக்கும் காரணமான சிக்கலான நிருவாக வழிமுறைகள் மற்றும் நிபுணத்துவ சிவப்பு நாடா முறைகள் பற்றிய விசனங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

பாரிய- அளவு வதிவிட சொத்து அபிவிருத்தியாளர்கள் மந்தமான கேள்வி பற்றி முறைப்பாடுகளைச் செய்துள்ளபோதும் கூட, குறைந்த மற்றும் மத்தியதர வீடுகளுக்கு மிகையான கேள்வி காணப்பட்டது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை, முக்கியமானதொரு பிரச்சனையாதெனில், தொகுதிக் குடியிருப்பாளர்களின் ஈடுகள் மீது கடன்களை வழங்க வங்கிகள் தயங்குவதனால் வாய்ப்புள்ள வீட்டுச் சொந்தக் காரர்கள் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு பெரும் இடர்ப்பாடுகளை எதிர் நோக்கவேண்டியுள்ளமையாகும். கொழும்பிலும் கொழும்பைச் சுற்றியுமுள்ள பல வதிவிடங்கள் அலுவலகம் அல்லது வர்த்தகப் பணி மனைகளாக மாற்றப்பட்டுள்ளமையின் காரணமாக வர்த்தக மற்றும் அலுவலகப் பணிமனைகளுக்கான கேள்வி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றியமைத்தல்கள், சுற்றாடல் தொடர்பான விடயங்களையும் சமூகப் பொருளாதார விளைவுகளையும் பரிசீலனையில் கொண்டிராததன் காரணமாக பல் வேறுபட்ட பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளன. இத்தகைய எல்லாக் குறைபாடுகளும் இருந்தபோதும், தற்போதைய மந்த நிலையிலிருந்தும் பொருளாதாரம் மீட்சி பெற்றதும் தாங்கள் புதிய முதலீடுகளில் ஈடுபடப்போவதாகவே பல சொத்து அபிவிருத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அளவீடுகளின் பெறுபேறுகளிலிருந்து சில பரந்த முடிவுகளை நாம் பெற்றுக்கொள்ளலாம். வர்த்தக/ அலுவலக மற்றும் வதிவிடப் பணிமனைகளின் தங்கும் சராசரி வீதம் முறையே 70 சதவீதமாகவும் 64 சதவிதமாகவும் விளங்கிய வேளையில் அனைத்து முக்கிய உண்மைச் சொத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் குறைந்த தங்கும் அளவைக் கொண்டிருந்தன. தங்கும் வீதங்கள் இம் மட்டத்தில் இருப்பதனால் பெரும்பாலான கம்பனிகள் கடன் மீள் கொடுப்பனவுகள் நீங்கலாக, தொழிற்பாட்டுச் செலவுகளை மட்டுமே ஈடு செய்யக் கூடிய நிலைமையில் இருந்தன. இதன் விளைவாக, அளவீடு செய்யப்பட்ட கம்பனிகளில் ஏறத்தாழ 21 சதவீதக் கம்பனிகள் கடன்களை மீள அட்டவணைப் படுத்தலுக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளன. தங்கும் அளவினை அதகரிப்பதற்காக, சில கம்பனிகள் தமது வாடகைக் கட்டணத்தைக் குறைத்துள்ளன. இது அவர்களது வருமானம் மேலும் குறைவடைய வழி வகுக்கக்கூடும். பல கம்பனிகள் இழப்புக்களைக் குறைப்பதற்காக குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற தமது துணைக் கட்டங்களில் தமது அலுவலகங்களை அமைத்துள்ளன. அதே நேரம், பல கம்பனிகளில் கடன் மீள் கொடுப்பனவுகளுக்கு தாய்க் கம்பனிகள் உதவியளித்துவருகின்றன. இச் சூழ்நிலையின் கீழ் நடுத்தரக் காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் தங்கும் வீதங்கள் கணிசமான மட்டத்திற்கு அதிகரித்தாலொழிய உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்கள் தாக்குப் பிடிப்பதும் அவர்களது கடன்களைத் தீர்ப்பனவு செய்வதும் மிக இடர்பானதாக இருக்கும்.

அளவீட்டின்படி, அளவீடு செய்யப்பட்ட உண்மைச் சொத்து அபிவிருத்திக் கம்பனிகளினால் பெறப்பட்ட மொத்தநீண்டகாலக் கடன்கள் ரூ.7,554 மில்லியன்களாக விளங்கியதுடன் இதில் ரூ.3,854 மில்லியன் உள்ளூரில் பெறப்பட்டது. உள்ளூர்க் கடன்களில் 59 சதவீதம் அல்லது ரூ.2,284 மில்லியன் வர்த்தக வங்கிகளிடமிருந்து பெறப்பட்டது. மத்திய வங்கியின் வங்கி முற்பணங்கள் தொடர்பான காலாண்டு அளவீட்டின்படி 1998 செத்தெம்பர் இறுதியில் சொத்து அபிவிருத்தி, அலுவலகப் பணிமனை கட்டுமானத்திற் கான கொடுகடன் ரூ.7,338 மில்லியனாக (தனியார் துறைக்கான கொடுகடனில் 3.2 சதவீதம்) விளங்கிய வேளையில் முழு உண்மைச் சொத்துத்துறைக்குமான மொத்தக் கொடுகடன் 13 சதவீதமாக இருந்தது. ஆகவே உண்மைச் சொத்துத் துறைக்கான வர்த்தக வங்கிகளின் வெளிப்படுத்துகை தற்போது மிகையான தன்மை யொன்றை எடுத்துக் காட்டாதபோதும் இத்துறைக்கான கொடுகடன் ஒதுக்கினை மேலும் விரிவாக்கும்போது எச்சரிக்கை உணர்வுடனேயே நடந்து கொள்ள வேண்டும்.

திட்டங்களும் தயாரிக்கப்பட்டது. மேலும் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை மாவட்டமட்டத்தில் நகர அபிவிருத்தி திட்டங்களின் வடிவமைப்பினைத் தொடங்கியது. இதன்படி, 7 மாகாணங்களிலுள்ள 22 தெரிந்தெடுக்கப்பட்ட நகரங்கள் தொடர்பாக நகரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அழகுத் தோற்றப்பாட்டினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாநகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை கம்பகா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி செயற்றிட்டத்துடன் தொடர்பான வேலைகளையும் கண்டி புனித பிரதேச அபிவிருத்தித் திட்டம், வரக்காபொல நகர அபிவிருத்திச் செயற்றிட்டம், பலாங்கொட நகர விரிவாக்க செயற்றிட்டம், மற்றும் நுவரெலியா கிறகரி ஏரி அபிவிருத்தி செயற்றிட்டம் என்பனவற்றின் ஒன்று திரட்டல் வேலைகளையும் மேற்கொண்டது. தென்மாகாண அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் அடையாளங்காணப்பட்ட றுகுணுபுர செயற்றிட்டத்தின் திட்டமிடலுக்கும் இணைப்பிற்கும் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை பொறுப்பாக இருக்கின்றது. அதே நேரம் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை சீதாவாக்கபுர கைத்தொழில்பேட்டைச் செயற்றிட்டத்திற்கான இணைப்பாளராக செயற்படுவதுடன் இதன் கீழ் 168 ஏக்கர் நிலம், 77 சிறிய நடுத்தர மற்றும் பாரிய அளவுக் கைத்தொழில்களை அமைக்கும் நோக்கத்திற்காக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

### நீர் வழங்கலும் சுகாதாரமும்

குடித்தொகையிலேற்பட்ட விரிவு, அதேபோன்று வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளிலிருந்து உயர்ந்துவரும் கேள்வி என்பனவற்றின் காரணமாக குழாய் வழி நீரின் நம்பகரமான வழங்கலுக்கான கேள்வி விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்றது. தற்பொழுது தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் மொத்த நீர் உற்பத்தி ஆண்டிற்கு ஏறத்தாழ 3 சதவீதத்தினால் அதிகரித்து வருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் அண்மைய நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/ 97 இன்படி குடித்தொகையில் ஏறத்தாழ 31 சதவீதத்தினர் மாத்திரமே குழாய் வழி நீரைப் பெறுகின்றனர். வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி மீதான சனாதிபதி செயலணிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பாதுகாப்பான குழாய் நீரின் தற்போதைய கேள்வியை ஈடுசெய்வதற்கு நீர் வழங்கல் துறையின் தற்போதைய வருடாந்த மூலதன மட்டத்தினை மூன்று மடங்கு அதிகரிக்க வேண்டியிருக்கும்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை நாட்டின் திட்டமிடல், வடிவமைத்தல், நிர்மாணித்தல், தொழிற்படுத்தல் மற்றும் நீர் வழங்கல் வசதிகளைப் பேணுதல் என்பனவற்றிற்குப் பொறுப்பான முக்கிய நிறுவனமாக விளங்குகின்றது. 1998இல் இது 276 நீர் வழங்கல் திட்டங்களை முகாமைப்படுத்தியது. தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் மொத்த நீர் உற்பத்தி 297 மில்லியன் கன மீற்றராக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 3 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. இவ்வாண்டுக் காலத்தில் பெருமளவு எண்ணிக்கையான பெரிய மற்றும் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் முற்றுப் பெற்றமையினால் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் வழங்கப்பட்ட இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 438,384இற்கு 11 சதவீதத்தினால் (47,694) அதிகரித்தது. புதிய இணைப்புக்களில் ஏறத்தாழ அரைப்பங்கு கிராமியத் துறைக்கே வழங்கப்பட்டது.

பாதுகாப்பான குடிநீரை 2010ஆம் ஆண்டளவில் எல்லோருக்கும் வழங்குவதே அரசின் இலக்காகும். 1998 இறுதியில் குடித்தொகையில் 66 சதவீதத்தினர் பாதுகாப்பான குடிநீரை (குழாய்வழி நீர், குழாய்க் கிணறுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட கிணறுகள்) பெற்றனர். நகரப் பிரதேசங்களில், 90 சதவீதமான குடித்தொகையினர் பாதுகாப்பான குடிநீரை பெற்ற வேளையில், கிராமியத் துறையின் ஏறத்தாழ 57 சதவீதத்தினர் மட்டுமே இவ்வசதியை அனுபவித்தனர். கிராமியக் குடித்தொகையின் உடல்நல நிலைமைகளை முன்னேற்றும் பொருட்டு கிராமியத்துறையில் நீர் வழங்கல் வசதிகளை மேலும் விரிவாக்கும் தேவை வலியுறுத்தப்படுகின்றது. நகரக் குடித்தொகையின் விரிவாக்கம், கிராமியப் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரின் கிடைப்பனவு போதுமானளவு இல்லாமை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் உயர்ந்த வளர்ச்சி என்பன நாட்டில் நீர்வழங்கல் வசதிகளின் அவசரமாக விரிவாக்குவதில் ஈடுபடுவதற்கு அதிகாரசபைகளை நிர்ப்பந்தித்தன. இதன் காரணமாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை ஆய்விற்குரிய ஆண்டில் நீர்வழங்கல் துறையின் மீது ரூ.2,533 மில்லியன் கொண்ட தொகையைச் செலவிட்டது. மொத்த முதலீட்டில், 58 சதவீதம் ப.அ.அமைப்பு, ஆ.அ.வங்கி, கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் மற்றும் கடல் கடந்த அபிவிருத்தி அமைப்புப் போன்ற வெளிநாட்டு மூலங்களிலிருந்து சலுகை நியதிகளில் நிதியிடப்பட்டது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இவ்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட முக்கிய நீர் வழங்கல் திட்டங்கள் மாத்தறை நீர் வழங்கல் திட்டம், நிலம்பே நீர் வழங்கல் திட்டம் நீர் வழங்கல் திட்டம், கொழும்பின் கிழக்கு நகரங்கள் நீர் வழங்கல் திட்டம், உடுநுவர- யட்டிநுவர நீர் வழங்கல் திட்டம், தெரணியகல நீர்வழங்கல் திட்டம், பலப்பிடடிய –

தெமோதர நீர் வழங்கல் திட்டம், உடப்பு நீர் வழங்கல் திட்டம், மற்றும் மரண்டகமுல்ல நீர் வழங்கல் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள 16 நீர் வழங்கல் திட்டங்களின் மீது புத்தாக்க வேலைகளை மேற்கொள்வதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நீர் வழங்கல் மற்றும் சுகாதார செலவுத்திட்டம் 1998 இல் செயற்பாட்டிலிருந்து ஆ.அ.வங்கியினால் நிதியிடப்பட்ட மூன்றாவது நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டம் தனியார்துறை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் கிராமப் புறங்களிலுள்ள அவற்றின் சொந்த நீர் வழங்கல் திட்டங்களை கண்காணிப்பதனையும் முகாமைப்படுத்துவதனையும் வலுவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. களுகங்கையிலிருந்து நீரைப் பெறுவதன் மூலமாக கொழும்பு நீர் வழங்கல் திட்டத்தின் நீர் இயலளவை நாளொன்றிற்கு 6,000 கன மீற்றரினால் உயர்த்துவதற்கான களுகங்கை செயற்றிட்டம் தொடர்பான ஆரம்ப ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதே வேளை கிராமப் பிரதேசங்களில் நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்கும் குறிக்கோளுடன் ப.அ. அமைப்பினால் நிதியிடப்பட்ட சமூக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டமானது கிராம நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டம், பள்ளிக்கூட நீர் வழங்கல் சுகாதாரச் செயற்றிட்டம், மற்றும் சிறிய நகர நீர் வழங்கல் சுகாதார நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல துணை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 1998இலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. சமூக நீர் வழங்கல், சுகாதார செயற்றிட்டம் பதுளை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலுள்ள 2,800 கிராமங்களிலும் 12 சிறிய நகரங்களிலும் வாழுகின்ற 680,000 மக்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

1998இல், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபையின் மொத்த வருமானம் ரூ.2,404 மில்லியனுக்கு 19 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது. வருமானத்தில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு 1998 மாச்சு 1ஆம் நாள் தொடக்கம் நீர் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டமையே பெருமளவு காரணமாகும். இத் தீர்வைத் திருத்தத்தில் வீட்டுத்துறைக்கு பொருந்தத்தக்க தீர்வைகள் 20 - 39 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டன. கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைக்குப் பொருந்தத்தக்க தீர்வை வீதங்கள் குறைந்த வீதமான 9 சதவீதத்தினால் உயர்த்தப்பட்ட வேளையில் சுற்றுலா/விருந்தினர் இல்ல வகைக்கான தீர்வை 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. அதிகரித்த மின்வலுச் செலவு மற்றும் ஊழியர்களின் உயர்வடைந்த ஊதியங்கள் என்பனவற்றின் காரணமாக அதிகரித்த நீர் உற்பத்திச் செலவின் ஒரு பகுதியை மீளப் பெற்றுக் கொள்வதே நீர் தீர்வை அதிகரிப்பின் முதன்மைக் குறிக்கோளாக இருந்தது. தீர்வைத்திருத்தத்தின் இன்னொரு குறிக்கோள் நீர் நுகர்வோரின் வேறுபட்ட வகையினரிடையேயான குறுக்கு உதவு தொகைகளைக் குறைப்பதாக இருந்தது. மேலும் தீர்வைத் திருத்தம் தண்ணீருக்கு ஒரு பொருளாதாரப் பெறுமதியை வழங்குவதன்மூலம் நீரைச் சேமிப்பதற்கு மக்களைத் தூண்டுவதும் வீண் விரையத்தைக் குறைப்பதனையும் உள் நோக்கமாகக் கொண்டிருந்தது. நாட்டின் நீர் வழங்கல்துறைபற்றிய இன்னொரு கரிசனைக்குரிய விடயம் யாதெனில் கவனிக்கப்படாத நீர்க்கசிவுகள், சட்டவிரோத நீர்ப்பாவனை பொது நீர்ப்பாவனை போன்றவற்றின் காரணமாக ஏற்படும் 42 சதவீதம் கொண்ட கணக்கிடப்படாத நீரின் உயர்ந்த விகிதமாகும். விநியோக வலையமைப்பினை சரியான நேரத்திலும் சிறந்த முறையிலும் பேணுவதன் மூலமாக கணக்கிடப்படாத நீரின் விகிதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதொரு மட்டத்திற்கு குறைக்கப்படுமாயின் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை குறிப்பிடத்தக்க இலாபத்தினை அடையக்கூடும். குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட பிரதேசங்களில் பங்கீடு, பேணல் மற்றும் வருமானச் சேகரிப்பு போன்ற விடயங்களில் தனியார்துறையின் பங்கேற்பு இத்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும்.

1998இல் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபையின் தொழிற்பாட்டு மற்றும் பேணல் செலவினம் ரூ.1,952 மில்லியனுக்கு 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இதன்படி, வட்டி மற்றும் வரி என்பனவற்றிற்கு முன்னான வடிகாலமைப்புச் சபையின் தொழிற்பாட்டு மிகை 1997 இன் ரூ.316 மில்லியனுடன் ஒப்பிடுகைளில் ரூ.488 மில்லியனாக விளங்கியது.

### ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பாரிய முதலீட்டைக் கொண்ட மாவட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றாக 1979இல் தொடங்கப்பட்டது. பொருளாதார வாய்ப்புக்களை விரிவாக்கல் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உள்நாட்டு முயற்சிகளை ஊக்குவிக்கவும், உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் சமமான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மாவட்டத்துக்குள்ளேயும், மாவட்டங்களுக்கிடையேயுமான வேறுபாடுகளைக் குறைத்தல் ஆகியவையே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டமானது 1989இலிருந்து தொடங்கப்பட்டு படிப்படியாக

அபிவிருத்தி செய்யப்பட்டு வந்ததுடன் தனியார்துறை பங்குபற்றலை அதிகரிப்பதிலும், பங்குபற்றும் அணுகுமுறையை வலுப்படுத்துவதிலுமே கவனஞ் செலுத்தப்பட்டது. 1997இலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது, கிராமியப் பொருளாதார மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நோக்கி மீளமைக்கப்பட்டதுடன் தொழில்வாய்ப்பு மற்றும் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளிலேயே கூடிய கவனத்தைச் செலுத்தியது.

தற்போது ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது 15 மாவட்டங்களை உள்ளடக்கிய 19 செயற்றிட்டங்களைக் கொண்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் உறப்பட்ட மொத்தச் செலவு 1997இல் செலவு செய்யப்பட்ட ரூ.1,375 மில்லியனுக்கெதிராக 1998இல் ரூ.1,508 மில்லியனாக விளங்கியது. ஊவா மாகாணத்திலுள்ள, பிரதேச அடிப்படையிலான வளர்ச்சி மற்றும் பங்கு நிகழ்ச்சித்திட்டமும் மட்டக்களப்பு மாவட்ட மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டமும் 1998இல் தொடங்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினால் நிதியீட்டப்பட்ட பிரதேச அடிப்படையிலான வளர்ச்சி மற்றும் பங்கு நிகழ்ச்சித் திட்டமானது ரூ.328 மில்லியன்கொண்ட மதிப்பிடப்பட்ட செயற்றிட்டச் செலவைக் கொண்டிருந்ததுடன் ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்கு விரிவடைந்ததாயும் காணப்பட்டது. இச் செயற்றிட்டம் தேசிய மற்றும் மாகாண கூறுகளைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் ரூ.3 மில்லியன் கொண்ட தொகையொன்று இந் நிகழ்ச்சித் திட்டத்துக்குச் செலவழிக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டமானது நோராட் நிறுவனத்தினால் நிதியீட்டப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஆறாண்டு காலப்பகுதிக்கான ரூ.520 மில்லியன் கொண்ட முதலீடொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.53 மில்லியன் கொண்ட தொகை இவ்வாண்டில் செலவழிக்கப்பட்டது.

தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமானது 1998இல் நடைமுறைப்படுத்தலில் தனது எட்டாவது ஆண்டைப் பூர்த்திசெய்திருந்தது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் செலவழிக்கப்பட்ட தொகை ரூ.531 மில்லியனாக விளங்கியதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் உறப்பட்ட மொத்தச் செலவின் மூன்றிலொரு பங்குக்கும் மேலாக வகைகூறியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியீட்டப்பட்ட வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் உறப்பட்ட செலவு ரூ.238 மில்லியனாக விளங்கியது.

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில், சுதந்திரத்திற்குப் பின்னர் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பண்டமாகவோ அல்லது பணமாகவோ வருமான மாற்றல்களைச் செய்வதன் மூலமாக வறியோர்க்கு உதவுவதற்காக பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தின. வசதி குறைந்தோரின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை உயர்த்துவதற்கும் அதே போன்று தொழிலின்மையுடன் தொடர்பான அவர்களின் பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதற்கும் அர்த்தமுள்ள முறையில் நன்மைகளை வழங்குவதன் மூலமாக அவர்களின் பிரச்சனைகளைக் குறைக்கும் பொருட்டு 1995 இல் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி, இதுவரை வேறுபட்ட நிறுவனங்களினால் தொழிற்படுத்தப்பட்ட பெரும்பாலும் அனைத்து சமூக நலத் திட்டங்களும் இச் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1998 இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள நன்மை பெறும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 1,973,183ஆக விளங்கி 1997உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுவோரைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மொத்த எண்ணிக்கையை யதார்த்தமான ஒரு மட்டத்திற்கு கொண்டுவரும் பொருட்டு 1998இல் நடைமுறைப்படுத்திய கொள்கைகளும் தகுதியற்ற குடும்பங்கள் அகற்றப்பட்டமையுமே காரணங்களாகும். இவ் வீழ்ச்சி காணப்பட்டபோதும் குறைந்த வருமானமுடைய தொகுதியிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மொத்தத்தில் 30 - 40 சதவீதமளவிலேயே இருக்க வேண்டுமென மதிப்பிடப்பட்டபோதும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 51 சதவீதத்திற்கு சமுர்த்தி நன்மை பெறுநர்களே இன்னமும் வகை கூறினர். இந்நிலைமை உண்மையில் தகுதியடைய தொகுதியினர் மேம்பட்ட நன்மைகளைப் பெறுவதிலிருந்தும் தடுத்துவிடுவதன் மூலம் குழு நிகழ்ச்சித்திட்டத்தின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

கடந்த நான்காண்டுகளில், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் பாரிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமாக வளர்ச்சியடைந்து பரந்தளவிலான நடவடிக்கைகளைக் கையாளுகிறது. இது இப்பொழுது சாதாரணமான தொரு வருமான மாற்றல் திட்டத்திலிருந்து வங்கித் தொழில், காப்புறுதி, சேமிப்புக்கள், பயிற்சி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சுயதொழில் வாய்ப்பு என்பனவற்றை உள்ளடக்கிய மிகக் கூடியளவில் அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு மாற்றமடைந்துள்ளது. கொள்கை உருவாக்கம், மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிதத்ல், கண்காணித்தல் மற்றும் பெறுபேறுகளை அளவீடு செய்தல்

என்பனவற்றிற்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிறுவன ரீதியான வரைச்சட்டமொன்று ஏற்படுத்தப்பட்டது. சமுர்த்தி, இளைஞர் அலுவல்கள் விளையாட்டுத்துறைஅமைச்சு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கொள்கை உருவாக்கல்களுக்கு முக்கிய பொறுப்பாக உள்ளது. வறுமை நிவாரணத் திணைக்களம், இலங்கை சமுர்த்தி மேலாண்மைச்சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாணயத்தின் திணைக்களம் ஆகிய ஏனைய மூன்று நிறுவனங்களும் சமுர்த்தி, இளைஞர் அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்புரையின் கீழ் தேசிய மட்டத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளன. மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட சமுர்த்தி அலுவலகங்கள், பிரதேச செயலகங்களிலுள்ள சமுர்த்தி அலுவலகங்கள் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது மூன்றாவது நடைமுறைப்படுத்தல் கிளைகளாக தொழிற்பட்டன. சமுர்த்தி முகாமையாளரின் கீழ் தொழிற்படும் சமுர்த்தி வலய அலுவலகங்கள் நிறுவன ரீதியான அமைப்பின் நான்காவது மட்டமாகும். கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தொழிற்படுகின்ற சமுர்த்தி பணிக்குழுக்கள் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஐந்தாவது மட்ட தொழிற்பாடாக செயற்படுகிறது.

வறுமை நிவாரண திணைக்களம் நன்மை பெறுநர்களை அடையாளம் காண்பதற்கும், நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு அட்டைகள் வழங்குவதற்கும் பொறுப்பாக இருந்தது. வறுமை நிவாரணத் திணைக்களம் வட மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. வட மாகாணத்தில் வவுனியா தெற்குப்பிரதேச செயலகப்பிரிவில் மட்டுமே இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவு 1998இல் ரூ.8,168 மில்லியனாக அமைந்து 1997 உடன் ஒப்பிடுகையில் 21 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்மை பெறும் குடும்பங்களில் மிக மோசமான வறுமைக்குட் பட்டவர்கள் எனக் கருதப்பட்ட ஏறத்தாழ ஒரு சதவீதமானோர் மாதாந்தம் ரூ.1,000 இனைப் பெறுகின்ற வேளையில் மற்றொரு 45 சதவீதத்தினர் அல்லது 896,783 குடும்பங்கள் மாதாந்தம் ரூ.500இனைப் பெற்றனர். மேலும் குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மற்றொரு 323,710 குடும்பங்கள் ரூ.200இனை மாதாந்தம் பெற்ற வேளையில் 216,445 குடும்பங்கள் மாதாந்தம் ரூ.100இனைப் பெற்றனர். அதேவேளை முன்னைய சனசவிய நன்மை பெறுநர்களையும் உள்ளடக்கிய 521,886 குடும்பங்கள் மாதாந்தப் படியாக ரூ.250 இனைப் பெற்றனர். 1998இல் வறுமை ஒழிப்புத் திணைக்களமும் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு ரூ.1,260 மில்லியன் செலவில் உலருணவுப்பங்கீட்டு அட்டைகளை தொடர்ந்தும் வழங்கிய வேளையில் ஊட்டச்சத்துபடி நிகழ்ச்சித் திட்டத்தின்படி ரூ.75 மில்லியன் பெறுமதியான 78,430 ஊட்டச்சத்து அட்டைகள் பங்கீடு செய்யப்பட்டன.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினை பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக மனித மூலவள அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றிற்கு சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் அடிப்படையில் பொறுப்பாக இருந்தது. மேலும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை நடைமுறைப்படுத்தல், குடும்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை தொடங்குதல், சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தி நகழ்ச்சித் திட்டங்கள் அதேபோன்று சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் என்பன சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் பொறுப்பாக இருந்தது. 1998இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் 13,560 கிராம சேவையாளர் பிரிவுகளில் 21,257 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது 6,667 நிரந்தர சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களையும் 841 நிரந்தர வேளாண்மை ஊக்குவிப்பாளர்களையும் உள்ளடக்கியிருந்தது. நன்மை பெறுநர்கள் அவர்களது அவசர சமூகக் கடப்பாடுகள் தொடர்பான செலவுகளை சமாளிப்பதற்கு உதவும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் தொழிற்பாடு களை சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1998இல் 80,675 கோரல்கள் தொடர்பாக ரூ.212 மில்லியன் கொண்ட மொத்தத் தொகை செலுத்தப்பட்டது. 1998இல் தொடங்கப்பட்ட புதிய சமுர்த்தி மக்கள் செயற்றிட்ட நிகழ்ச்சித் திட்டம் 1,536 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்த வேளையில், 1998 இறுதியில் ஏற்பட்ட செலவினம் ரூ.199 மில்லியனாகக் காணப்பட்டது. வேளாண்மை உற்பத்தியையும் வறியோரின் வருமான மட்டத்தினையும் உயர்த்தும் பொருட்டு தொடர்பான பிரதேசங்களில் மேம்பட்ட நீர்ப்பாசன வசதிகளினூடாக வேளாண்மைத்துறையில் தொழில் வாய்ப்பினை உருவாக்குவதனையே புதிய சமுர்த்தி மக்கள் செயற்றிட்ட நிகழ்ச்சித் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

இலங்கை சமுர்த்தி மேலாண்மைச்சபையின் முக்கிய நடவடிக்கைகளிடையே சமூக அமைப்புக்களை யும் மனித மூலவளங்களையும் அபிவிருத்தி செய்வது

காணப்பட்டது. இதற்கேற்றால் போல் சமூர்த்தி தன்மை பெறுவோர்களுக்காக கட்டாய சேமிப்புத் திட்டம் சுயவிருப்பு சேமிப்பு நிகழ்ச்சித் திட்டம் என்ற இருவகை சேமிப்புக்கள் தொடர்பான அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. கட்டாய சேமிப்பு திட்டத்தின் கீழ் மாதாந்தம் ரூ.1,000 இனையும் ரூ.500இனையும் முறையே பெறும் நன்மை பெறுநர்கள் முறையே ரூ.200இனையும் ரூ.100இனையும் சேமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இத் திட்டத்தின் கீழான மொத்தச் சேமிப்புக்கள் 1998இறுதியில் ரூ.3,818 மில்லியனுக்கு 40 சதவீதத்தினால் அதிகரித்தன. மறுபுறத்தில் அடிமட்டத்திலுள்ள சிறிய தொகுதியினூடாக சமூர்த்தி நன்மை பெறுநர்களைச் சேமிக்கத் தூண்டுவதனை நோக்கமாகக் கொண்ட சுயவிருப்பு சேமிப்புத் திட்டமாகும். 1998இறுதியில் சுயவிருப்புச் சேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.407 மில்லியன் கொண்ட மொத்தத் தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

குறைந்த வருமானத் தொகுதியினரின் நன்மைகளுக்காக சிறிய அளவு கிராமிய உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற நோக்கத்தினைக் கொண்ட கிராமிய சனசமூக செயற்றிட்ட நிகழ்ச்சித் திட்டம் 1998 இலும் தொடர்ந்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1998 இல் ரூ.350 மில்லியன் செலவில் 6,045 செயற்றிட்டங்கள் அமுலாக்கத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்டன. மேலும் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தற்பொழுது 8 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. சிறு கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூர்த்தி நன்மை பெறும் குடும்பங்கள் அவர்களது வருமான மட்டங்களை மேம்படுததிக் கொள்ளும் நோக்குடன் சிறு கைத்தொழில்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்குத் தேவையான மூலதன நிதியும் சந்தைப்படுத்தல் வசதிகளும் வழங்கப்பட்டன. 1998 செத்தெம்பர் இறுதியில் ஏறத்தாழ 311 ஆட்கள் இச்சிறிய கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்ததுடன் ரூ. 8 மில்லியன் கொண்ட தொகை கடனாக வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை சமூர்த்தி மேலாண்மைச் சபையின் கீழ் சமூர்த்தி வங்கித்தொழில் சங்கங்களின் அமைப்பு தொடர்ந்தும் தொழிற்பட்டது. இவ் வங்கித் தொழில் சங்கங்களின் நோக்கம் வறியோர்க்கு வங்கித் தொழில் நடைமுறைகள் பற்றி அறிவூட்டல், அவர்களிடையே சேமிப்புக்களை ஊக்குவித்தல், அதிகரித்த முதலீடுகளூடாக வருமான மட்டங்களை மேம்படுத்தல் தேவையான ஆதரவுப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மூலமாக அவர்களின் உற்பத்தி இயலளவினை வலுப்படுத்தல் என்பனவாகும். 1998இறுதியில் 639,106 உறுப்பினர் தொகையுடன் சமூர்த்தி வங்கித் தொழிற் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 517ஆக விளங்கியது. 1998இறுதியில் வைப்புக்களின் தொகை ரூ.457 மில்லியன்களாக இருந்தது. மேலும் சமூர்த்தி வங்கித் தொழில் சங்கங்கள் வேளாண்மை, மீன்பிடி போன்ற செயற்றிட்டங்களை மேற் கொள்வதற்காக ரூ. 237 மில்லியன் கொண்ட கொடுகடனை 68,300 உறுப்பினர்களுக்கு வழங்கின. சமூர்த்தி வங்கித் தொழில் சங்கங்களின் அமைப்பு குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த வைப்புத் தொகைகளும் சமூர்த்திப் பெறுநர்களின் தீவிரமான பங்கேற்புமே காரணமாகும். இம் முன்னேற்றத்திற்கு அரசினால் வழங்கப்பட்ட குறிப்பாக உள்கட்டமைப்பு வசதிகளினூடாக வழங்கப்பட்ட உதவிகளே பெருமளவிற்கு துணையாக அமைந்தன. இவ்வசதிகளை அகற்றுவது இத் திட்டங்களை ஆற்றலற்றதாக்குமாகையால் இவ்வமைப்பினை வலுப்படுத்துவதற்காக சமூர்த்தி வங்கித் தொழில் சங்கங்கள் இவ்வசதிகளை பொறுப்பேற்க வேண்டியிருக்கும். மேலும் சாத்தியமான நிதியியல் தொடர்பான தவறான முகாமைத்துவத்தினை தவிர்க்கும் பொருட்டு போதுமான கணக்காய்வு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

அதே வேளை சமூர்த்தி நன்மை பெறுநர்கள் புதிதாக தொடங்கவும் ஏற்கனவேயுள்ள அவர்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்தவும் உதவும் பொருட்டு இலங்கை சமூர்த்தி மேலாண்மைச் சபையினால் சமூர்த்தி அபிவிருத்தி கொடுகடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.1998 செத்தெம்பர் இறுதியில் சமூர்த்திக் குடும்பங்களிலுள்ள 76,270 துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ரூ.449 மில்லியன் கொண்ட மொத்தத் தொகை வழங்கப்பட்டது. இக் கடன்கள் ஆகக்கூடிய 2 ஆண்டுகள் மீள்கொடுப்பனவுக் காலத்துடன் ஆண்டிற்கு 10 சதவீதமான சலுகை வட்டி வீதத்தினைக் கொண்டனவாகும். இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் ஒத்துழைப்புடன் சமூர்த்தி தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி கொடுகடன் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் யாதெனில் சமூர்த்தி நன்மை பெறுநர்கள் சுய தொழில் வாய்ப்பிற்காகவும் தொழில்முயற்சியை அபிவிருத்தி செய்வதற்காகவும் நிதிகளைத் திரட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதேயாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் 1998 ஒகத்து இறுதியில் ரூ.96 மில்லியன் கொண்ட மொத்தக்கடனை வழங்கியுள்ளன. சமூர்த்தி தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி கொடுகடன் திட்டத்தின் கீழ் ஆகக் கூடிய கடன் தொகை ரூ.50,000 ஆகக் காணப்பட்ட வேளையில் வட்டிவீதம் 10 சதவீதமாக இருந்தது. உருவாக்கப்பட்ட வருமானத்தைப் பொறுத்து இக்கடன் 3 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

1998இல் சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மொத்தச் செலவினம் ரூ.7,963 மில்லியனாக இருந்தது. மேலும் சமுர்த்தி வழிகாட்டிகளுக்கான சம்பளமாக ரூ.420 மில்லியன் கொண்ட தொகை உறப்பட்ட வேளையில் 1998இல் நிகழ்ச்சித் திட்டத்தின் முலதனச் செலவினம் ரூ.780 மில்லியன்களாக இருந்தது.

## 5.9 சூழல்

பொருளாதார வளர்ச்சி, தொழில் வாய்ப்பும் விலைகளும் போன்ற பேரண்டப் பொருளாதார மாறிலிகளுக்கும் சூழலுக்குமிடையேயான முக்கியமான தொடர்பானது, கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் அண்மைக் காலங்களில் அதிகரித்த அளவில் உணரப்பட்டுள்ளது. சூழலின் தரத்திலும்பார்க்க வெளியீட்டினை மக்கள் அதிகமாக மதிப்பிடக் கூடியதான குறைந்த வருமான மட்டங்களிலும்கூட இலங்கையானது, சூழலைப் பாதுகாப்பதற்கு சார்பு ரீதியில் வலுவான சட்ட மற்றும் நிறுவன ரீதியான வரைச் சட்ட அமைப்பினை நிறுவக்கூடியதாகவும் நாட்டின் இயற்கை மூலவள அமைப்பினை திறமையான முறையில் முகாமை செய்யக் கூடியதாகவும் இருந்தது. 1980இல் தேசிய சூழல் சட்டம் வரையப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து, 1981இல் சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கென மத்திய சூழல் மேலாண்மைச் சபை நிறுவப்பட்டது. மேலும், தேசிய மட்டத்தில் சூழல் நடவடிக்கைகளை இணைத்தல், உறுதியான அபிவிருத்தியை அடையும் நோக்கில் தேசிய சூழல் கொள்கைகளை வகுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக சூழலுக்கான அமைச்சொன்று 1990இல் நிறுவப்பட்டது. இதன்படி, நிலமும் நீரும், காடும் உயிரினப் பெருக்கமும் கரையோர மற்றும் கடல் மூலவளங்கள், கைத்தொழில் மற்றும் நகரப் பகுதி மாசடைதல் மற்றும் வலுவும் கனிப்பொருள்களும் ஆகிய துறைகள் தொடர்பான விடயங்களையும், அவசியமான கொள்கைத் தலையீடுகளையும் இனங்காண்பதற்காக தேசிய சூழல் செயற்பாட்டுத் திட்டமொன்றை அமைச்சு 1994இல் தயாரித்ததுடன் 1998இல் அதனை நிறைவு செய்தது. தற்போது, மாநகரத்திலுள்ள திண்மக் கழிவுகளை அகற்றுதல், நகரக் காற்று மாசடைதல், காடழித்தல் மற்றும் நீர் மாசடைதல் ஆகிய உடனடியான கவனிப்பை வேண்டிநிற்கும் விடயங்களிலேயே கடுமையான சூழல் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

1998இல், சூழலை முன்னேற்றுவதற்காக காடாக்கல் மற்றும் சூழல் அமைச்சினால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அமைச்சானது உரிய அனைத்துப் பங்குதாரர்களினதும் ஆலோசனையுடன் தேசிய சூழல் செயற்பாட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ததுடன் ஒரு தொகுதியான விதந்துரைப்புக்களையும் மேற்கொண்டது. விடயங்களை ஆய்வுசெய்யவும், குறிப்பிட்ட விதந்துரைப்புக்களை மேற்கொள்ளவுமென பல கொள்கை ஆய்வுகள் இவ்வாண்டில் பொறுப்பேற்கப்பட்டன. தேசிய சூழல் செயற்பாட்டுத் திட்டத்திலும் கொள்கை ஆய்வுகளிலும் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களை மேலும் மீளாய்வு செய்வதற்காக, சூழல் மற்றும் சூழற்கொள்கை முகாமை தொடர்பில் எட்டுக் குழுக்கள் நிறுவப்பட்டன. இக்குழுக்கள் மறுபுறத்தில், சூழல் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளை ஒருங்கிணைத்தல் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சானது உலக மயமாக்கலின் சூழல் மீதான தாக்கத்தையும், உலகளாவிய மற்றும் பிரதேச உடன்படிக்கைகள், மரபு வரி மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றிலிருந்து எழும் ஏனைய கடப்பாடுகளையும் ஆய்வு செய்வதற்கான செயல் முறையையும் தொடங்கியது. உள்நாட்டு மட்டத்தில், திண்மக்கழிவு முகாமைத்துவ உத்திகளை விருத்தி செய்வதற்காக அமைச்சு தொடர்ந்தும் உள்நாட்டு மேலாண்மைச் சபைகளுக்கு உதவி வழங்கியது. மகரகம பிரதேச சபைப் பகுதியில் நோராட் நிறுவனத்தின் நிதியுடன் கூட்டு உயிரியல் வாயு உற்பத்திச் செயற்றிட்டமொன்று தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு அப்பால் செல்லுவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அவற்றை அகற்றுதல் தொடர்பான பாசில் உடன்படிக்கையையும் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஓசோனைக் குறைக்கும் மூலகங்களின் பயன்பாட்டை நீக்குவதை நோக்கமாகக் கொண்ட மொன்றியல் ஒப்பந்தத்தையும் அமைச்சு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.

அதேவேளையில், ஆய்வின் கீழான ஆண்டில் மத்திய சூழல் மேலாண்மைச் சபையானது 32 சூழல் தாக்க மதிப்பீடுகளையும் 32 ஆரம்ப சூழல் மதிப்பீடுகளையும் செய்முறைப்படுத்தியதுடன் 11 சூழல் தாக்க மதிப்பீடுகளுக்கும் 7 ஆரம்ப சூழல் மதிப்பீடுகளுக்கும் ஒப்புதலளித்தது. மத்திய சூழல் மேலாண்மைச் சபையானது, ஆரம்ப சூழல் மதிப்பீட்டின் செய்முறையை விரைவுபடுத்துவதற்காக தேசிய சூழல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளது. இவ்வுத்தேச திருத்தத்தில், ஆரம்ப சூழல் மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் கருத்துத் தெரிவிப்பதற்காக வழங்கப்பட்ட 30 நாள் கொண்ட காலப்பகுதியை நீக்குவதன்மூலம் இது அடையப்படும். எனினும், செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் தெளிவான தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்காக பொதுமக்கள் கருத்துத் தெரிவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காலப்பகுதியை நீக்குவதிலும் பார்க்க குறைத்துக் கொள்ளுதல் சிறந்ததாகக் கருதப்படலாம்.

அதேவேளையில், மத்திய சூழல் மேலாண்மைச்சபை, 1998இல் 194 புதிய சூழல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கியதுடன் 370 சூழல் பாதுகாப்பு உரிமங்களைப் புதுப்பித்தது. ஒப்பிடுகையில், 1997இல் இவை முறையே 163ஆகவும் 309ஆகவும் விளங்கியிருந்தன. கழிவுகள் காற்றிலுள்ள தூசி மற்றும் கைத்தொழில்களினால் ஏற்படும் இரைச்சல்கள் ஆகியவற்றைத் தொடர்ந்தும் கண்காணித்ததுடன் 1997இன் 219இற்கு எதிராக 354 கைத்தொழில் கழிவு மாதிரிகளை ஆய்வுசெய்திருந்தன. மேலும், சீதாவக்க கைத்தொழிற் பேட்டை அபிவிருத்திச் செயற்றிட்டம், கெரவலப்பிட்டியிலுள்ள திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதி முனைக்கோடிச் செயற்றிட்டம், குருலே கங்கை நீர் மின்வலுச் செயற்றிட்டம், அலுபொத்தவிலுள்ள ஆரோக்கிய காணி நிரப்புச் செயற்றிட்டம் ஆகியவற்றை மத்திய சூழல் மேலாண்மைச் சபை 1998இல் கண்காணித்தது. சூழவுள்ள காற்றுத் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டமும் நாட்டிலுள்ள முக்கிய நீர் நிறுவனங்கள் ஆகியவற்றின் கண்காணிப்பும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. அதேவேளையில், மத்திய சூழல் மேலாண்மைச் சபையானது சூழல் தொடர்பான பிரச்சினைகள் பற்றி பொதுமக்களிடமிருந்து 1,221 முறைப்பாடுகளைப் பெற்றன. இவற்றுள் 461 முறைப்பாடுகளுக்கான நடவடிக்கைகள் மத்திய சூழல் மேலாண்மைச்சபையினால் மேற்கொள்ளப்பட்டன. மிகுதியானவற்றுக்கு அந்தந்த உள்ளூராட்சி மேலாண்மைச் சபைகளினதும் ஏனைய பொருத்தமான அமைப்புக்களினதும் கருத்துக்கள் கோரப்பட்டன. மேலும் மத்திய சூழல் மேலாண்மைச்சபையானது உள்ளூராட்சி மேலாண்மைச் சபைகளின் 100 அலுவலர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதிலும், கைத்தொழிலுக்கான இடங்களைத் தெரிவதிலும் பயிற்சியை வழங்கியது. 1998இல் மத்திய சூழல் மேலாண்மைச் சபையினால் சூழல் பற்றிய தெரிநிலை, மாறும் போக்குகள் மற்றும் அபிவிருத்தித் தேர்ச்சி குறிப்பாக பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கிடையிலானவற்றை அதிகரிப்பதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.